உ
சிவமயம்



# சிந்தாமணி நாதம்



பண்டிதர் அ.நாகலிங்கம்

அவர்களின் பக்தி இலக்கியங்கள்

வெளியீடு :

திரு.ச.அம்மையப்பர் குடும்பத்தினர்

15-01-2018

10/4/2018

உ
கணபதி துணை
சிவமயம்

# சிந்தாமணி நாதம்

அராலியூர்ப் பண்டிதர்
அம்பலவாணர் நாகலிங்கம் அவர்கள்
இயற்றிய பக்தி இலக்கியங்கள்

வெளியீடு :

திரு.ச.அம்மையப்பர் குடும்பத்தினர்
ஏவிளம்பி வருடம் தைத்திங்கள் இரண்டாம் நாள்
15-01-2018

## நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | சிந்தாமணி நாதம் |
| நூலாசிரியர் | : | பண்டிதர் அ.நாகலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) |
| வெளியீடு | : | திரு.ச.அம்மையப்பர் குடும்பத்தினர் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) வடக்கு வீடு, அராலி தெற்கு. |
| செவ்வை பார்த்தவர் | : | திரு.கணேசமங்களமூர்த்தி M.A (தமிழ் ஆசிரியர்) மு/மாங்குளம் ம.வி. |
| வெளியிடும் தினம் | : | சிந்தாமணிப்பிள்ளையார் இரதோற்சவம் 2018, ஏவிளம்பி வருடம், தைத்திங்கள் இரண்டாம் நாள் (15.01.2018) |
| அட்டை வடிவமைப்பு | : | பா.ராஜேஷ்கண்ணா, இணுவில். |
| அச்சு வடிவமைப்பு | : | M.R.S பிறிண்டேர்ஸ், அராலி. |
| மொத்தப் பக்கங்கள் | : | xx + 171 |
| மொத்தப் பிரதிகள் | : | 500 |
| உரிமை | : | திரு.ச.அம்மையப்பர் குடும்பத்தினர் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) வடக்கு வீடு, அராலி தெற்கு. |

உ

சிவமயம்

**சிந்தாமணி விநாயகர் தேவஸ்தான**

**பிரதம சிவாச்சாரியார் குகவல்லபேஸ்வரக் குருக்கள்**

**அவர்கள் வழங்கிய**

# ஆசியுரை

எல்லாம் வல்ல சிந்தாமணிப் பெருமானுடைய பெருங் கருணைத் திறத்தினாலே பண்டிதர் நாகலிங்கம் அவர்கள் பாடிய இலக்கியங்கள் "சிந்தாமணி நாதம்" என்னும் பெயரிலே வெளிவருகின்றன.

மார்க்கண்டு ஐயா என எங்கள் எல்லோராலும் அழைக் கப்பட்ட பண்டிதர் அராலி வடக்கு வீட்டில் நீண்ட காலம் இருந்த தமிழ் அறிஞர். கொக்குவில் இந்துக் கல்லூரியில் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியராக இருந்தாலும் தமிழ் மொழி மீது மிகுந்த பற்றும் புலமையும் உடையவர். இன்றும் அவர் இயற்றிய ஊஞ்சற் பாடல்கள்தான் சிந்தாமணி விநாயகர் திருவூஞ்சலில் அமரும்போது பாடப்படுகின்றன.

தனது குல தெய்வமான அராலி சிந்தாமணி விநாயகர் மாட்டும் வண்ணை நீராவியடி விநாயகர் மாட்டும் மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அருகில் உள்ள கிருபாகர சுவாமி கோயில், அராலி அகாயக்குளம் விநாயகர், கரைப்பிட்டி விநாயகர் எனப்பல ஆலயங்களிலும் இருக்கும் இறைவனைப் பல பதிகங்கள் வாயிலாக பாடித் தொழுதிருக்கின்றார். அவை அனைத்தும் தொகுத்து வெளியிடப்படுகின்றன.

இப்புனித பணியில் இறங்கிய வடக்கு வீட்டார் திருமதி.அ.கையிலாசபிள்ளை அம்மா குடும்பத்தினருக்கும், திரு.ச.அம்மையப்பர் ஆசிரியர் குடும்பத்தினருக்கும் எனது நல்லாசிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

"லோக சமஸ்ரா துதிநோபவந்து"

சுபம்

| | |
|---|---|
| **அராலி தெற்கு,** | **பிரம்மஸ்ரீ குக.வல்லபேஸ்வரக் குருக்கள்** |
| **அராலி.** | **பிரதம சிவாச்சாரியார், சிந்தாமணி விநாயகர் ஆலயம்.** |

உ

சிவமயம்

# முன்னுரை

எங்கள் குடும்பப் பெரியவர் அமரர் அ.நாகலிங்கம் அவர்கள் எழுதிய பக்தி இலக்கியங்களைத் தொகுத்து சிந்தாமணி நாதம் எனப் பெயரிட்டு வெளியிடுவதில் மகிழ்ச்சி யடைகின்றேன்.

இருபதாம் நூற்றாண்டில் இருந்த பெருங்கவி வாணர் களுள் ஒருவர்தான் அ.நாகலிங்கம் அவர்கள். ஆனால் அவர் தன்னை ஒருபோதும் வெளியில் அடையாளப்படுத்திய தில்லை. அவரின் இலக்கியங்கள் சிலவற்றை கொக்குவில் புதுக் கோயில் நிர்வாகத்தினர் வெளியிட்டிருந்தனர். சிலவற்றை நீராவியடி ஜெயவீரகத்தி விநாயகர் தேவஸ்தான எமது உறவினர்கள் வெளியிட்டிருந்தனர். சிலவற்றைத் தொகுத்து நாங்கள் வெளியிட்டிருந்தோம். பல இலக்கியங்கள் அச்சு வாகனம் ஏற்றப்படாது கையெழுத்துப் பிரதிகளாக இருந்தன.

எமது அன்பிற்குரிய தம்பி க.மங்களமூர்த்தி யாழ்ப் பாணப் பல்கலைக்கழக தமிழில் முதுகலைமாணிப் பட்டத்திற் காக எமது பண்டிதர் தொடர்பாக ஆய்வை எழுதி எம்மிடம் தந்தபோது அவருடைய முழு இலக்கியங்களையும் தொகுத்து வெளியிட வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. இதனால் அவர் பாடிய அனைத்து இலக்கியங்களையும் தொகுத்து இம் மலராக வெளியிடுகின்றோம்.

இம்மலர் வெளிவர முழுமையாக ஒத்துழைத்த அனைவருக்கும் மற்றும் ***M.R.S*** பதிப்பகத்தார் மற்றும் ஆசியுரை வழங்கிய சிவாச்சாரியார் அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

நன்றி.

**வடக்கு வீடு,**
**அராலி தெற்கு,**
**அராலி.**

**திரு.ச.அம்மையப்பர்**
**குடும்பத்தினர்,**
**(ஓய்வு பெற்ற ஆசிரியர்)**

உ

சிவமயம்

# அணிந்துரை

அராலியிலே நீண்ட காலமாக தமிழ்ப்புலமை மிக்க அறிஞர்கள் இருந்து வந்திருக்கிறார்கள். யாழ்ப்பாண மன்னர் களின் அவைக்களத்தில் இரகுவம்சம் என்ற பெருங்காப்பி யத்தை அரங்கேற்றிய அரசகேசரியும் அவர் கிளையினரும் அராலி யிலே வந்து குடியேறினர். இதன் தொடர்ச்சியாகவே கி.பி. 16ஆம் நூற்றாண்டில் இராமலிங்க முனிவரின் தோற்றமும் வாக்கிய பஞ்சாங்க வெளியீடும் அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இராமலிங்க முனிவர் அருணாசலம்பிள்ளை, சந்திர சேகர சாஸ்திரிகள், விசுவநாத ஐயர் எனப் பலர் அராலியில் இருந்த தமிழ்ப் புலவர்கள். இவர்களின் இலக்கிய முயற்சிகள் ஆலயங்களைச் சார்ந்தவையாக காணப்படுகின்றன. அராலி மேற்கு வண்ணப்புரம் விசுவநாதர் ஆலயம், அராலி அகாயக்குளம் பிள்ளையார், அராலி ஆவரம் பிட்டி முத்துமாரி அம்பாள், அராலி கரைப்பிட்டி விநாயகர், அராலி சிந்தாமணி விநாயகர் ஆலயம் முதலிய ஆலயங்கள் பலராலும் பாடப் பட்டிருக்கின்றன. இவற்றுள் வண்ணப்புரம் விசுவநாதர் கோயிலும், அராலி சிந்தமாணி விநாயகர் ஆலய மும் அதிகூடிய பாடல்கள் பெற்ற ஸ்தலங்களாக விளங்கு கின்றன.

சிந்தாமணி விநாயகர் மாட்டு பாடப்பட்ட பிரபந்தங் களைத் தொகுத்து எனது தமிழ் முதுகலைமாணிப் பட்டத்திற்காக (M.A) ஆய்வு செய்ய வேண்டும் என்ற எனது

பேரவாவினால் உந்தப்பட்டு அவற்றைத் தேடித் தொகுத்த போது பண்டிதர் அ.நாகலிங்கம் அவர்கள் பாடியவை என்ற குறிப்போடு வேறும் பல இலக்கியங்கள் எனது கைகளுக்குக் கிடைத்தன.

நீராவியடி ஜெயவீரகத்தி பிள்ளையார் ஆலயம், கொக்குவில் கிருபாகர சுவாமி ஆலயம், புதுக்கோயில் வேணுகோபாலர் ஊஞ்சல் எனப் பெயரிட்டு இலக்கியங்கள் இருப்பதை அறிந்து அவற்றையும் எடுத்துக்கொண்டு அவரது இல்லத்தில் கையெழுத்துப் பிரதிகளாக எழுதப்பட்ட இலக்கியங்களையும் எடுத்து தனித்தனியே ஆராய்ந்து பார்த்து இம் மலர் தொகுக்கப்பட்டுள்ளது.

இவருடைய இலக்கியங்களைத் தொகுத்து நோக்கும் இடத்து தமிழ்ப் பிரபந்த மரபைக் கைவிடாது அதற்கமைய பாடி இருக்கின்றார். பிரபந்தம் என்பது வடமொழிச் சொல் "இறுக்கமாகக் கட்டுதல்" என தமிழில் பொருள்படும். பிரபந்தம் என்பதற்கு வரைவிலக்கணம் பிரபந்த மரபியல், பிரபந்த தீபிகை, பன்னிருபாட்டியல், வெண்பாப் பாட்டியல், சிதம்பரப்பாட்டியல் முதலிய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"ஆலப்பிரபஞ்சம் போலாகிய தொண்ணூற்றாறு
கோலப் பிரபந்தங்கள் கொண்ட பிரான்"

எனவரும் சிவந்தெழுந்த பல்லவராஜன் உலாவிலேயே முதன்முதல் பிரபந்தம் என்ற சொற்பிரயோகம் கையாளப்பட்டு உள்ளது. இப்பிரபந்த மரபு தென் இந்தியாவிலும் ஈழத்திலும் நன்றாக வழக்கில் இருந்து வந்துள்ளது. இதற்கமையவே பண்டிதர் அ.நாகலிங்கம் அவர்கள் பல பிரபந்தங்களைப் பாடி இருக்கின்றார்.

பிரபந்த இலக்கியங்களைத் தெளிவாகக் குறிப்பிடும் பன்னிரு பாட்டியல் முதலான இலக்கண நூல்களை வரன் முறையாகக் கற்றுத்தேறி, அவற்றில் சொல்லப்பட்ட இலக்கண முறைகளுக்கு மாறாது இலக்கியப் படைப்புக்களைத் தந் துள்ளார். பிரபந்தங்களின் இலக்கணங்களைக் கற்பது என்பது சாதாரண விடயமல்ல. இலக்கியத்தின் இலக்கணமும் அவ் இலக்கியத்தில் இடம்பெறும் செய்யுட்களின் இலக்கணமும் ஒருங்கே கற்றுத் தேறித்தான் பிரபந்தங்களைப் பாட முடியும்.

இவர் பாடிய பிரபந்தங்களில் வரும் பாடல்கள் பல்வேறு யாப்புக்களிலும் பாடப்பட்டுள்ளன. வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரியப்பா, விருத்தப்பா, முதலிய பல யாப்புக்களையும் கையாண்டுள்ளார். வெண்பா பெரும் பாலும் நேரிசை வெண்பாவாகப் பாடப்பட்டுள்ளது. ஒரு பாடல் வகை மாதிரிக்காக.

"உத்தமன் னெங்களுதரானுறை தரும்
அத்த னழகியனானந்தன் - நித்தலுமே
மேவினரைத் தாங்கும் விநாயகனே யென்றென்றும்
தீவினை யேற்குற்ற துணை.

(சிந்-இரட்டைமணி.7)

வெண்பாவைப் போல விருத்தப்பாவிலும் ஆசிரியப் பாவிலும் கவிபாடும் வல்லமை கொண்டவர். மும்மணிக் கோவை, நான்மணி மாலை என்பவற்றை இவர் பாடும் இடத்து விருத்தப்பாவையும், ஆசிரியப் பாவையும் திறம்படக் கையாண்டு உள்ளார். ஆசிரிய விருத்தம் என்ற யாப்பை பல்வேறு வழிகளிலும் கையாண்டு பாடியிருக்கின்றார். அறுசீர்

கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், எண்சீர், பதின்சீர், பன்னிருசீர், பதின்னான்கு சீர், எனப் பல நெடிலடி ஆசிரிய விருத்தங்களைக் கையாண்டு பாடி இருக்கின்றார்.

20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எமது ஊரில் இருந்த பண்டிதர் அவர்களின் இலக்கிய முயற்சிகள் போற்றப் பட வேண்டியவை. பழமையும் புதுமையும் கலந்த இவரது இலக்கியங்கள் இன்று முழுமையாக நூலுருப் பெற்று வருவது சிந்தாமணி விநாயகரின் திருவருள் என வணங்கி இப்பணியைச் செய்யும் பண்டிதரின் குடும்பத்தார் எல்லாச் செல்வங்க ளோடும் நீண்ட வாழ்வு வாழ விநாயகப் பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

நன்றி.

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

| | |
|---|---|
| **"பண்டிதமணி வாசா"** | **சைவசித்தாந்த பண்டிதர்** |
| **அகாயக்குளப்பதி,** | **அராலியூர்** |
| **அராலி தெற்கு.** | **கணேச மங்களமூர்த்தி M.A** |
| | **தமிழ் ஆசிரியர்,** |
| | **முல்/மாங்குளம் ம.வி.** |

# பொருளடக்கம்


I. ஆசியுரை

முன்னுரை

அணிந்துரை

II. அம்பலவாணர் நாகலிங்கம்

அவர்களின் வாழ்க்கை வரலாறு XIV - XX

1. சிந்தாமணி விநாயகர் பதிகங்கள்

i. திருவூஞ்சல் 01

ii. திருப்பள்ளி எழுச்சி 07

iii. இரட்டைமணி மாலை 10

iv. சிந்தாமணி விநாயகர் பஞ்சகம் 14

v. நாகேஸ்வரி அம்மை துதி 18

vi. மும்மணிக்கோவை 21

vii. நான்மணி மாலை 28

viii. சிந்தாமணி விநாயர் சதகம் 37

ix. திருப்பல்லாண்டு 52

2. அராலி அகாயக்குளம் விநாயகர்

மும்மணிக்கோவை 54

3. அராலி கருணாகரைப்பிட்டி விநாயகர்

நான்மணி மாலை 61

4. வண்ணை நீராவியடி ஜெய நீராவி வீரகத்தி விநாயகர்

i. வீரகத்தி விநாயகர் துதி 69

ii. வீரகத்தி விநாயகர் திருவூஞ்சல் 71

iii. திருவிரட்டை மணிமாலை 77

iv. நான்மணி மாலை 80

v. அட்டகமாலை 89

vi. திருப்பள்ளி எழுச்சி 92

5. கொக்குவில் புதுக்கோயில் கிருபாகர சுவாமி

i. சித்தி விநாயகர் இரட்டை மணிமாலை 95

ii. அந்தாதி 99

iii. கந்தன் கலம்பகமாலை 114

iv. தாண்டகப் பத்து 128

v. வேலன் பாட்டு 131

vi. சிந்தியற் பத்து 134

vii. குறட் பத்து 136

viii. சைவ உரன் 137

ix. தேவ பாணி 139

x. சிவசுப்பிரமணிய சுவாமி திருவிரட்டை மணிமாலை 140

xi. வேணுகோபாலர் திருவூஞ்சல் 143

xii. கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி பஞ்சகம் 149

| | | |
|---|---|---|
| 6. | சிவபெருமான் மும்மணிக்கோவை | 150 |
| 7. | அடியார் கூட்டம் | 156 |
| 8. | நெஞ்சை நோக்கி | 158 |
| 9. | திருமுறை வணக்கம் | 159 |
| 10. | சுதந்திரம் பெறத் தகுந்த வழி | 160 |
| 11. | மழை வேண்டல் | 163 |
| 12. | தனிப் பாடல்கள் | 164 |
| 13. | குறட்பத்து | 167 |
| 14. | அராலி சரஸ்வதி ம.வி பாடசாலைக் கீதம் | 168 |
| 15. | கொக்குவில் இந்துக் கல்லூரி பாடசாலைக் கீதம் | 169 |


பிற்சேர்க்கை


| | | |
|---|---|---|
| i. | குமாரசூரிய உபாத்தியாயர் பாடிய சிறப்புப் பதிகங்கள் | 172 |
| ii. | நாகேஸ்வரி அம்பிகை மீது கணேசமங்களமூர்த்தி சொல்லிய திருவூஞ்சல் | 183 |

உ

கணபதி துணை

# திரு.அம்பலவாணர் நாகலிங்கம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

**மலர்வு :-**

திரு.நாகலிங்கம் அவர்கள் 1902ஆம் ஆண்டு வைகாசி மாதம் 2ஆம் திகதி பிறந்தார். (02.05.1902) தந்தையார் அருணாசலம் அம்பலவாணர், அராலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தாயார் அவ்வூர் விசுவநாதர் மகள் சிதம்பரநாச்சி. பெற்றோருக்கு இவர் இரண்டாவது மகன். நாகலிங்கம் என்ற பெயர் இருந்தாலும் "மார்க்கண்டு" என்ற பெயராலே இவர் அழைக்கப்பட்டார்.

**கல்வி :-**

ஆரம்பக் கல்வியைத் தாயாருடன் இருந்து, அராலியில் உள்ள கிராமப் பாடசாலையிலும், பின்னர் நீராவியடியில் பெரிய தந்தையார் திரு.தில்லையம் பலம் அவர்களுடன் வாழ்ந்து, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும், பின்பு கொழும்பு மாநகரில் சிறிய தந்தையர்களான திருவாளர்கள் செல்லப்பா, கந்தையா ஆகியோருடன் வசித்து ஆனந்தாக் கல்லூரியிலும் தமது உயர் கல்வியை நிறைவு செய்தார். 'Cambridge Senior' பரீட்சையிலும் சித்தியடைந்த பின் 'Teacher's Certificate' பரீட்சையிலும் சித்தியடைந்தார்.

சிறிய தந்தை திரு.செல்லப்பா அவர்களிடம் வீட்டிலே பயின்று "பால பண்டிதர்" பரீட்சையிலும் சித்தியடைந்தார்.

**ஆசிரியப் பணி :-**

ஆட்டுப்பட்டித் தெருவில் இருந்த கொழும்பு மத்திய கல்லூரியில் சிறிது காலம் ஆசிரியராகக் கடமை ஆற்றினார். பின்னர் யாழ்ப்பாணம் வந்து, வட்டுக்கோட்டை சைவாங்கில வித்தியாசாலையில் (தற்போதைய வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி) மூன்று வருடங்கள் ஆசிரியராகப் பணி புரிந்த பின், கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு மாற்றம் பெற்றுச் சென்று இளைப்பாறும் வரை அங்கு கற்பித்தார். இருபத்தைந்து வருடங்கள் அங்கு சேவை செய்து பாராட்டுப் பெற்ற ஆசிரியர் இவர்.

**புலமை :-**

**தலைசிறந்த ஆசிரியர்.** கணிதம், தமிழ்ப் பாடங்களை உயர் வகுப்பு மாணவர் கொள்வகை அறிந்து, அவர் உளம் கொளக் கொடுக்கும் தன்மையர். காலமும் இடமும் அறிந்து, தெய்வம் வாழ்த்தி, உரைக்கப்படும் பொருள் உள்ளத்து அமைத்து, விரும்பி முகமலர்ந்து பாடங்களைக் கற்பிப்பார். மாணவர்களும் சித்திரப் பாவையென அடக்க ஒடுக்கமாக இருந்து செவி வாயாக நெஞ்சுகளனாகக், கேட்டவை விடாது உரைத்து இருத்துவர். இவர் மாணவர்கள் நீதிபதி, வைத்தியர், பொறியியலாளர், ஆசிரியர், எழுதுவினைஞர் போன்ற பல்வேறு துறை களிலும் சிறப்புற்று விளங்குவது ஆச்சரியமானது ஒன்று அல்லவே.

**கடமையே கண்ணாக வாழ்ந்தவர்.** மாணவர் நலன் கருதி பாடசாலை முடிந்த பின்னரும் நின்று மாணவர் சந்தேகங்களையும் கஷ்டங்களையும் போக்குவார். கொக்குவில் இந்துக் கல்லூரியின் புற வேலைகளிலும் ஈடுபட்டு, மாணவர்களின் வளர்ச்சிக்கு உறுதுணை யாக இருந்தார். கல்லூரி நிர்வாக விடயங்களிலும் அவர் அதிபர்

கட்கும் சக ஆசிரியர்கட்கும் உதவியாக இருந்தார். 1961ஆம் ஆண்டில் ஆசிரியப் பதவியில் இருந்து ஓய்வு பெற்றார்.

**சிறந்த அறிவாளி.** இலைமறை காய் போல் வாழ்ந்தார். தானாகப் படித்துப் பெற்ற அறிவு. சம காலத்தில் வாழ்ந்த அறிஞர்களுக்குச் சளைத்தவர் அல்லர். சுய விளம்பரம் இன்றி வாழ்ந்து பழக்கப்பட்டவர். ஐயாசாமிக் குருக்களிடம் சங்கீதமும் கற்றவர். சமய அறிவு மிக ஆழ மாக உடையவர். தேவார திருவாசகத்துடன் பன்னிரு திருமுறை களைத் தினமும் ஓதி வழிபடும் இயல்பினர்.

**முரண்பாடு இல்லாத அனுபூதிமான்.** சரியானதையே முறை யாகச் சொல்லும் இயல்பினர். அவர்கள் கேளாதவிடத்து அதற்காகத் தன் அபிப்பிராயங்களைத் திணிக்கவும் மாட்டார். பெரிய சிறிய தந்தை யர்களிடம் பெற்ற நிரம்பிய ஞானம் உள்ளவர்.

**திருமணம் :**

1926இல் நீராவியடி பூலோகமுதலியார் பரம்பரையில் சம்பந்தநாத முதலியார் இராமநாதரின் சிரேஷ்ட புதல்வி சத்தியபாமாவைத் திருமணம் புரிந்தார். மக்கட் செல்வம் கிட்டவில்லை.

**இந்திய யாத்திரை :**

பலமுறை இந்திய யாத்திரை மேற்கொண்டுள்ளார். சிறிய தந்தை யர்களான திரு.செல்லப்பா, திரு.விசுவநாதன் ஆகியோருடன் சென்று சிதம்பர தரிசனம் கண்டு புண்ணிய தீர்த்தங்களாடி மீண்டார். திரு. செல்லப்பா அவர்களுடன் சுமார் எட்டு மாத காலம் காசியில் தங்கி, கங்கையில் நீராடி, காசி விசுவநாதரையும், காசி விசாலாட்சி அம்மை யாரையும் வழிபடும் பேறு பெற்றார்.

கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர்களுடன் இமயமலையில் 13,000 அடி உயரத்தில் உள்ள "அமர்நாத்" சென்று பனிக்கட்டியால் உருவாகும் சிவலிங்கத்தைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றார். பனிக் கட்டியால் உருவாகும் இலிங்கம் அமாவாசை அன்று உருப்பெற ஆரம்பித்து பௌர்ணமியில் முழுவதும் ஆகும். கணேசர், பார்வதி, பைரவர் உருவங்களும் பனிக்கட்டியினால் ஏற்பட்டவை.

**உடன்பிறப்பு :**

தமயனார் திரு.வயித்திலிங்கம் நில புலன்களை மேற்பார்வை செய்தார். 1959இல் காலமானார். இவரது ஒரே மகன் இரகுநாத முதலியார். தம்பியார் பண்டிதர் சிற்றம்பலம் B.A. கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் ஆசிரியராகவும் பின்னர் இலங்கைப் பரீட்சைத் திணைக் களத்தில் மொழி பெயர்ப்பாளராகவும் கடமை ஆற்றினார். 1952இல் அகால மரணமடைந்தார். இவர் கொழும்பு விவேகானந்த சபை, திருக் கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபை ஆகியவற்றில் பணியாற்றி உள்ளார். இவருக்குச் சிவகாமசுந்தரி, யாழ்மொழி, பார்வதி என மூன்று புத்திரிகள்.

**தோத்திரப் பாடல்கள் :**

சைவக் குடும்பத்தில் பிறந்து, சைவச் சூழலில் வளர்ந்து, தெய்வ பக்தி உள்ளமெங்கும் ஆக்கிரமித்து இருந்தமையால், பக்திச்சுவை சொட்டச் சொட்டக் கவிபாடும், அதுவும் இலக்கண வழு ஏற்படாது செய்யுள் இயற்றும் ஆற்றல் பெற்றிருந்தார்.

இவர் பிறந்த பதி அராலி. சிந்தாமணி விநாயகர் இவரது குல தெய்வம். இவர் திருமணம் செய்து வாழ்ந்தது நீராவி ஸ்ரீஜெயவீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன பரம்பரையினரின் நீராவியடி. திருமண உறவாலும், பெரிய தந்தையார் வழியாலும், கனிந்த குலதெய்வமான

நீராவி ஸ்ரீஜெய வீரகத்தி விநாயகப் பெருமான் மீது ஆறாக் காதல் உடையவர். அவ்வீரகத்திப் பெருமான் மீது, வீரகத்தி விநாயகர் துதி - திருவிரட்டை மணிமாலை - அட்டகமாலை - திருப்பள்ளியெழுச்சி - எச்சரீக்கை - லாலி - பராக்கு - மங்களம் என்னும் தோத்திரப் பாடல் களை இயற்றியுள்ளார். இவை யாவும் 1989 ஆம் ஆண்டுக் கும்பாபிஷேக மலரில் வெளிவந்துள்ளன.

இவர் நெடுங் காலம் பணியாற்றிய கொக்குவில் இந்துக் கல்லூரி யின் அருகில் உள்ள கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் (புதுக்கோயில்) முருகன் பேரில், அவ்வூரைச் சேர்ந்தவர்களும், இவரது மாணவர்களுமாகிய திரு.செ.இரத்தினப் பிரகாசம் அவர்களதும் அவர்களது சகோதரர்களினதும் வேண்டுகோளின்படி பல தோத்திரப் பாடல்கள் பாடியுள்ளார். அக்கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள வேணுகோபாலன் (சந்தான கோபாலன்) மீது, திருவூஞ்சற்பாடல் களும் இயற்றியுள்ளார். இது தனி நூலாக வெளிவந்துள்ளது. ஏனையவை அக்கோயில் நிர்வாகத்தினர் வெளியிட்ட "தேர்த்திருப் பணி மலர்" 1983 சித்திரத் தேர்ச் சிறப்பிதழ் மலர் - 1984 ஆகியவற்றில் வெளிவந்துள்ளன. சில பாடல்கள் "குகநேசன்" என்னும் புனை பெயரில் வந்துள்ளன.

உடல்நிலை தளர்வுற்றிருந்த பிற்காலத்தில், இறைபக்தி மிக்க செய்யுள் இயற்றும் பணியில், இறைவனே இவரை ஈடுபடுத்தினார்.

"இரவு நேரங்களில் நித்திரை வருவதில்லை. எமது குல தெய்வமான "உதரான்பதி சிந்தாமணி விநாயகர்" பெயரில் ஊஞ்சல் பாட வேண்டும் என்னும் ஆசை தோன்றியது. யாப்பிலக்கணம் கற்று அறுபது ஆண்டுகட்கு மேலாகி விட்டன. முயன்று பார்த்தும் பாடல்கள் வரவில்லை. அழுகைதான் வந்தது. விநாயகப் பெருமானிடமே இது

பற்றி முறையிட்டுக் கண்ணயர்ந்து விட்டேன். சிறிது நேரத்தில் கண் விழித்தேன். பாடலும் வந்தது .................. இப் பாடல்களைப் பாட வேண்டும் என்ற எண்ணத்தையும், அதற்கான அறிவையும், வலிமை யையும் தந்த விநாயகப் பெருமான் திருவருளை மனம், மொழி, மெய் களால் வழுத்துகின்றேன்" என்ற இவரது கூற்று இந்த எண்ணத்தை வலுப்படுத்துகின்றது.

தமது குலதெய்வமான உதரான் பதியில் உவந்து உறையும் சிந்தாமணி விநாயகர் பேரில் திருவூஞ்சல், எச்சரீக்கை, பராக்கு, லாலி, மங்களம், திருப்பள்ளியெழுச்சி, இரட்டை மணிமாலை, பஞ்சகம், நெஞ்சறிவுறுத்தல், நித்திய வேண்டுகோள், சிந்தாமணி விநாய தரிசனம் என்பனவும் உதரான் பதி நாகேஸ்வரி பேரில் துதியும் பாடியுள்ளார்.

இவரது பாடல்களைக் கொக்குவில் இந்துக் கல்லூரி முன்னை நாள் ஆசிரியரும், இலங்கைக் கல்விச் சேவையின் பிரதான கல்வி அதிகாரியாய்ப் பணியாற்றியும், "சைவநெறி" பாடநூற் சபையில் உறுப்பினராக இருந்தும் ஓய்வு பெற்ற அன்பருமான திரு.செ.வேலாயுத பிள்ளை அவர்கள் விதந்து பாராட்டியும், செப்பஞ் செய்தும் கொடுத் துள்ளார்.

**உதிர்வு :**

இறுதிக் காலத்தில் தமது ஒன்றுவிட்ட சகோதரர் திரு.கயிலாயர் சுப்பிரமணியம் என்பவரின் மகள் சிதம்பரவல்லியின் குடும்பத்தின ருடன் அராலியில் வசித்து வந்தார். 23-09-1989ல் சிவதம் அடைந்தார். பக்தி சுவை நனி சொட்டும் இவரது பாடல்கள் இறைவனுக்கு மாலை யாக அமைந்து அணி செய்கின்றன.

## சிந்தாமணி விநாயகர் மீது பாடப்பட்ட முதலாவது திருப்பதிகம்

"சிந்தாமணி நிதி தந்தாசலம் விண்டயங்கு பொருள்
நந்தாமணி யுறவும் பெறலாம் திருவும் பெறலாம்
உந்தாமணி யிலுதறனுறையு மெந்நாகமுக
சிந்தாமணியை யுளந்தானுற வைத்திரு நெஞ்சமே"

இந்நூலாசிரியரின் முன்னோரான ஆசையர் என்று அழைக்கப்பட்ட ஒருவர் கவிபாடும் ஆற்றல் மிக்கவர். அவர் சிந்தாமணி விநாயகர் மீது தோத்திரப் பாக்கள் பாடியுள்ள தாகவும் தெரிகின்றது. ஆயினும் அவை கிடைக்கவில்லை. கிடைத்ததில் ஒரு பாடலே மேலே உள்ளது.

உ

சிவமயம்

# அராலி உதரான் பதியமர்
# சிந்தாமணி விநாயகர்
# திருவூஞ்சல்

திருச்சிற்றம்பலம்

**காப்பு**

நிறை புனல்சேர் வயல்சூழ நடுவண் மேவி
நிலையெனவே யுதரானி லமருஞ் சோதி
கறை நிலவு முளவழுக்கைக் கழுவு மாற்றாற்
கருணை மழை பொழிமுகிலே கணேச மூர்த்தி
மறைமுறையின் வழுவாத முனிவோர் தங்கண்
மனநிறைவே மதவேழ முகனே யுன்னை
நிறை தமிழி னிசையூஞ்ச னேர்ந்து பாட
நினதருளு மெனதுளத்து நிறைவ தாமே.

**காப்பு**

திருமுறைகள் முந்நான்குங் கால்க ளாகத்
திருந்தியசாத் திரமீரேழ் விட்ட மாகப்
பெருகியவன் பினரன்பே கயிற தாகப்
பேசரிய வவருளமே பலகை யாகப்
பிரிவரிய பிரணவமே பீட மாகப்
பிறங்கியவூஞ் சலின்மீதே யேறி யெந்தை
திருநிறைசிந் தாமணியே யாடீ ரூஞ்சல்
சிறந்தசைந்து விநாயகரே யாடீ ரூஞ்சல். 1

வாரிலங்கு முமைமடவாள் வடந்தொட் டாட்ட
வாணியவள் வாழ்த்தெடுத்தே யாசி கூறச்
சீரிலங்கு திருமகள்மங் கலங்கள் சேர்க்கச்
சேடியர்கள் பல்லாண்டு பாடிப் போற்ற

ஏரிலங்கு வல்லபையா ளிடப்பால் மேவ
எழிலுடனே யமர்ந்திருந்து கருணை காட்டுஞ்
சீரியசிந் தாமணியே யாடீ ரூஞ்சல்
சிறந்தசைந்து விநாயகரே யாடீ ரூஞ்சல். 2

கலைமதியுங் கதிரவனுங் கவிகை தாங்கக்
கறங்குவளி கதிரொளிச்சா மரையி ரட்ட
அலைபுனலின் வருணனுமே பனிநீர் தூவ
அங்கியொளி தாங்குறுதீ வர்த்தி யேற்ற
மலைநிதியின் கிழவனெழிற் படிக மேந்த
மருமலரால் வழிபடுவோ ருள்ளந் தோறு
நிலையுறுசிந் தாமணியே யாடீ ரூஞ்சல்
நெடிதசைந்து விநாயகரே யாடீ ரூஞ்சல். 3

கொன்றைவே ணியருமையாள் கூர்ந்து நோக்கக்
குடிலைபிடி களிறுபுணர் வடிவ மாக
நன்றதனி லுருவான நால்வா யைங்கை
நலம் பெருக்கு நல்யானை முகனே நம்பீ
குன்றனைய குணசீலர் குறியாங் கோவே
குறையாத காதலுறு மன்ப ரன்பில்
ஒன்றியசிந் தாமணியே யாடீ ரூஞ்சல்
ஓங்கார விநாயகரே யாடீ ரூஞ்சல். 4

தம்பழைய வினையகலச் சார்ந்து நின்று
தலைக்குவித்த கையினராய்க் கண்ணீர் மல்கிக்
கம்பிதமெய் யடையவுடல் புளக மேவிக்
கணபதியே யெமைக்காப்பா யென்று போற்றி
விம்மியிடு மடியவர்க்கு வரங்க ளீந்து
மேவுதெய்வ சிகாமணியே பாரோர் விண்ணோர்
கும்பிடுசிந் தாமணியே யாடீ ரூஞ்சல்
குளிர்ந்தசைந்து விநாயகரே யாடீ ரூஞ்சல். 5

புகர்முகத்துப் போரவுணன் மாய வாட்டிப்
புலவரிடர் போயகல வாழ்வு கூட்டி
நிகரிலவ்வை பூசனைக்கு நேயங் கொண்டு
நீள்கயிலை சேர்வதற்குப் புழைக்கை நீட்டிப்
பகரரிய வேலவனை வள்ளி மேவப்
பன்னரிய வேழத்தி னுருவு காட்டும்
நிகரில்சிந் தாமணியே யாடீ ரூஞ்சல்
நெடி தசைந்து விநாயகரே யாடீ ரூஞ்சல். 6

சேயொளிய சடையாட மகுட மாடச்
சிறந்தவிரு குண்டலங்கள் காதி லாடப்
பாயொளிய மணிமார்பிற் பூணூ லாடப்
படரொளிசேர் முத்துவட மாலை யாடத்
தூயவரை மிசையுடுத்த பட்டு மாடத்
துணைவியராம் வல்லபையார் தோன்றி யாட
நாயகசிந் தாமணியே யாடீ ரூஞ்சல்
நயந்தசைந்து விநாயகரே யாடீ ரூஞ்சல். 7

கன்றைநினைந் தணையவரு பசுவே போலக்
கதறியழு மடியருழைக் கடிது சென்று
பொன்ற வரு மிடரனைத்தும் போக்கி வீடாம்
புகலரிய நிலையளிக்கும் புனித நாதா
தென்றல்தவ முதரானைச் சென்று சேர்ந்து
தெளிவுற்ற வுள்ளத்தார் சிறந்த சிந்தை
ஒன்றியசிந் தாமணியே யாடீ ரூஞ்சல்
உவந்தசைந்து விநாயகரே யாடீ ரூஞ்சல். 8

ஊரிலுளா ரொற்றுமையா யுயர்க வென்றும்
உழவுதொழில் வளம்பலவு மோங்க வென்றும்
மாரிவளங் குன்றாமற் சுரக்க வென்றும்
மன்னுதமிழ் சைவநெறி தழைக்க வென்றும்

போரியலார் புன்றொழில்க ளொழிக வென்றும்
பொல்லாங்கும் வன்செயலும் போக வென்றும்
ஈரியசிந் தாமணியே யாடீ ரூஞ்சல்
ஈசனருள் விநாயகரே யாடீ ரூஞ்சல். 9

மாதுமைக்கு மகனாரே யாடீ ரூஞ்சல்
மங்கலமா யுள்ளவரே யாடீ ரூஞ்சல்
தீது கெடக் காப்பவரே யாடீ ரூஞ்சல்
திருவாழ்வு தருபவரே யாடீ ரூஞ்சல்
ஓதுமறைக் குட்பொருளே யாடீ ரூஞ்சல்
உதரானை யுகந்தவரே யாடீ ரூஞ்சல்
சீதமதிக் குடையவரே யாடீ ரூஞ்சல்
சித்திதரும் விநாயகரே யாடீ ரூஞ்சல். 10

## வாழி

அந்தணரோ டானினங்கள் வாழி வாழி
அருமறையு மாகமமும் வாழி வாழி
செந்தமிழின் நிறம் வாழி தேவர் வாழி
சிறந்து சைவ நெறி வாழி சீலம் வாழி
ஐந்தெழுத்துந் திருமுறையீ ராறும் வாழி
அரசரது செங்கோலும் மழையும் வாழி
தந்திமுகன் றிருவூஞ்சற் றமிழும் வாழி
சார்ந்துசரா சரங்களெலாந் தழைத்து வாழி

## எச்சரீக்கை

| | |
|---|---|
| ஒளியார் தரு முதரானுறை யொருவா | எச்சரிக்கை |
| களியார்தரு கணநாயக கதியே | எச்சரிக்கை |
| சிந்தாமணிப் பெருமான்சிவ குமரா | எச்சரிக்கை |
| நந்தாதொளிர் ஞானச்சுடர் விளக்கே | எச்சரிக்கை |
| பாலொத்திடு மொழிவல்லபை பங்கா | எச்சரிக்கை |
| சீலத்தவர் சிந்தித்தெழு செம்மால் | எச்சரிக்கை |
| அன்பர்க்குறு மிடர்கள்கெட வருள்வாய் | எச்சரிக்கை |
| இன்புற்றவ ருள்ளத்துணர் வானாய் | எச்சரிக்கை |
| ஓமென்றம ரொருதாரக வுருவே | எச்சரிக்கை |
| சாமன்றுரை செய்யத்தகு தலைவா | எச்சரிக்கை |
| ஆளாவுல கெல்லாமுடை யாதீ | எச்சரிக்கை |
| மீளாநெறி தந்தேயருள் விமலா | எச்சரிக்கை |

## பராக்கு

| | |
|---|---|
| அத்திமுக வாவமல மணியே | பராக்கு |
| சித்திதரு சிந்தைநிறை தேவே | பராக்கு |
| நித்தமுத ரானுறையு நிமலா | பராக்கு |
| முத்திமுத லேமுழுது முடையாய் | பராக்கு |
| அருணனி சுரந்தருளு மமலா | பராக்கு |
| இருள்கெடச் சுடர்ந்திலங்கு மிறையே | பராக்கு |
| விக்கின விநாயக விகிர்தா | பராக்கு |
| நெக்குணர் பவர்க்கருளு நேயா | பராக்கு |
| வல்லபை மருவிவளர் மார்பா | பராக்கு |
| சொல்லுறு பொருளதாய்த் துலங்குவாய் | பராக்கு |
| குறுமுனிதன் கரகநீர் கவிழ்த்தாய் | பராக்கு |
| பெறலரிய பெருந்தகைப் பேறே | பராக்கு |

## லாலி

லாலி லாலி லாலி லாலி லாலி லாலி
மேலுறை தேவர்தந் தேவே லாலி லாலி
ஆனை முகவா அம்பிகை பாலா லாலி
தேனே யமுதே கரும்பின் தெளிவே லாலி
ஆகு வாகனா அந்தமி லாதாய் லாலி
நாக மசைத்த நாத முடிவே லாலி
உதரா னுறையு மொருதனிப் பொருளே லாலி
மதவா ரணனே மங்கல ரூபா லாலி
சிந்தா மணியே சிவனார் மகனே லாலி
எந்தா யெம்மா னெழிலா ரிறைவாக லாலி
அருமறை தேடி யறிதற் கரியாய் லாலி
மருவிடும் வல்லபை மணாளா லாலி லாலி.

## மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் சய சய
மங்களம் மங்களம் மங்களம்
பிரணவத்தின் வடிவதான பிள்ளையார்க்கு மங்களம்
சரவணற்கு முன்னுதித்த தத்துவர்க்கு மங்களம்
உள்ளுவார்தம் முள்ளிருக்கு முண்மையற்கு மங்களம்
வள்ளல்சிந்தா மணியவற்கும் வல்லபைக்கும் மங்களம்
ஆகுவூர்தி கொண்டவர்க்கும் அன்பருக்கும் மங்களம்
மாகமீது முகில் பொழிந்து வளஞ்சிறக்க வையகம்
நீதியாக நெறிபுரிந்து நிலையினிற்க மன்னவன்
தீதுபோகச் செல்வம்மல்கச் செழித்துவாழ்க வையகம்
மங்களம் மங்களம் மங்களம் சய சய
மங்களம் மங்களம் மங்களம்

# சிந்தாமணி விநாயகர்
## திருப்பள்ளி எழுச்சி

திருச்சிற்றம்பலம்

இரவிவந் தெழுந்தன ளிருங்கடல் மீதே
இருளகன் றெழுந்தது விரவிய தொளியும்
இரவின னேங்கினன் றன்னொளி மழுங்கி
எழிலுறு தாரகை யிரித்தன வோடி
அரவிந்த மலர்ந்தன விலஞ்சிக டோறும்
அரகர சிவசிவ வெனுமொலி மலிந்த
விரிமலர் பொதுளுத ரான்பதி மேய
விநாயக னேபள்ளி எழுந்தருளாயே. 1

கொக்கரக் கோவெனக் கூவின கோழி
குயிலினங் கூவின குளிர்புனந் தோறும்
தக்கைகள் சல்லரி சங்கின மார்த்த
தந்திமு கன்றிரு முன்றில்க டோறும்
அக்கினி புனிதன தாலய மணிகள்
அசைந்தன ஓமெனு மின்னிசை யோங்க
விக்கினந் தீருத ரான்பதி மேய
விநாயக னேபள்ளி எழுந்தருளாயே. 2

மதுமல ருன்னிய வண்டின மெல்லாம்
மலர்த்தடம் பலபல தேடின நாடி
புதுமலர் மணங்கமழ் பொய்கைக டோறும்
பூவையர் பூம்புன லாடினர் போந்தார்
நதியென வாழ்விது நங்களைக் காவாய்
நம்பர மாவென நவிலுநல் லன்பர்
விதிமுறை போற்றுத ரான்பதி மேய
விநாயக னேபள்ளி எழுந்தருளாயே. 3

பொன்னினன் பொன்னொளி பூசினன் போந்தான்
பூம்பொழில் பொன்னொளி பரப்பின வெங்கும்
கன்னியர் கவினுறு கலம்பல கொண்டு
கங்கையை நாடினர் களிநடம் புரிந்து
துன்னினர் வயலிடைத் துப்புடை யுழவர்
தூயதந் தொழில்பல வாற்றினர் சூழ்ந்து
மின்னொளி காலுத ரான்பதி மேய
விநாயக னேபள்ளி யெழுந்தருளாயே 4

ஆடின சிறைவிரித் தணிமயி லெங்கும்
அழகொடு தம்மொழி பேசின கிள்ளை
பாடின புள்ளினம் பருவர னீங்கிப்
பறந்தன பார்புனம் பலவிரை தேரத்
தேடின தீனிகள் சிற்றெறும் போடித்
தீங்குசெய் விலங்கினஞ் சேர்விடஞ் சேர்ந்த
வீடிகந் தருளுத ரான்பதி மேய
விநாயக னேபள்ளி யெழுந்தரு ளாயே. 5

ஆவின மணியணி யாகவே கூடி
ஆற்றின தகன்கரை யடைந்தன வொன்றி
மானினங் குதிகொண்டு மகிழ்ந்தன கானில்
மரையினம் பயமில மேய்ந்தன பசும்புல்
தேனின முரன்றன தேன்மிக மாந்தித்
தெய்வதம் பராவினர் சேல்விழி யாரும்
மீனென வெண்மலர் விள்ளுத ரான்சேர்
விநாயக னேபள்ளி யெழுந்தருளாயே. 6

தம்பத தில்லையுறத் தாழுத ரொருபாற்
றரைமிசை வீழ்ந்துநெஞ் சழிபவ ரொருபாற்
கம்பித மெய்யுறக் கரைபவ ரொருபாற்
கவின் பெறுமாலைகள் கட்டுந ரொருபாற்

தும்பித காவெனத் தொழுதழு தேத்திக்
துணையுனை யலதிலந் துளங்கின மென்றே
விம்மி நின்றிறைஞ்சுத ரான்பதி மேய
விநாயக னேபள்ளி எழுந்தருளாயே. 7

புண்ணியர் நின்கழல் போற்றிநின் றேத்திப்
புக்கனர் நின்னடி ஞாலநன் னீழல்
நண்ணலர் நாடக வாழ்க்கையுட் சிக்கி
நயக்கிலர் நின்னருட் குளிர்நிழல் நாடார்
மண்ணவர் மதித்திடு மனமணி விளக்கே
மாதவர் போற்றிடு மலைமிசை மருந்தே
விண்ணவர் போற்றுத ரான்பதி மேய
விநாயக னேபள்ளி எளுந்தருளாயே. 8

செய்வினைப் பயனென மனமறு கிடுவோர்
சீரிய ரவர்மனத் திண்மையிற் சோர்வோர்
உய்வினை யொன்றுள துள்ளம தொருக்கி
ஒளிபுனல் புகைகொடுன் னிருமலர்த் தாட்கீழ்க்
கைவினை செயலெனக் கழறினர் பெரியார்
கருவொடு துயர்கெடும் வழியுமற் றிதுவே
மெய்வினை செய்யுந ரேத்துத ரான்சேர்
விநாயக னேபள்ளி யெழுந்தரு ளாயே. 9

அன்பருக் கருடர வாகுவை யூர்ந்தாய்
அறுவகைச் சமயங்கட் கப்புறத்தானே
பொன்பொலி முடியுனை பூரணப் பொருளே
போற்றின ரிறைஞ்சினர் பூண்டனர் தாளே
நன்பல மறையவர் ஞானியர் பல்லோர்
நான்மறை தேடியு நாடாரு நம்பீ
மின்பயி லும்முத ரான்பதி மேய
விநாயக னேபள்ளி யெழுந்தரு ளாயே. 10

திருச்சிற்றம்பலம்.

# சிந்தாமணி விநாயகர்
# இரட்டைமணிமாலை

திருச்சிற்றம்பலம்

### நேரிசை வெண்பா

நீர்மேவு நெல்வயல்சூழ் நீடுதரா னற்பதியை
நார்மேவு சிந்தையொடு நண்ணியே - சீர் மேவும்
சிந்தா மணியே யெனவழுத்தி யேத்தினால்
நந்தாதோ நந்தம் வினை. 1

### கட்டளைக்கலித்துறை

வினைப்பய னென்றேங்கி வெந்து மறுக லொழி நெஞ்சமே
மனக்கினி யானை யுதரா னுறையு மறைப் பொருளை
நினைப்பவ ருள்ள நிறைந்துநின் றனை நினைவொருக்கி
மனத்தினில் வைப்பாய் மயக்க மொழிவை மகிழ்சிறந்தே 2

### நேரிசை வெண்பா

தேனெனத் தித்திக்குந் தெய்வ வருட்கடலே
வானோ ரிடர்தீர்க்கும் வள்ளலே - ஊனுகும்
இவ்வுடலம் வேண்டே னிபமுகத் தெந்தையே
பவ்வவினை நீக்கியெனை யாள். 3

### கட்டளைக்கலித்துறை

ஆள்வது மென்றுகொ லானை முகவா வடியனையும்
ஊழ்வினை வந்தே யொ'றுக்க வறிவு மயங்குகின்றேன்
தூள்பட நூறி யவுணனை யன்று தொலைத்தொழித்தாய்
மாள்வது திண்ண மெனைநீ யளியா தொளிந்திடினே. 4

### நேரிசை வெண்பா

ஒளியாகி யுள்ளே யொளிரு மொருவ
களியார் கரும்பே கனியே - தெளிகின்ற

சிந்தை நிறைதிருவே சீரியனே யென்னுடைய
பந்தங் களைந்திடுவ தென்று. 5

### கட்டளைக் கலித்துறை

என்று முனக்கே யடியே னடிமை யிபமுகனே
நன்றொடு தீது நமக்கிலை யெல்லா நின்செயலே
பொன்றிலென் வாழ்ந்து களிக்கிலென்போகம் புணர்ந்து நின்றே
ஒன்றிய சிந்தையி லுன்கழல் கொண்டன னுத்தமனே. 6

### நேரிசை வெண்பா

உத்தம னெங்க ளுதரா னுறை தரும்
அத்த னழகிய னானந்தன் - நித்தலுமே
மேவினரைத் தாங்கும் விநாயகனே யென்றென்றும்
தீவினையேற் குற்ற துணை. 7

### கட்டளைக் கலித்துறை

துணையலர் தந்தைதாய் மக்களே தார மினையரெல்லாம்
அணைய வருவரோ வந்தகன் வந்தெமை யண்ணிடுநாள்
இணையி லுதரா னமர்தரு மண்ணல்சிந் தாமணியைப்
புணையெனக் கொண்டவர் போக்குவ ரிந்த யம பயமே. 8

### நேரிசை வெண்பா

பயமெமக் கேது பதியுத ரானிற்
சுயமுகற் காய்ந்த கணேசன் - சயம் பெறவே
சார்ந்திருந்தான் சற்சனர்க்காய்த் தண்ணளிசெய் தெஞ்ஞான்றும்
பேர்ந்திடுமோ வுள்ளம் பிரிந்து. 9

### கட்டளைக் கலித்துறை

துள்ளு மறியா மனத்தின் றுடுக்கை யடக்கவல்லோர்
அள்ளிப் பருகு முதரா னமர்தரு மானைமுகன்
கள்ளப் புலன்களை வாட்டி யளித்த கருணைமழை
வெள்ளத்தி னீந்திக் குளித்துத் திளைக்கின்ற தென்னுளமே. 10

### நேரிசை வெண்பா

உள்ளங் கசிந்துருக வோடுமெ னன்புவெள்ளம்
பள்ள வுதரானிற் பாய்ந்தோட - வள்ளலவர்
சிந்தா மணியார் சிறந்து பொழிகருணை
வந்தாரு முள்ளத் துளே. 11

### கட்டளைக் கலித்துறை

உள்ள முருக வொருகா லுன் னாமத்தை யோதுகிலார்
வெள்ளம் பெருக விழிநீர் வடித்து விதிர்விதிர்க்கார்
கள்ளமே செய்து கருதுவர் பற்பல கால மெல்லாம்
வள்ளல் விநாயக வந்துனைச் சேர்வது மெங்ஙனமே. 12

### நேரிசை வெண்பா

எங்குந் திருவடி யெங்கள் விநாயக
எங்குமே யுன்றன் திருவுருவம் - இங்கிதனைக்
கண்டிட வல்லார்யார் காத லடியார்கள்
அண்டியே காண்பா ரறிந்து. 13

### கட்டளைக் கலித்துறை

அறிந்தா னறிவிக்க வானை முகவன் பிரிந்து நின்றான்
செறிந்தானே யெங்கு மியக்கி யெவையும் செயற்படுத்தச்
செறிந்தும் பிரிந்துஞ் செலுத்தி யுடனாகி நின்றிடுவான்
நிறைந்த கருணை யுடன்பிரி யானந்த நின்மலனே. 14

### நேரிசை வெண்பா

நின்மலனாய் நிர்க்குணனாய் நித்தியனாம் நிர்விகாரி
புன்மைக ளொன்றான் பூரணனும் - கன்மங்கள்
தான் செய்துஞ் செய்யானாய்ச் செம்மல் விநாயகனாங்
கோன்செய்யு மாட்சி முறை. 15

## கட்டளைக் கலித்துறை

முறைசெய்வா னந்த விநாயக னேமுறை கேடொன்றில்லை
இறையும் வழுவா னெறிமுறை யீதறி வார்களாரே
குறையொன்று மில்லைக் குறித்தது முன்னே முடிந்ததன்றோ
நிறைவாமே யெல்லாம் வருத்த நமக்கினி யொன்றிலையே. 16

## நேரிசை வெண்பா

இல்லா முலைப்பாலங் கீன்ற குழவிக்கு
நல்லா யமைந்ததோர் நன்மைபோல் - எல்லாமே
ஆக்குவா னெங்க ளமல விநாயகன்
போக்கும் பரிசு மிது. 17

## கட்டளைக் கலித்துறை

பரிசிது விந்தை பழிப்பதற் கின்று புருவயிறன்
துரிசுக டீர்ப்பான் சுமக்கவோ ராகு துணிந்து கொண்டான்
பெரியன் பெரியதிற் பேசிற் சிறியன் சிறியதிலும்
அரிய னவனென வான்றோர் மொழிய வறிந்தனமே. 18

## நேரிசை வெண்பா

தனமெமக் கெந்நாளுந் தந்தி முகனே
மனவழுக் கைக்கழுவ வல்லான் - சினமருவித்
தீமைகள் செய்தாலுஞ் சீறான் பொறுத்திடுவன்
ஆமே யவனுக்கெம் மன்பு. 19

## கட்டளைக் கலித்துறை

அன்பு பெருக வறம் வாழ்க வாதிசிந் தாமணிதாள்
இன்ப மழைபெய்க வென்றென்று மேத்துவா ரின்புறுக
துன்பந் தொலைக சுருங்குக வஞ்சனை தொல்புவியில்
நன்கு பயிரோங்க நாடு செழிக்க நிறைகநீரே. 20

திருச்சிற்றம்பலம்.

# சிந்தாமணி விநாயகர் பஞ்சகம்

திருச்சிற்றம்பலம்

## அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

ஐந்துபுலன் களுமடக்கி யார்வமுடன் பூசைசெய்யு மடியார் தங்கள்
சிந்தைநிறை பெருமானே சீருதரான் பெருவாழ்வே தேவ தேவ
வந்துமலர் கொடுவணங்கி வாழ்வுபெற வகையறியேன் வஞ்ச நெஞ்சேன்
எந்தவகை யுய்வதுவோ வேரம்ப வோர்கொம்ப விரங்கிடாயே 1

## எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பொழியுநின் கருணை வெள்ளத்துட் டிளைத்துப்
போற்றிசைத் தேத்திப் பொருவிலா நெஞ்சம்
அழியுநின் னடியா ரடைந்தனர் நின்னை
யறிவிலாச் சிறியே னாழியாம் பிறவிச்
சுழியுளே சென்று சோர்ந்திடு கின்றேன்
துணையெனக் கொருவ ரீங்கிலை தேவே
எளியனேற் கிரங்கி யாளுதல் வேண்டும்
எந்தையே சிந்தா மணிவிநா யகனே. 2

## பதின்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

ஐந்து கையுடை யண்ணலை யானைமா முகனை
அளப்ப தற்கரு மானந்த வாரியை யமுதை
எந்தை யீசனை யேந்தலை யெய்ப்பினில் வைப்பை
எல்லை யற்றவன் றனையுத ரானிடைக் கண்டேன்
சிந்த வல்வினை சீரிய செம்மை யென்னுள்ளே
சேரச் செங்கரங் கூப்பினன் சேவடி மறவேன்
இந்த வுடலுறு பிறவியின் பயனது பெற்றேன்
இன்னுமோர் பிறப்புண்டெனி னதுவும் வேண்டுவனே 3

## பன்னிரு சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அன்னையா யத்த னாகி யரியதோர் துணைவ னாகி
அனைத்தையும் படைத்துக் காத்துத் துடைத்திடுந் தூய னாகி
மன்னியென் சிந்தை யுள்ளே மலர்ந்துளங் களிக்க வந்த
வள்ளலே யுதரான் மேவு மானைமா முகனே யெந்தாய்
துன்னிய துயர மெல்லாந் தொலைத்தருள் துரியா தீதா
துய்யநின் றாள்கள் சேர்ந்தேன் றுணையுனை யன்றி யுண்டோ
பன்னின னுன்றன் னாமம் பனிமலர் நீருங் கொண்டு
படுதுய ரெனக்கிங் குண்டோ பழமறைப் பொருளா னோயே 4

## பதினான்கு சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பற்றற நின்று பணிபவ ருள்ளம்
பனிப்புறப் புகுந்துநின் றுருக்கும்
பரமனே யானை முகவனே யைந்து
கரமுடை யமலநா யகனே
கற்றவர் விழுங்குங் கற்பகக் களிறே
கனமலர் பொதுளுத ரானிற்
கண்டுகொண் டுன்னைக் களித்தன னெந்தாய்
கழிந்தன கடுவினை முழுதும்
நற்றவர் போற்று நன்மலை மருந்தே
நான்மறை தேடியுங் காணா
நாயக மணியே நறுமலர்த் தேனே
நம்பனே யுன்னையே யல்லால்
மற்றினி யொருவர் துணையுளா ரியாரே
மாறிலாக் கருணைவா ரிதியே
மலைமகள் குமரா மாலவன் மருகா
மன்னியென் சிந்தைநின் றானே. 5

## நெஞ்சறிவுறுத்தல்

ஒன்றைவிட் டொன்று பற்றி யுழலுத லொழிதி நெஞ்சே
ஊதிய மொன்று மில்லை யுறுவது துயர மொன்றே
தென்றல்வந் துலவுந் தெய்வச் சீருத ரானைச் சேர்ந்து
செங்கரங் கூப்பிச் சிந்தா மணியின துருவு தன்னை
ஒன்றிய சிந்தை யுள்ளே யொளி பெறத் தீட்டி நாளும்
உள்குவை யுலைத லோயு மொப்பருஞ் சாந்த முண்டாம்
நன்றுறு நால்வா யைங்கை நாயகன் றிறங்கண் முற்றும்
நண்ணுவை ஞாலந் தானு நன்றதே யாகு மன்றே. 6

## நித்திய வேண்டுகோள்

### எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

இந்து தவள் சோலைசூ ழுதரான் மேவி
யிளங்கோயில் கொண்டருளு மெங்கள் கோவே
ஐங்கரத் தானைமுக வாதி மூர்த்தி
யடினேனுன் னடியடைந்தே னாண்டு கொள்வாய்
அந்தகன் வந்தெனையாழும் போதுன்னாம
மன்பினொடு மைந்தடக்கி யோதல் செய்து
சந்ததமு முனை மறவாத் தன்மை யோடுஞ்
சரித்திடவு மருள் செய்வாய் சாந்த மூர்த்தி 7

# சிந்தாமணி விநாயக தரிசனம்

## அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

மருவார் மலரின் மணம்போல மன்னி யெங்கு நிறைந்தானைக்
கருவார் குழியில் வீழாமற் கருணை பொழியுங் கணபதியைப்
பெருவாழ்வளிக்கும் பெரும்பேற்றைப் பிரிப்பற்றென்னுட் கலந்த
திருவார் சோலை யுதரானிற் சென்று கண்டு திளைத்தேனே 8

வில்விட் டொளிருந் திருமுடியும் விளையுங் கருணை விழிநோக்குஞ்
சில்லென் குழவித் திங்களெனத் திகழு மொருகோட் டிரு செவியுங்
கல்லிற் றிணிய நெஞ்சுருக்குங் கவின்கொள் மார்புங் கரமைந்தும்
ஒல்லென் றொலிசெய் கழல்களுமென் னுள்ளங் குடிகொண்டகலாவே 9

திருச்சிற்றம்பலம்.

# அராலி உதரான்பதியமர்

# நாகேஸ்வரி அம்மை துதி

திருச்சிற்றம்பலம்

## காப்பு

### நேரிசை வெண்பா

சீர்மேவு சிந்தா மணியடிகள் சிந்தை செய்து
கார்மேவு சோலை யுதரானில் - நார் மேவி
நன்றுறைநா கேஸ்வரிசீர் நாவாரப் பேசிடுவேன்
இன்றமிழா லேத்தி யினிது,

## நூல்

### நேரிசை வெண்பா

ஐயைநா கேஸ்வரியை யண்மி யுதரானில்
நையு மனத்தினராய் நாடிடுக - பொய்யெல்லாம்
போக்கும் பரிசிதுவே பூரணிதன் மெய்ம்மை யொளி
ஆக்கும் பரிசு மிது. 1

### கலி விருத்தம்

சென்னி யாறது வைத்தவன் கூறுடைக்
கன்னி யம்மைநா கேஸ்வரி தாள்களை
உன்னி யன்பொடு முள்ளகத் துய்த்திடிற்
றுன்னு தொல்வினை சூழுத லில்லையே. 2

### கொச்சகக் கலிப்பா

பொய்யாவுன் னருள் வெள்ளம் புவியடங்கச் சூழ்ந்திடவும்
மெய்மைநிலை காணாதே விபரீதங் காண்பேற்குத்
தெய்வநிலை யெய்திடுமோ சிறுமைகளே சேர்வதல்லால்
ஐயைநா கேஸ்வரியை யணியுதரான் பெருவாழ்வே 3

## கட்டளைக் கலித்துறை

தன்னந் தனியனாய்த் தானேயாய் நின்ற தனிமுதல்வன்
துன்னித் துலங்கத் துணையான தோகை சுரிகுழலாள்
நன்ன ருதரானி னண்ணிடு நாகேஸ் வரிபடைத்து
மன்ன நிறுத்தித் துடைத்தருள் வாளிந்த மண்ணுலகே. 4

## இதுவு மது

பாகா யுருகிப் பனிநீர் வடித்துப் பரிவினொடும்
நாகேஸ் வரியென் றொருகா னவில நலம்பெருகும்
போகா வினையவை போயே யகலும் புணருமொளி
தீகால் விழிநம னஞ்சுவன் றீண்டத் திறலிழந்தே 5

## அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

நறுங்கொன்றை நீழற்கீழ் நயந்துறையு
நாகேஸ் வரியேநா னுன்னடிமை
பெறும் பயனு முன்னடிக்கே பெருந் தொண்டு
பூண்டு பெருவாழ்வு பெறுவதுவே
உறுந்துயர மொன்றில்லை யுறுவனவு
முன்ற னின்னருளா லாவனவே
நிறைந்ததொரு நன்மனமே வேண்டிடுவே
னன்னாய் நினைவெல்லா மொன்றிடவே 6

## எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

நண்ணி யுதரானை நறுங்கொன்றைக் கீழமரு
நாகேஸ் வரியே நன்மருந்தே
கண்ணிற் கருமணியே கருதுவா ருள்ளுணர்வே
காண்டற் கரியாய் களிதேனே
மண்ணிற் பிறந்தெய்த்தேன் மறித்தும் பிறப்புண்டேல்
மற்றோர் துணை காணேன் மறுகுகிறேன்
பெண்ணிற் பெருந்தகையே பெயராத வென்றுயரும்
பெயரும் வகைதான் புரியாயே. 7

## எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அன்னைநா கேஸ்வரி யமலையை யுமையை
அறுவகைச் சமய மோதுமுட் பொருளைப்
பின்னையென் றன்னைப் பேதித்து வளர்த்த
பெய்வளை யவளைப் பிறங்குத ரானில்
மன்னிய மணியை மருவினன் மகிழ்ந்தேன்
மறுகிட வாட்டும் மாசினை யொழித்தேன்
என்னினி யெனக்கிங் குறுவன வுறுக
எமனையு மஞ்சே னெனக்கவ டுணையே. 8

### இதுவுமது

பொன் வேண்டேன் பொருள் வேண்டேன் போகம் வேண்டேன்
புவியரசர் வாழ்வினொடு புகழும் வேண்டேன்
பொன்னுலகோன் புரந்தரன்றன் வாழ்வு துச்சம்
பூரணியே நாரணியே புவன மீன்றாய்
என்னமுதே யுன்னடிக்கே யன்பு பொங்க
இரவுபக லுணர்வொன்ற வுன்றன் பாத
நன்மலர்க்கே நானாளா யுய்தல் வேண்டும்
நறுங்கொன்றை நிழல் வைகு நம்பிராட்டீ. 9

### இதுவுமது

போதலர்ந்து பூமணக்கும் பொன்னுதரான் பொருந்தியுறை
பூரணியே யென்னுடைய புகலிடமே பொற்கொடியே
நாதமுடி வானவளே நாரணிநா கேஸ்வரியே
நலம் விளைக்கு நன்மருந்தே நண்ணியுனை நானடைந்தேன்
பேதைமனந் தத்தளிக்கப் பெருந்துயரங் கொண்டலைந்தேன்
பேணியெனைக் காத்தருள்வாய் பெரும்பித்துத் தந்தருள்வாய்
தீதகன்று செம்மை நெறி சேரவுள மொன்றி நின்று
தெய்வநிலை யெய்தவருள் சேர்த்திடுவாய் தீங்கரும்பே. 10

திருச்சிற்றம்பலம்

# சிந்தாமணி விநாயகர் மும்மணிக்கோவை

திருச்சிற்றம்பலம்

உலகுயி ரெல்லா முதரத் தொடுக்கி
மலபா கம்வர மறித்தும் படைத்து
காத்து நிறுத்துங் கற்பகக் களிறே
ஏத்து மடியா ரிடர்கெடுத் தருள
உதரா னெனும் பதி உவந்தமர் ஒருவ
நிதமடி யார்தொழ நீடருள் புரிவாய்
சிந்தா மணியெனுஞ் சீர்சேர் விநாயக
பந்தார் மெல்விரல் பார்வதி பாலக
நந்தா அன்பொடு நயப்போர் மனத்தே
கனிபழங் காட்டிதேன் மான
இனியை யாகுவை இன்னருள் சுரந்தே 1

சுரந்தமு தூற்றிச் சுரும்பிசை பாட
நிரந்தர நீங்கா யுதரான் - பரந்தவென்
உள்ள மொருங்க ஒருவழி செய்குவை
கள்ள வினையைக் களைந்து. 2

களைக ணமக்குக் கணபதி யேயன்றி வேறுமுண்டோ
விளைவயல் சூழுத ரான்பதி மேவி விரும்பி நின்றாய்
புனைநெடுங் கையிற் புனிதநல் மோதகம் பூண்ணிந்த
வினைபிறைக் கோட்டு வடிவுடன் வந்து மயல்செயுமே. 3

மயக்கந் தீர்க்கும் மருந்தொன்றுண்டு
இயக்கு முல்குயிர் இப்பொருளாகும்
அன்றியு முதரா னமரும் பொருளுமாம்
ஒன்றி யடைய உள்ளம் விரும்பின்
தெருவிற் றிண்ணையிற் றூங்கி யெழுந்து
கிடைத்ததை உண்டு இழிந்தது சுற்றி

உதைப்பவர் உதைக்க அணைப்பவர் அணைக்க
வைப்பவர் வைய வாழ்த்துவோர் வாழ்த்த
நைதலை இன்றி நாளும்
செய்குவ செய்தால் சேரலாஞ் சிறந்தே 4

சிறந்த அடியார் திருக்கூட்டஞ் சேர்குவம்
மறந்து மவர்பணியில் மாறிடோம் - சிறந்த
உதரான் பதியுறை ஒண்சுடரின் சேவை
நிதமும் புரிவோம் நிலைத்து 5

நிலைத்த வொருபொருள் நீவேண்டில் நெஞ்சமே நீடுதரான்
நலத்ததோர் நற்பதி நாடி நறுமலர் நீடுங்கொண்டு
மலைத்தனி வல்லி மகனார் அடிபோற்ற வாழ்வதனில்
உலைத்த வினைக ளொருவி யுறுதியும் நண்ணிடுமே. 6

கண்ணும் பொருளை நல்கி நலிந்து
மண்ணில் மலையில் வனத்தில் கடலில்
அலைந்து திரிந்து அறிவு கெட்டு
ஊனு முறக்கமு மின்றி உலைந்து
பேணு முடலைப் பெரிது வருத்தி
கோணுதல் வேண்டாம் குவலய எங்கும்
உள்ளது கொண்டே உவகை யுற்று
தேவைகள் சுருக்கித் திவ்விய உதரான்
சேவையே செயலென மதித்து
அமைதி யுறுக அருள்வழி நின்றே 7

நின்று மிருந்தும் நடந்துங் கிடந்தும்
நன்று நினைமின் நலம்பெற - துன்றும்
உதரான் பதியமர் உம்பர் கணங்கள்
பதியாம் பரமன் பதம் 8

பதமும் பொருளு மெனக்கலந் தெங்கும் நிறைந்து நின்றான்
உதரான் பதியமர்ந்தோர் கொம்பவேரம்ப முக்கண்ணனே
மதர்வழி வல்லபை மாதொரு பாகமா மன்னி நின்றே
இதமுற எல்லா உலகமு மீன்றளித் தேர்பெறவே. 9

ஏர்பெற எங்குங் கலந்து விரிந்து
கார்முக லின்மழை கடுமீடி மின்னல்
பேர்பெறு பெருவெளி பிறங்கிய காற்று
கனல்புனல் நிலனொடு கடுகிய விருசுடர்
இயமான னென்னு முயிரொடு மட்ட
மூர்த்தியாய் முடிவிலா உதரான் பதியில்
தீர்த்தன் நின்ற நிலைமையை
வாழ்த்தி வணங்கி வழிபடு வோமே. 10

வழிப்படுத்த வந்துதரான் வண்பதியில் என்னே
எழிற்கிரவ னாயினா னென்றும் - பழிப்பின்றி
பாரிற்குருமரபு பண்புபெற மூதுணர்வால்
சீரிற் பொலியச் சிறந்து 11

சிறந்த கருணை பொழியும் பிரணவ மூர்த்தியாகி
நிறைந்த சுவைமிகு மோதகங் துதிக்கையேந்தி
குறைந்த பசுபோதங் கொண்டு சிவஞான மீந்தானைக் கண்டீர்
அறைந்த உதரான் பதிமேவி உள்ளொளி காட்டுமாறே 12

காட்டு முயிர்கள் காணாக் கணபதி
காணக் கண்கள் கதிரவன் காட்டல்போல்
காட்டித் தானும் காண்பன் கவின்பெற
உட்டுங் கல்வி உயரா சானென

காட்டா னென்னில் காண்பாரில்லை
உளங்கொள உதரான் பதியை உவப்பன்
வளம்பெற மன்னுயிர் வல்லபை யோடும்
கூட்டுவன் வினைப்பயன் குறிவழிகாட்டி
வாட்டுவன் மலத்தை பாகம் வரவே
வருதலும் பாகம் வள்ளல்
தருவன் தன்கழல் தண்ணிழ லாயே. 13

தண்ணிழ லாயே உதரான் பதியில்
எண்ணி அவனே இதம் பெறவே - நண்ணி

அவமே பிறந்த அருவினையே னென்று
பவமகன் றுய்வ தினி 14

இனிநமக் கேதிங் கியம பயமுத ரானுறையும்
பனிமலை வல்லி பரசிவனார்சன் தரங்குமோர்
தனிமுதல் வாரண மாமுகன் நிற்கத் தளர்வில்லைகாண்
கனிதரு முள்ள மவன்சர ணங்கள் கலந்திடுமே. 15

கலந்த அன்பிற் கசிந்துள் ளுருகி
புலன்வழிச் செல்லாப் புண்ணியர் நாளும்
கணங்கொண்டிருந்து களிப்பார் சிரிப்பார்
குணநிறை யாளர் குறிநிலை நிற்பார்
திரண்டு திரண்டுன் திருவார்த்தை விரிப்பார்
நலந்தகு முன்றன் நாம நவில்வார்
உதரான் பதியில் உறைவார் விரவி
ஆவின் பசும்பால் அனந்தற் கூட்டுவார்
ஆதிசேடன் காவலை மெச்சுவார்
பூதி சாதனம் பூண்டு
திருவே டத்தொடு சிறந்து திகழ்வரே. 16

திகழுநின் மார்பத்து முப்புரிநூல் நாகம்
நிகழ்ந்த அரைக்கச்சும் நாகம் - அகழ்ந்த
னலிநின்னை ஏற்றிக் கொடுபோவ தெங்ஙன்
நலியாமல் நாளும நவில். 17

நவின்றனர் மூவர்கள் நற்றமி ழென்றுணை நாடி வந்து
நவின்றிடு நம்பிக்கு நல்லுப தேசம் பல நவின்று
கவின்ற திருமுறை நண்ணிடுஞ் சிற்றம் பலத்தீலென்ற
நவின்றே உதரான் பதிநண்ணு நாயக நன்முதலே. 18

முதலவன் முடிவவன் நடுவுளும் நண்ணுவன்
முன்னுளன் பின்னுளன் முற்றுளும் முகிழ்த்துளன்
தன்னிக ரில்லோன் தான்தோற்ற மில்லான்
சிந்தா மணியெம் செல்வ விநாயகன்
நந்தாப் புகழொடும் நண்ணுவனுதரான்
மன்னி மண்முத லாதி வளர்ந்து
பின்ன மின்றிப் பெரியோன்
கண்ணே எவையு மியக்கு மாறே. 19

மாறுபட்ட வல்லவுணன் மாயநீ கைக்கொண்ட
கூறுபட்ட கோட்டைக் கைக் கோளரா - சீறுபட்டு
துண்டப் பிறையென்று துத்திப் படம் விரித்துக்
கண்டத்திற் பாயுங் கடிந்து. 20

கடிய வினையின் றொகுதியை வேரைப் பறித்தெறிந்து
படியில் கருணை பொழிந்துத ரான்பதி மன்னி நிற்பன்
முடிவில் பெரும்பதம் மூட்டு மொருபெரும் மூர்த்தியவன்
அடியிற் பணிந்தெழு மடியர்கட் கானந்த மாயிடுமே. 21

ஆனந்தமாம் அருள்வழி நிற்க
ஊனந்தானே மருள்வழிப் படுதல்
அனைத்தும் ஆக்குவான் விநாயகன் அருளால்
படைப்பதுங் காப்பதுந் துடைப்பதும் அருளால்
அருளவன் சக்தி என்பர் அறிவோர்
அருளொடு மமர்ந்தான் உதரான்பதியில்
வல்லபை கருணாசனாய் வதி வான் உதரான்
அவனும் அருளிற் பேதகன் அல்லன்
வளந்திகழ் வல்லபை கணேசனை
வணங்குதும் இணையன் என்பதை உணர்ந்தே. 22

உணர்ந்தார்க் குணர்வரியன் உள்குவார்க் குள்ளன்
பணந்தாங் கரவரையன் பாரில் - இணைந்தே
உறைவான் உதராளென்னுள்ளத்தி லுள்ளும்
உறைவான் உணர்வாய் நிறைந்து. 23

நிறைந்து பரந்து நிறையொளியாகியே நீக்கமின்றி
மறைந்து மறைபல் பேசி மணிசேர் வயலுதரான்
உறைந்த ஒருகொம்ப ஏரம்ப மூர்த்தியை நான்மறந்தேன்
குறைந்தடை யாது குறிக்கோளிலாத கொடுமதியே 24

மதிப்பிள வொத்த கொம்புடைக் கணபதி
வதியுத ரான் பதி வாழு நல்லுறவே
காதிற் குண்டலம் கழுத்திற்பூ ணாரம்
மார்பிற் பூண்ணூல் தோள் புனை வலயம்
கையிற் கங்கணம் காலிற் சதங்கை
அரையிற் கச்சை யாகுவை நீயே
பரவிப் பணிந்துனே வேண்டினேன் கேட்டி
நீபோய் விநாயகன் செவியில்
நான்படுந் துயரம் நன்கெடுத்துரையே 25

உரையிறந்து ஒன்றை உரைப்பதெவ் வாறு
கரையிறந்த காதல் கனிய - புரையில்
மனத்தி லுணர்ந்து மகிழ்வதே யன்றி
பிணைச்செய்வ தேது பிறிது. 26

பிரிவின்றி உள்ளத்தே தோன்று முதரான் பதியுறைவான்
பிரிவின்றி உள்ளத்திற் சிந்திக்கச் சிந்திக்கக் காதலோடும்
பிரிவின்றி நின்ற உலகுடலிற் பற்றை அறவே நீக்கி
தெரிவரிய ஆனந்த மயமாகிப் பேசா மௌனியாமே. 27

மௌனியாகி மாமுனிவர்க்கு
மெய்ந்நிலை இதுவென மேவக் காட்டி
இருந்த இறைவன் ஈன்ற ஒருவ
சிந்தா மணி விநா யகனே சரணம்
உதரா னுறையும் உமைசுத சரணம்
சச்சிதானந்த சரணம் சரணம்
அற்புதப் பொருளே ஆனந்த விளைவே
கற்பனை கடந்த கருவே போற்றி
சொற்பதங் கடந்த சுவையே போற்றி
சாந்த வடிவே தற்பரா போற்றி
மோனத்தில் முகிழ்ந்த முடிவே போற்றி
ஞான வெளியாய நயந்தாய் போற்றி
இளைத்தன சொற்கள் சளைத்தனன் எந்தாய்
கையறு நிலையிற் கலங்கினேன் கோவே
நானார் உன்புகழ் நவில்
பூரண! புனித! போற்றி போற்றி 28

போற்றிப் பரவி புகழேன் புதுமலர்கொண்
டேற்றி இறைஞ்சே னிருவினையேன் - ஊற்ற
உறவுத ரானெனன் லொருகா லுரையேன்
உறுவது மென்னோ இனி. 29

இனியதில் வாழ்க்கை என நினைந்தின்புறு மேழை நெஞ்சே
பனிமதிக் கோட்டுப் பரமனுதரான் பதி மருவிக்
கனிதரு முள்ளத் தொடும் வலம் வந்து கழல் வணங்காய்
இனிமை பெருக அமரலாம் மீளா உலகினிலே 30

திருச்சிற்றம்பலம்

# சிந்தாமணி விநாயகர் நான்மணிமாலை

திருச்சிற்றம்பலம்

செம்மை செறிந்த உதரான் பதியில்
மெய்மை நிறைந்து மிளர்கின்றான் - நம்மையெலாம்
ஆளும் விநாயகன் அன்பர்க் கமுத மாய்த்
தாமுங் தவர்க்கினிமை தந்து. 1

தந்தி முகத்துத் தனிப்பெரு மானுத ரான்பதியிற்
சிந்தா மணிப்பெரு மானெங்கு மான சிரப்பொருளை
வந்து வழிபடு மேலோ ரெமையா ளுடையவரே
சிந்தை களிவரு தீரர் திறம்பா நிலையினரே 2

நிலையுத லில்லா வாழ்வை நிலையென நினைந்து நாளும்
பலபல செயல்க ளாற்றி பதைப்புற யொழிதி நெஞ்சே
உலைவிலா உதரான் மேவி உறைசிந்தா மணியெம் பெம்மான்
அலகில்சீர் பாடி ஆடி அமைவுறங் கரும மாமே. 3

கருதிய பெறலாம் கணபதி அடியிணை
மருவி வழிபட மறுவி லாத
உதரான் ப தியி உவந்துறை ஒருவ
பதவியில் நிலையுறப் பரவுவ ரயன்மால்
வாழ்த்துவர் வானவர் வரம்பல வேண்டி
பாழ்த்த பிறவி அறுக்க யானும்
பரவுவன் பாத பங்கய மலர்கள்
அரவணி அமலன் அற்புத னடிக்கீழ்
சிசநிலந்தாழச் சிறியன்
விரைநிறை மலரடி வேண்டிவன் தனனே. 4

வந்திக்கச் சென்னியும் வாழ்த்த நல் வாயதுவுந்
தந்திலனே அந்தச் சதுர்முகனும் - நந்தயில்லா
நல்லவுத ரான்னமரும் நாயகனை நான்முகனும்
பொல்லா னெனவே புகல். 5

புகல் நமக் குண்டுகொல் பொன்மேனி எம்மான் புகர்முகத்து
நீகரிலுதரான் நிமலனை யன்றியந் நீணிலத்தில்
பகர்வரி தாய பகவனன் னோவவன் பாருலகில்
தகவுடை நல்லோர் சரணடைந் தின்புறு சார்பினனே. 6

சாருமன்ப ருள்ள மன்னி சாந்த நீர்மை தண்ணளி
நேர நின்ற நிமலனீடி நீங்கலில்லா நீள்பதி
ஒர நின்ற உதரா னுண்மை வாழ்வு நல்கும் வாய்மையே
சேர வாருஞ் செம்மை சேருஞ் சிந்தையோடு செகத்திரே. 7

செகத்திற் சிறப்புறச் சிந்தை திருத்துக
அகமுகப் பட்டே அண்ணலை நினைக
உதரானுறையு மொருவ போற்றி
பதறா தருள்வாய் பரனே போற்றி
சாந்த மனத்தவர் சார்பே போற்றி
ஏந்தல் போற்றி எம்மான் போற்றி
அன்பி லுறையு மண்ணா போற்றி
வன்பினுக கெட்டா வடிவு போற்றி
துன்பந் துடைக்கும் தோன்றல் போற்றி
நன்பொன் மணியே நாத போற்றி
போற்றி போற்றி என்றே
சாற்றுதி சந்ததம் சலிப்பற மனமே. 8

மனம்வாக்குக் கெடடா மருந்தெ மறுவில்
நினைவில் நிறையு நிமல - கனிந்துருகி
உள்ளாதிருந்தே னுதரான் பதிக்கரசே
எள்ளா தெனையேன்று கொள். 9

கொள்ளி யணை கொடுவினை வந்து குறுகியிட
மெள்ள அணையவோர் மென்னிழ லாகி மிளிர்ந்திலங்கி
அண்ணற் பழன நடுவ ணுதரான் பதியுறையும்
அள்ளற் கினிய லமுத மதனிடை ஊறிடுமே. 10

ஊறு மின்ப வெள்ளம் உள்ளம் நிறைந்த உரவேள்
சேறு முதரான் பதிசேர் செம்ம லழகிற் றிளைத்து
நாறு மலர்ப்பூங் காவும் நறுந்தேன் கண்ணீர் சொரியும்
கூறு மிசையை மான குளிர்வண் டின்னிசை பாடும் 11

பாட்டிற் பண்ணெனப் பழத்திற் சுவையென
தோட்டு மலரில் மணமெனத் தோன்றி
உரைபெறு முதரா னுறை தருமொருவ
கரையில் காட்சியர் களிப்புறு கணபதி
எண்ணி லடங்கா எந்தை விநாயக
நண்ணினா நயக்கும் நம்பி நாயக
புரையறு சிந்தை புக்குறை புலவ
கரைபவர் கருத்தில் காண்வரு கதிரே
இடையறா திறைஞ்சி இரந்தேன்
கடைய னேனையுங் கடைக்கணித் தருளே. 12

அருள்வா யுதரா னமரு மரசே
தேருளா மனத்துச் சிறியேன் - இருளார்
மலங்கள் மயக்க மறுகினேன் நாயேன்
கலங்காமல் நல்ல கதி. 13

கதியறி யாதகடுவினை யேற்குன் கழறருவாய்
குதிகொள வானை கொழுவிய தெங்கின் பழமுதிரும்
அதிபுனல் நீடும் கருநிறை சாலி வயல் நடுவண்
பதியுத ரானி லடியவர் போற்றும் பரம்பொருளே. 14

பரம்பர னுதரான் பதியமர் பெருமான் பார்முதற் பூதம் பரந்து நிறைந்தான்
தரங்குவி யார்கள் கருத்திலிருந்துங் காணகி லார்கள் கரவுடை யார்கள்
உரனுடையோர்கள் ஒருமையு ளுள்ளான் உயர்வுறு சிந்தை ஒளிபெற நின்றான்
பெரும் பொருளாளன் பேணுதல் புரிவான் பேரிலனூரிலன் பெருவெளி தானே 15

வெளியொடு வளியெரி விரிபுனல் நிலனொடும்
இருசுட ருயிரவை யெனவிரி கின்றான்
உரனுடை யுதரா னுறை தரு முரவோன்

தனதொழில் வடிவில் தாங்குவ னெவையும்
தனக்கொரு சார்பு வேண்டயன் தற்பரன்
எல்லா மாவ னல்லணு மாவன்
தனிப்பொரு ளாகித தொடக்குற வில்லான்
அவனுடை நிறைவை யாரறிவார்கள்
அங்கவன் றன்னை அணுகி
நங்கடன் நற்பணி செய்து கிடத்தலே 16

கிடந்தான் பணியா யுமைசாபத் தாலே
அடங்க மனமு மமைந்து - படங்கொண்ட
பாந்தன் பயிலுதரான் பண்ணவன் பேரருளால்
சேர்ந்தான் பண்டையதன் சீர் 17

சீர்மே வுதரான் சிறந்த கணபதி தாழ்நினைந்து
பார்மேற் பரவுவரர் பண்டைக் கொடுவினைநோய்
தீர்வார் மறவா மனத்திண்மை யாளரவரைட்டைந்
தார்வ முதப்போற்ற அங்கலாய்க் கின்ற தெனதுளமே 18

உள்ளத் துயர முருண்டோடு மோர உதரான் பதிக்கரசை
தள்ளற் கரிய வினை சாய்த்துத் தருவான் தண்ணளி தற்பரனும்
கள்ளத் துறையாக் கணபதி தன் கருவூலங்கள் திறந்தளிப்பான்
எள்ளத் தனையு மிளித் தரியோ மேத்து வோமப் பெருவாழ்வை 19

வாழ்வின் பெரும்பயன் வள்ளலே வாழ்த்துதல்
தாழ்விலும் வாழ்விலும் தாழ்ந்து வணங்கும்
நிற்பினு மிருப்பினும் நினைவு நீங் கற்க
நடப்பினுங் கிடப்பினும் நாடுக அவனடி
பனிமலர்க் குழலார் பரிந்த முயக்கிலும்
இனிமை நிறைந்த அடிசில் மிசைவிலும்
ஏதுசெய்தாலும் எந்தையை இறைஞ்சுக.
நாத என்றும் நம்பி என்றும்
நாவில் நவின்று நம்பனை நண்ணுக
பதியுத ரானில் பரவி
விதிமுறை போற்றி வழிபடல் நெறியே 20

நெறி வழுவா நேர்மையார் நித்தலுஞ் சென்று
நறுமலர் தூப முடனே - முறையாக
போற்று முதரான் பதியுறை யெம்மரசே
மாற்றரு நோய்க்கு மருந்து. 21

மருத்துவனாய உதரான் பதியமர் மாமறையோன்
உருத்தெழு மென்நோ யறிந்தென துள்ள முருகச் செய்தான்
சிரித்த முகத்தினன் சீர்மைகள் செய்யுந் திறலுடையான்
விரித்தவன் செய்வன எல்லா மிறையுஞ் சொலற்கரிதே. 22

சொல்லிப் பரவற் கரியானை தூய உதரான் பதிவாழ்வை
கல்லை ஒத்த எனதுள்ளங் கனிய வைக்குங் கணபதியை
நெல்லிக் கனியைத் தேன்பாலை நிறையின் னமுதை நீள் கரும்பை
அல்லற் பிறவி அறுப்பானை அணைந்து நிற்ப தென்று கொலோ 23

என்றும் நிலவும் பதியுத ரானில்
மனற அமர்ந்து மருவுங் கணபதி
நின்மல வஸ்து நிறைவுடை ஒருபொருள்
மன்னுயிர் வாழ மருவுவ னெங்கும்
ஆற்றலளவிலன் அறிவு வடிவினன்
இன்ப வடிவினன் ஏரம்ப மூர்த்தி
ஆக்கியு மனைத்து மடையான் சலிப்பு
ஆக்கியு மளித்து மழித்துஞ் சலமிலன்
மறைத்தலு மருளலும் மற்றுறு மாண்பு
வல்லபை கணேச மூர்த்தி
எல்லையில்லை இறைஞ்சுது மமைந்தே 24

அமைதி நிலவு முதரான் பதியில்
இமையோர்கள் ஏத்த இருந்தான் - எமையென்றும்
ஆளாஉடைய அருள் சேர் விநாயகன்
கேளாகிக் குற்றங்கெட 25

குற்றங்கெடுத்துக் குவலயம் வாழக் குணநிரம்பி
நற்றவ நல்லோர் நாடு முதரான் பதியதனில்
பற்றி உறையும் பரமனடிகள் பரவியிட
முற்றறி வேளையும் பொருளெனக் கொள்ளுஞ் சீரியனே. 26

குற்றங்கெடுத்துக் குவலயம் வாழக் குண நிரம்பி
நற்றவ நல்லோர் நாடு முதரான் பதியதனில்
பற்றி உறையும் பரம னடிகள் பரவியிட
சிற்றறி வேனையும் பொருளெனக் கொள்ளுஞ் சீரியனே. 26

சீரியன் செம்பொருள் சிரந்தாழ்ந்து சேர்பவர் சிறுமை சிதைந்தொழிய
ஆர்வ நிறைந்த அவள் சிந்தை அமர்ந்துறை அறவோன் அருளாளன்
காரிருள் சேருங் கயவர் கடங்கனவிலு நில்லாக் கரிமுகவன்
நீர்நிறை செந்நெல் வயல் நடுவண் நிறையுத ரான்பதி அமர்கின்றான் 27

அமரர்க்கு மெட்டா அரும்பொருள் அமலன்
அந்தமு மாதியு மில்லா னாயினும்
பந்தமும் வீடும் படைப்பான் விநாயகன்
நூலுணர்வுணரா நுண்ணியனேனும்
மேலொரு கீழாய் விரியும் பெரியோன்
அற்புத னாயினு மனேகனு மாவன்
சொற்பதங் கடந்த தொல்லோ னெனினும்
புலன்களுக் கெட்டாப் புதுமையன் புண்ணியன்
எத்தந் திரத்திற் காண நேரினும்
அத்தந் திரத்திற் காட்சி தருவன்
பதியுத ரானுறை பரமன்
விதிமுறை வழுத்த நிற்பனவே றறவே 28

வேறற ஒன்றி வழிபடு மேலோர்க்கு
ஈறின்றி உள்ளத்தே தித்திக்கும் - மாறின்றி
ஊனத்தை நீக்கு முதரான் பதியமரும்
தேனொத்த தெய்வமணி 29

மணியி னொளியென எங்கும் பரந்து மருவி நிற்கும்
பணிக ளகலாப் பதியுத ரானிற் பரம்பொருளே
திணியு மிருளிற் கிடந் துழல் வேனுக்கு முண்டுகொலோ
இணையிலா வானந்த வெள்ளத் தழுந்தி முழுகுதலே 30

முழுகுதல் வேண்டு முனதருள் சிறைவில் முன்னை வினையகன்று
எழில்மிகு முதரான் பதியமர்ந் தருளுமனந்தை விநாயகனே
பழமறை ஓலிட்டுந் தெரிவரி தாகிய பரமா கணநாதா
குழிவற நிறைந்த ஒருபொருள் உணர்வில் உறையு முமைமகனே. 31

உமையாள் மகனே சரணம் சரணம்
ஏழையாளிறைவா எந்தாய் சரணம்
எழில்சேர் உதரான் உறைவாய சரணம்
அழகா சரணம் அமுதே சரணம்
வல்லபை கணேச வந்தருள் தருவாய்
சொல்லினு ளமையாச் சுகந்தந் தருள்வாய்
அலந்தவர்க் கருளும் அப்பா கணபதி
நலந்தந் தென்னை நவையறுத் தாள்வாய்
செல்வ விநாயக சிறியே
புல்லியன் புகலிலன் புனைதந்தருளே. 32

தந்தரு ளெந்தாய் உதரான் பதியுறை
சிந்தா மணியே சீரியர் - சிந்தைசேர்
முத்தா முதல்வா முயல்வோர் அணைவுறும்
அத்தாவுன் தாளினைக் கன்பு 33

அன்பிற் கனியு மமுதே அணிபொழில் சூழ்ந்திலங்கும்
இன்பிற் கிடமா முதரான் பதியிலிருந்தனமே
துன்பைத் துடைக்குந் துகளறு சோதிச் சுருதியனே
என்பை யுருக்கி எழியே னடியனை ஏன்று கொள்ளே 34

ஏன்றா ன்னைத் தன்னடியானென் றெந்தை பெருமா னேரம்பன்
வான்றோய் பொழில்சூழ முதரான் பதியில் வந்தமர் கின்றாருளாளன்
சான்றோர் பல்லோர் வந்து வணங்கித் தம்மை மறந்து நினைக்கின்றார்
தோன்றாத் துணையாய்த் தொல்லுல கோம்பித் துகளற ரின்றான் கணபதியே 35

கணபதி சயசய கணேச சயசய
பணவர வுறைதரு புற்றாரு தரான்
பதியமர் வரதா பரனே சய சய
கதியொன் றில்லேன் காப்பாய் சிறியனை
பிறந்திறந் தெய்த்தேன் பேதைமை நீங்கேன்
அறநிலை நில்லேன் அழிதக வுடையேன்
மூப்பும் வந்தது முளைத்தன பிணிகள்
நாப்புலர் வாகி நரையும் வந்தது
ஒக்க அடைந்தது ஒன்பது வாயிலும்
சளியும் பித்துஞ் சார்ந்து நின்றன
கழிய வேண்டிய உடலிது
காணடைந் தேனுனைத் தாங்கிக் கொள்ளே 36

கொள்ளே னொருபொருளாக அரசாட்சி
நள்ளேனுனதடி நண்ணாரை - விள்ளரிய
பீடு பெறு முதரான் பேர்சொல்லி வாழ்வாரை
நாடி நிற்ப னென்றும் நயந்து 37

நயப்பொடு சென்று நறும் பொழில் சூழ்ந்த பதிவுதரான்
பயத்தகு மைந்து கொண்டாட்டி நறும்புகை தூபமிட்டு
வியத்தகு பூசனை செய்ய வல்லார்கள் உலகிறந்த
மயக்கிலா மேலை உலகினிற் சென்றுடன் மேவுவரே. 38

மேவ அரிய விமலன் எங்கும் பரந்து மிளிர்வான்
தாவி லுதரான் பதியைச் சார்ந்து விரும்பி அமர்வான்
நாவில் நவில நாளும் நண்ணி நலன்கள் தருவான்
ஓவி லுணர்வி லுணர ஒருமை நிலவி ஒளிர்வான் 39

ஒளிரு முதரான் பதியிறை வாழ்க
மிளிரு முலகில் மெய்ந்நெறி வாழ்க
வானம் பொழிந்து வையகம் வாழ்க
ஆணினம் பால்சுரந் தவனியில் வாழ்க
வேத வேதியர் விளங்கி வாழ்க
நீதிமுறை செய் வேந்தனும் வாழ்க
பூதி சாதனம் பொலிந்து வாழ்க
நிமலன் நற்புகழ் நீடி வாழ்க
அமைதி நிலவி அடியரும் வாழ்க
இமையவர் என்றும் இலங்கி வாழ்க
ஈறிலுதரான் பதியில்
மாறிலா தென்றும் மன்னுக செம்மையே 40

திருச்சிற்றம்பலம்

# சிந்தாமணி விநாயகர் சதகம்

திருச்சிற்றம்பலம்

## நேரிசை வெண்பா

உத்தம ரொன்னு முதரான பதியி
லத்தன் கணபதிதா ளாதரித்து - நித்தம்
உருவெழுதி யுள்ளத் துணர்வார்தஞ் சிந்தை
மருவுமோர் சாந்தம் மலர்ந்து. 1

மலர்கொண்டு போற்றும் மறை யோர் மனத்து
நிறையும் விநாயகனே நீடும் - அவர்பொழில்
சூழுதரான் சேர்பொருளே சோதியே என்னெஞ்சம்
தாழுநீ தஞ்சமெனச் சார்ந்து. 2

சார்ந்தமல மூன்று மறத் தாழ்வின் நித் தேனிறைந்து
வார்ந்தொழுகு மால்மணத்தார் வாழ்வர் - நேர்ந்தொரு
சிந்தை மகிழ்ந்திடுவாண் செம்மல் விநாயகன்
சிந்தா மணியெம் மிறை 3

எம்மிறையே யெந்தை விநாயகனே யென்றென்றே
தம்மிடர்கள் சாற்றியே தாழ்கின்றார் - செம்மையராய்
தேனார் பொழில்புடைசூழ் சீருதரான் நற்பதியில்
வானவரும் மண்ணவரும் வந்து. 4

வந்து வணங்காத வல்வினையேன் வானவனே
சிந்தா மணியிறையே செம்மணியே - நொந்தேன்
கரையா மனமுங் கரைந்துருக வேண்டும்
அரைய எனையாண் டளி. 5

அளிவள ருள்ளத்தி லானந்த வூற்றே
களிவளர் சிந்தையிற் கற்பகமே - ஒளிவளரும்
கோவே குளிருதரான் கோட்டற்தா யென்றென்றே
நாவில் நவில்வேன் நயந்து. 6

நயந்துன் னடிபோற்றும் நல்லன்பர் கூட்டம்
இயைந்துநின் றின்புறுதல் வேண்டும் - வியந்துன்னை
உள்ளுதல் வேண்டு முதரான் பதிக்கரசே
வள்ளலே காட்டாய் வழி. 7

அழிவழி யாளாய் வழுத்துவே னுன்னை
அழிவில் பொருளே யகிலம் - முழுதும்
உடையா யுதரா னுறையு மொருவ
கடையேனை காவாய் கலந்து 8

கலந்துன் கருணைக் கடலிற் குளியேன்
மலைந்த மனத்தேன் மதிகெட்டு அலர்திடுவேன்
மன்னு முதரான் விநாயகனே யுன்னை
பன்னிப் பரவப் பணி. 9

பணிந்து வணங்கவும் வானவருக் கெட்டான்
தணிந்த மனத்தராய்ச் சார - இணைந்தே
ஒளிசே ருதாரனி லோங்கார ரூபன்
வெளியாம் விருந்தாய் விளைந்து 10

## அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

விளைந்த செந்நெற் கதிர்பரப்பி வீறுகொண்ட வயற்கடுவன்
தளைந்த வுதரான் பதியமர்ந்தான் சாருஞ் சீலர் செய்மனத்தே
விளைந்த அமுதாம் விநாயகனே வினையேன் மனத்து வினைமலங்கள்
களைந்து கரும்பாய்த் தேனிக்குங் கருத்திற் பழுத்த கனியமுதே 11

அமுதாய் விளையு மருமருந்தே யமர்ந்தா யுதரான் பதியதனில்
மமதை யகலும் மறையவர்தம் மனதில் வளரும் மணியொளியே
சமனில் நிலவுஞ் சிந்தை நிறைசாந்த வெளியே தண்ணளியே
நமது வாழ்வே நலம்பெருகும் ஞானவடிவே நறுஞ்சுவையே 12

சுவைத்துச் சுவைத்துச் சிந்திக்கச் சுகமே பேசுஞ் சிந்தாமணி
நவையி லுதரான் பதியமரும் நாத வேத விழுப்பொருளே

சிலையின் செல்வச் சிறுமகனே சேந்தன் றனக்கு மூத்தவனே
பவம் அகல் அருள்தாராய் பரம கருணை பொழிமுகிலே 13

முகிலின் மழையே மூதண்ட முழுது மான முதற்பொருளே
பகலி னொளியே உதரானிற் படரும் பசிய பழையோய்
அகல நீள மறிவரிய அண்ணா அரியயற்கு மெட்டாய்
புகல வெளிதோ புலவர்கட்கு முன்றன் பெருமை புண்ணியனே. 14

புண்ணியன் புனிதன் போதனென்றே போற்றிப் புகலப் புகலரிதாய்த்
தண்ணெண்றொ றின்பப் போதைவந்து தாக்கு மத்தாக்கம் தரிக்கரிதால்
கண்ணகல் ஞாலங் கவிழ்ந்தாலென் காலமும் மாறிச் சுழன்றாலென்
உண்ணிறை யின்பத் தடத்தமிழ்வோம் எற்றுக்கு நாமுமிங் கஞ்சுவதே 15

அஞ்சுவ தொன்றில்லை அன்பின் மிக்கீர் அணியுத ரான்பதி ஆனைமுகனே
தஞ்ச மெமக்குண்டு தாரணியில் தாவில் கருணைக் கணபதி தான்
நெஞ்சிடை நாளும் நினைப்பொழியோம் நேரிய வாழ்க்கை நிகழ்த்திடுவோம்
கஞ்ச மில்லாத் தகையுடையோம் சார்வருஞ் சார்ந்த நியனமதே 16

எமதே யுதரா னுறைசெல்வம் ரம்மியு மெம்மைப் பிரிவதில்லை
நமனார் நமைக்கண் டஞ்சுகின்றார் நாட்டுச் சோரர் நணுகு வரோ
தமராம் நமக்கிங் கவனடியார் தக்க கவசம் பூண்டுள்ளார்
சுமையொன் றில்லைச் சுகமன்றிச் சுமக்க வுள்ளா னுமைசுதனே 17

உமைசுத னெல்லாமுடையானே உலோபி யன்றே மற்றவனும்
அமைதியு மன்புந் தருவானோ ஆர உதரான் பொருள்பேண
இமையவர்முனிவர் வருவாரே எனினு மவர்கொள நாமொட்டோம்
நமயட வல்லார் யாருள்ளா ஞான வாள்நம் கையதுவே 18

கையது வெள்ளைக் கொம்பொன்று கவினாய்பாசம் அங்குசமும்
மெய்யது பூணூ லதுவாக விரிசுடர் பணங்கொள் நாகமது
செய்வது மெம்மாற் சொல்வற்றோ சீரிலன் சேர வணைத் திடுவான்
கைய மைகு மிடம்வினவில் கார்வயல் சூழுத ரான் பதியே. 19

பதிகத் தொடைகள் புனைவார்கள் பரம னுதரான் பதியமர்ந்து
விதியிற் புரியும் பூசனையும் விழவு மெடுப்பார் விநாயகற்கு
புதிய பணிகள் பலசெய்து புதுக்கு அமைப்பார் புதுக்கோட்டம்
நிதியங் கொண்டு நிபந்தங்கள் தேடிச் செய்வார் நிறையன்பர். 20

## கலிவிருத்தம்

நிறையன்பித மன்பிற் றிகழு முதரானுறை யுமமலன்
இறைபோதுமென னுள்ளத் தகல் கில்லானடி யனுவீர்
மறைவல்லவர் மாசில்லவர் மனமொன்றிய நிலையர்
குறைவில்லவர் குறிநிற்பவ ரொடுங்கூடுமின் கலந்தே. 21

கலந்தின்புறு மனைவாழ்க்கையை நிலமொன்றுகொள் கருத்தீர்
வலந்தங்கிய கொலையந்தகன் வரும்போதிலென் செய்வீர்
பிலந்தங்கிய வுதரானுறை பெருமானடி பேணீர்
நலந்தங்கிய வாழவுறும் நமனாருமை யணுகார். 22

கணுகாரெமை நமனாகினி நாமேதவ முடையோம்
பணியன்வதி யுதரான்பதி பணிவோமய லல்லோம்
தணிவாயது மனமும்மதிற் சாந்தங்குடி கொண்ட
புனையாம்புகர் முகவன்சிவ போதம்புணர் வுற்ற. 23

உற்றார்நமக கிவ்வேலையுடை கந்தையுணல் பிச்சை
பற்றாவதும் பரமன்னடித் தொண்டரடி யிணைகள்
நற்றாமரை வயல்சூழ் தருமுதரான்பதி நாளும்
சுற்றாவரு தொழில்பூண்டாயும் தாங்கும் மனஞ்சுகத்தே 24

சுகமேவுவர் துயரம்மிலர் ருதரான்பதி மேவி
அகமொன்றுவ ரார்வம்மிக வருளொள்பவ ரற்றவர்
இகம் வேண்டியவர் பரமேயென இளைநெஞ்சின ரவரே
சுகம்தெமை யுடையாரவர் சீர்மை சொல வரிதே. 25

அரியதேயவன் புகழ்பேசுத லிபமாமுக வமலன்
வரிவண்டறை பொழில் தரு முதரானமர் வள்ளல்
நீரையார்தரு மண்டம்பல கோர்பாடுற நிறுவப்
புரையில் வகை புரள்கின்றன புணர்பின்நிறம் வியப்பே 26

வியந்தேயுனை யடைந்தேன்விறல் தருவாயுனை யமுத்த
நயந்தென்னறு மலையேமறு விலனே மறை யாளர்
கண்ணோர்மனக் கரையும்வகை கருதாய்கண நாதா
பன்னாகம தரையாய்பணி யாரம்மெனப் பூண்டாய். 27

என்னேரில் ளரோபிற ரூலகில்லுத ரான்சேர்
மன்னே மணி மலையேமறு விலனே மறையாளர்
கண்ணேர்மனக் கரையும் வகை கருதாய் கணநாதா
பன்னாகம் தரையாய்பணி யாரம்மெனப் பூண்டாய் 28

பூண்டெனுன தடியென்றாலை பொருவில்லுத ரானில்
நீண்டேயுதை நிமலர்களை நாதா யெனை யுடையாய்
வேண்டேன்புகழ் வேண்டேன் செல்வம் வேண்டேன் பிறப் பிறப்பு
நாண்டேயெனை யாள்வாயிருள் நீள்கவரு டந்தே. 29

தந்தாயுனைக் கொண்டாயெனைச் சாலப்பெரி யோனே
எந்தாயுத ரானில்லுறை இறைவாஇணை யில்லாய்
பந்தார்விரல் பரைவல்லபை பங்காபவ நாசா
முந்தாகிய முதல்வாமுடி வில்லாய்சர ணுனக்கே. 30

உனக்கென்றும் பரமையா உதரானிலொளி விளக்கு
மனங்குகையி லமர்தேனே மருவரிய மலைமருந்தே
பனைக்கைமுக வேழமே பாரெல்லாம் பழிதீர்ந்து
நினைப்பரிய நிறைவெய்தி நீடவருள் செய்யாயே 31

செய்யானைச் சேவகனைச் சீரா தேருதரானில்
மெய்யானை வெண்ணீ றணிந்தானை வேழத்தின்
கையானைக் கருவாகி நின்றானைக் கணபதியை
எய்யாமே யாள்வானை யென் மனத்தே வைத்தேனே 32

வைத்த நிதியுதரான் விநாயகனே யென்றுன்னும்
சித்தத்தார் செம்மலர்த்தான் சென்னிமிசைச் சேர்த்திடுவேன்
பைத்த பணியணியும் பைம்பொன் மலர்ப்பாதா
கைத்தலத்து நெல்லியெனக் காண்வருவாய் கண்ணுதலே. 33

கண்ணுதலே யுதரானற் கணபதிநின் கழலன்றி
பண்ணயர்தம் முலகொழுகு பாலேரு பெறவரினும்
கண்ணிடேன் பொருனென்று காதலியேன் பிறதெய்வம்
அண்ணானின் னருள்பெறுநா ளொன்றைன்றே வருந்துவனே. 34

வருந்துயரர் தீரென்று வாழ்த்துவார் வானோர்கள்
பொருந்துபதம் நிலைநிற்கப் போற்றுவார் புலவர்களும்
மருந்தாகி வாமுதரான் மணியேகின் கழல்கண்டிங்
அருந்து யராம் பிறப்பறுப்பான் யானு முன்னைப் அணுகுவேனே 35

அணுகுமே நால்வேதம் மத்தாகீ யருனென்றே
பனைசூழ தேரானிற் பல்லவரும் வந்துநிற்பார்
சினையில்லா வெம்பெருமான் னென்றென்றே யேத்திநிற்பார்
அணைவாரார் நின்னடிகள் ஆசிமுதற் பரம்பொருளே 36

பரம்பரனே பல்லுயிர்க்கும் பதிவுதரா னிடைமேவி
விரும்பும்வரங் கொடுப்பவனே வேண்டுவது முண்டோ நான்
தரும்பரிசு தனை யொழியத் தருவாய்நீ வேண்டியவை
அரும்பணிகள் பல செய்தே அமைவதுமென் கடனாமே. 37

கடனெனது பணி செயலே கருதுபய னெனதலவோ
திடமுடனே யுதரானிற் சேர்கணைநா யகதேவ
படமெழுதி யுனதடகன் பதித்திடுவே னெனதுளத்து
கெடுமுன் மென்னின்மலனே நின்புணர்ப்பு நிகழ்ந்திடுமே. 38

திகழ்வனன் எல்லாம் நிகழ் நீடுதரான் நற்கரும்பே
இகழ்புகழ்க ளில்லைவினி வேங்கித் தவித்தவிலே
முகிழ்முலைவல் லபைகணவ மூவுலகு மாள்வானே
திகழ்தருநின் சேவடிக்கீழ் சிறீயேங்கட் டபமறைவே 39

மறைமுதனூ லாராய்ந்தென் மரபுவழி பேசியுமென்
அறைபுனல்சே ருதரானி வாரவம ரானைமுகர
இறைபொழுது மொருவழியி லுளமொன்றி நில்வாக்கால்
செறுபுலன்கள் சிறுமைசெயச் செம்மைநிலை சேய்த்தாமே. 40

### கட்டளைக் கலித்துறை

செய்த்தது சேரார்க்குச் சேர்ந்தார் நயப்பது உதரான்
வாய்த்த விநாயகனே வாச மலர்தூவி ஆசையைவாம்
நீத்த மனத்தார் நிலைத்த குறியார் நினைவி வென்றும்
பூத்த புனிதன் புலனெனக்குக் கெட்டிப் புகார்முகனே 41

புகார்முகத் தெஞ்தை புகழ்பய பேசிப் புனகமெழ
முகமெலாம் கண்ணீ ரருவி பொழில் முழுமுதலே
அருள் வார்வல் கரைகடந் தங்கம் நடுநடுங்கி
புகலே யுதரா னெனநயைந் தேனைந் புரந்தருளே. 42

புரந்தரன் மாலயன் போற்றவும் போதங் கடந்தவனே
இருவருல் சேத்து மிணையி லுதரா னிலஞ்சியமே
அரவனே யானை முகவனே யென்றே யரற்றக்கண்டு
விரவல்லராகி வெருண் டோட வென்றுநான் வீழ்வதுவே. 43

வீழ்வது வேழ முகத்து விநாயகன் மென்மலர்த் தாள்
கேழ்கிளர் கேளுங் கிளையொடு கேண்மை யெலாமவனே
வாழ்வி லுவகை மலர மனமு நிறைவுறுமே
தாழ்வில்லை யென்றுந் தளரோ மெமக்கிளை யாருளரே. 44

உளரோ னொருனர் விநாயக னன்றி யுலகனைத்துந்
தளரா வகையிற் றத்த நிலையிற் றனித்தியக்க
கிளர்பூத மைந்தா யவையல்ல வாகிக் கெடுதலின்றி
மிளிர்வா னுதரானில் மேவிய வேத விழுப்பொருளே. 45

விழுப்பொரு ளேயெல்லைகள் வித்தக வேழ விநாயகனே
பழப்பில் கருணைப் பழம்பொருள் பைந்தார் புனைந்தடியார்
வழுத்த வரமருள் வள்ள லுதரான் பதிக்கரசே
இளைத்துன் னருள்வழி சேவித்து நிற்குந் திருவருளே. 46

அருளாசி யானை முகவ வடியே னடியடைந்தேன்
கருவழி வாரா வழியொன்று கண்டேன் கலக்கமிலை
பெருநெறி பேணும் பெரியர் பிறளா தெளிவுடையார்
துரியமுங் கடந்த துணையா வுதரா னுறை பொருளே 47

பொருளே யெனக்குப் புகலிடமேயுன்னைப் போற்றுகிலார்
னெருளே வினையேன்றன் விக்கினங்க டீர்ப்பாய் விநாயகனே
தெருளுடைத் தீராக கடறு முதரானிற றேனமுதே
மருளில் மணியே மறைமுத ரோடும் மலைமருந்தே. 48

மலைமருந் தேகன் மணியே யுதரான் மருவினர்க்கு
நிலைவிருந் தேயென் நினைவக லாத நிருமலனே
கலைமதி சூடுங் கருவே யுலக மனைத்தினுக்கும்
உலைமெழு கென்ன வுருவே னுன்னை யுறுவதற்கே. 49

உறுவோர்க் குயிர்த்துணை யற்றவர்க் கற்ற வரும் பொருணீ
பெறுவது வேண்டிய பிரியே னுதரான் பதியை யென்றும்
நறும்புகை தீபம் நல்மலர் மாலை பிறவுங் கொண்டு
மறுவில் மனத்தொடு வந்தடைந் தேனுனை வந்திக்கவே. 50

## அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

வந்திப் பவர்க்கு வல்வினையை மாற்றி நல்ல கதிகொடுப்பர்
முந்திப் பவர்க்குச் சிந்தையிலே தேனாய் விளைந்து தித்திப்பர்
பக்திப் படையார் பவளநிற வண்ண ருதரான் பதியுறைவர்
தந்தி முகத்துத் தனிமுதல்வர் ரவரார் தலையா ளுடையாரே. 51

உடைய வரசே யுளக்குகையையே வுதரான் பதியமுதே
வடிவ மெழுதி மனத்திரையில் வைத்துப் போற்றும் வணங்கியேன்
செடிசே குடச மிது வென்னைத் தன்பா லீர்த்துச் முதைக்குதையோ
கெடிது நினைய நகயமில்லை நீராய் மாய்ந்து மடிவதுவே 52

மடிவார் மண்ணிந் றோற்றியவர் மறலி கொண்டு போவதன் முன்
படிமேற் பூசிப் புனைந்திருந்து பாழு முடற்கே பணிசெய்து
நெடிது காலங் கழிக்காமல் நீறு புனைந்து நீடுதரான்
பாடு சேர்ந்து மனமொருக்கு வாழ்தல் கடனாம் மனத்திரே 53

மனத்தீ ரிங்குகீ ரென்செய்தீர் மருவீருதரான் பதியமுகை
நினைத்த வழியே செல்கின்றீர் நீடா வுடைலைப் பேணுகின்றீர்
தினைத்த பொழுதிற் சிதைந் தொழியுஞ் சிறிய வின்ப மின்பமல்ல
மனத்தை யொருக்கி யுருக்கிடுவீர் மாருவின்பம் வாய்த்திடுமே. 54

வாய்த்த பிறவி பெற்றிருந்தும் வழுத்தி யுதரா னடையகிவீர்
பேய்த்தே ரனைய திவ் வாழ்வு பேரா னந்தப் பெருவாழ்வுஞ்
சேய்ந்தே நுமக்குச் செம்பொருளாச் சிந்தா மணியின் சந்நிதியில்
சாய்த்தே தலையை வணக்குறுவீர் சாந்த நிலையுந் தான் வருமே 55

வருவ தெல்லா மவனருளே வாட்ட முறுவ தென்னுனக்கே
மருவி யெல்லா மாமவனே மன்னி யுதரா னமர்கின்றான்
அருவு முருவு மவன்வடிவ மன்றி நின்ற வருவுருவன்
கருவா யுலகுக் குறுகின்றான் கவற பொழிவாய் களிமனமே 56

மனத்தைத் திருத்தி பாண்டருள்வாய் மாசி லுதரான் மகிழ்வாழ்வே
தனத்தைத் தரையை நான்வேண்டேன் தருவாய் தாளிற் பெருகன்பு
அனைத்து மாகி நிற்பவனே அவையுங் கடந்த வப்பாவே
நினைத்த நினைப்பும் நீயன்றே நினைவு மாற்ற லிலையெனக்கே 57

எனக்கோ ருறுதி கண்டுகொண்டே னெழில்சே ரதரான் பதியதனில்
பனைக்கை முவேன் பாதமலர் யான்செல் தவமே தவமனகு
மனக்கண் முன்னே வருங்காட்சி மயக்கில் யானென் பரிசிழந்தேன்
நினைக்கும் நினைவும் மறந்துகின்றேன் நீடுஞ் சுகமும் பேசாதே .58

பேசவரிய பொருமானார் பேணிப் பரவ வெளிவருவார்
வாச மலரின் மணம்போல மன்னி யுதரான் வதிகின்றார்
நேச முடைய வடியவர்தம் நெஞ்சம் நீங்கா நிலையினார்
பாசக் கடலைப் பருகிடுவார் பலகாற் பரவிப் பணிவேனே 59

பணிவார் சிந்தைப் பழவினைகள் பாற்றும் பரமாவுனை யிரந் தேன்
தணியாத் துயரந் தணித்திடுவாய் தாயிற் சிறந்த தயாபரனே
மணியே பொன்னே மரகதமே மண்ணீ லெவர்க்கே கனை கண்ணே
அணியர் வயல்சூ ழுதரானில் அமருமொருவ வாரமுதே. 60

## எழுசீர்க் கழில்நெடில் ஆசிரிய விருத்தம்

அமுதம் பெருகிய றீவினி னிறையு மானந்த தனிமுதலே
இமையவ ரிடர்கள் களையு மிறைவ வெனதுயர் நீக்க லுனக்கரிதோ
அமைதியி னிலவு மணிவய லுதரா னமர்தரு மானை மாமுகவ
திமிரங் கெடவே தெளிவித் தெனையு மடிமை யெனக்கொள லுன்கடனே61

கடனென நன்றெ கைதொழு தேத்த லுனகட னென்னைப் புரந்திடுதல்
மடமைகள் கழிய மதிதரல் வேண்டும். மன்னுமுதரான் பதிவாழ்வே
கருநடைக் காலன் கைக்கொள வருவான் கைதவன் கொள்ளுமக் கணத்தில்
சீடமுட னுன்னை யுன்னிடு முணர்வு தருவா யுன்னடி சிரம்பூண்டேன்.62

பூண்டுகொண் டடியேன் புதமலர்க் கழல்கள் பொய்புற வானவை விடுவேன்
நீண்டகற் சுடரே நிமலனே யுதரான் நீள்பதி யமர்தரு நாதா
தீண்டுதற் கரிய வல்லபை கனவ திறல்கெட வவுணினக் காய்ந்தாய்
மூண்டவல் வினையை முருக்கியென் பிறவி வேரற வெறிந்திட லரிதோ 63

அரியநீ யயன்மால் முதலிய தேவர்க்கடியவர்க் கெளிவரல் கண்டும்
பரிவில னுனக்கே பண்ணிடேன் பூசை பாவியேன் செய்தன பிழைகள்
பெரிய நீ பொறுப்பாய் சா லுதரான அமர்தரு ளொருவனே பிரானே
கரியே களிறே கற்பகக் கொழுந்தே கதிர்விடு கனகோ மணியே 64

மணியே மணியினொளியே மதிப்பவர் மனமணி மன்னிடும் விளக்கே
பிணிவா ரெனைமிக வாட்டுவ ரிவ்வுடல் பெருஞ்சுமை இதுகழித் தருள்வாய்
அணிவய லுதரா னமர்தரு மரசே ஆனைமாமுகப் பெரும்பொருளே
தணிமன முடைய தவறா பெரியோர் மூழ்கிடு மின்பசா கரமே. 65

சாகர மாமிப் பிறவியின் கரையைக் காணவேண் டிடின்நீ மனமே
மாகமாச் சோலை சூழுத ரானே மறுவொழித் தனுதினஞ் சென்றே
ஏகநா யகனே என்னுயிர்த் தலைவா இறைவனே யெனமுத் திடுவாய்
சாகர நீந்தித் தனம்பல நிறைந்த சரைமினைச் சாருதவ சரதம் 66

சரதம் சமானசாதன மன்றிமற்றெவாஞ் சலசயப்பென்றே
விரதிக னறைந்தார் விநாயகன் பாதம வேருறு மனத்திடைப் பதித்தே
பரகதி தருவாய் பண்ணவ முக்கட் பரமனே யெனப்பரவிடுவாய்
விரகிடும் மோன நிலையது வேத முதல்வன் துறவுந்தான் வருமே 67

வருமுப சாந்தம் மருவா தெமபயம் வாவுநா டதுவழி திறக்கும்
சரவுள வைந்து புலன்களு மடங்கக் கணபதி சரணெனப் புலம்பி
உரைதரு மாறி யுரோமங்கள் சிலிர்ப்ப யுதரான் பதியிடை யணுகி
பரவிட வல்லார் பாக்கிய வான்கள் பந்தமு மிலையவர் தமக்கே 68

தமக்கென வாழாப் பிறர்க்குரி யாளர் தத்துவ நெறிநிலை நின்றார்
எமையுடை யுதரா னிறையடி மறவா விதயத்த ஈத்துவக் குறுவார்
தமையடை வோரைத் தார்மிக வழியிற் சார நிறுத்திடுத் தகையேர்
இமையவர் தாமு மிதமுடன் றேழுவா ரவரெமை யாளுடையாரே. 69

ஆளா வுடைய வமல விநாயக னறிவுக் கறிவா யமர்ந்திருந்து
தாளா தடியவர் தம்வினை நீக்குத் தன்னடிச் சார்பு தருகின்றான்
மாளா தவனடி வாழ்த்தி வணங்க நம்வினைக் கட்டு மகிழ்ந்திடுமே
கேளாம் மனமே கெடுவினை களையக் கிட்டுவை யெங்கள் கணநாயகனையே 70

## கலிநிலைத்துறை

கணநாய கனே கரிமா முகனே கணினாரும்
மணமார் பொழில் சூழ் உதரா னமரும் மறையோனே
இணைமா வுனையே நினைவா ருளையே திகழ்கின்றாய்
நனியே யுனைநான் நலந்திங் கின்னும் நவில்வேனே 71

நவில்வார் துன்பம் நலியும் நல்ல மனமுண்டாம்
செவிவாய் முதலாம் சீரில் புலன்கள் செயலொடுக்கும்
புவியி லுதரான் பதிவா ழிறையைம் போற்று மின்கள்
குவிமின் கரங்கள் கொய்மலர் கொண்டே குறைந் தடைமின் 72

இறைவில் நிறைவோ கோதில் லமுதே குணக்குன்றே
மறையும் மறியா மரகத மணியே மாசில்லா
நிறைபுனல் வயல்சூ ழுதரா னமர்வாய் நினையடைய
முறையில் முயல்வான் மும்மல நீங்கும் முத்தர்களே 73

முத்தி முதலினை மூவரு மறியா முன்னவனை
நித்தனை நித்திலத் தொத்தினை நீங்கா துதரானில்
பத்தர்கள் பணியும் பரமனைப் பற்றியென் னுள்ளத்துள்
பொத்தினன் பொன்பினைப் புரந்தர னாதியர் தேடுவரே. 74

தேடுவர் தேவர்கள் சீருத ரானுறை செம்பொருளை
வாடுவர் காணார் மறுகுவர் சிந்தா மணியெனவே
பாடுவர் பரவினர் பாச மறவே பற்றிடுவர்
கூடுவர் தம்மிற் குறைவில தேதும் நிறைதவமே 75

நிறைதவம் நீடும் நிலையினர் நீர்வயல் சூழுதரான்
உறையிறை துணையா மெனங்ன நெஞ்சின ரச்சமியர்
தறைமுதற் பூதந் தாமுறு நீலைலிற் கலங்கிடினும்
குறைவிலர் தந்நிலை தளரா குறுதியிற் குலாவுவரே. 76

குலாவுதி மனமே யுதரான் குருபரன் கோலத்தினை
நிலாவுதி யின்பப் போதையி யியைன்பும் பிணைப்பினிவே
புலாலொழு கொன்பது பொள்ளற் கலமிதை மெய்யென்பரே
கலாம் விளைத் தவர் கலக்குவர் வேண்டாங் கழித்திடுதி 77

கழித்தெறி பண்டங் கருத்தினில் வையேல் காலமிதை
சுளித்து வரும்நமண் சோரனை சோரி கக்கவைப்பான்
விழித்தெழு மின்கள் வேழ விநாயகன் விசிர்தனுறை
பழிப்பொழி யுதரான் பதியைப் பரவிப் பணிமின்களே 74

பணியி னுதரான் பதியுறை பரமனைப் பண்டைவினை
துணிமின் றூய மனந்தரா யருள்வழி நின்றாடுமின்
திணியிரு ணீங்குந் தேவருஞ் தேனாத் திருவடிகள்
அணிமைய தாகு மாலே மாக்கும் பிறவினையே 75

வினைவச மிதுவென விளம்புத வொழி வீண்மனமே
எனையுடை யுதரா னேரம்ப னென்றே யெந்நாளும்
நனைமலர் தூபந் தீபமுங் கொண்டு நாடிடுவாய்
வினையுன வேரொடும் விடும் சரதம் விரகிதுவே. 76

## வஞ்சி விருத்தம்

விரகொன் றுளது வினைகெடவே
மருவி யுதரான் மருந்ததனை
பருகி மனமே பரப்பறவே
யுருகி யுளமு மொருங்கிடுவீர் 81

ஒருங்கு முளத்தே யுறைந்திடுவான்
பருங்கை யானை முகத்தவனை
நெருங்கி யுதரான் நினைந்திடுவீர்
சுருங்கும் வினைகள் துணிவிதுவே 82

துணிந்த மருப்பொரு கையுடையான்
பணிந்துத ரான்பதி மன்னிடுவார்
தணிந்த மனத்தவ ராயவர்தம்
திணிந்த மலவிருள் குன்றிடுமே 83

குன்ற மெறிந்த குமரவேளும்
மன்றலில் வள்ளியை வேட்டிடவே
நன்று துணைபுரி நாயகனை
சென்றுத ரான்பதி சேர்குவமே 84

சேர்குவஞ் சேவடி சிந்தித்தே
நீர்வயல் சூழுமுத ரானிறையை
பார்முத லாய பரம்பொருளை
பூர்வ வினைப்பயன் பொன்றிடுமே 85

வான்றின முன்னுள பொய்மையெலாம்
சின்றெனக் காரிணை யிவ்வுலகில்
குன்ற லிலாவுத ரான்பதியை
ஒன்றிய வுத்தம னுள்ளறவே 86

உள்ளத் துறுமுத ரான்பதியெம்
கள்ளத்தைக் கல்விக் கழித்திடமே
தெள்ளத் தெளிந்த மனத்தினொடும்
வள்ளல் பிரானை வழுத்துவமே 87

வழுத்துவர் வானோர் வளம்பெறவே
விழுத்தகு முதரான் விநாயகனைத்
தழைத்தெழு மன்பு தலைப்படவே
பழுத்த மனத்தினர் பாடுவரே 88

பாடுவ ராடுவர் பலர்கூடி
நீடுத ரானிடை நின்மலனை
காடே யுறைவிடம் கந்தையுடை
ஓமடு பிச்சை யுன்பதுவே 89

உண்பது பிச்சை ஊரில்லை
நண்பகல் கங்குல் காணார்கள்
எண்பெறு முதரானிறை வடிவே
பண்புற வெங்கும் பார்ப்பார்கள் 90

## வஞ்சித்துறை

பார்ப்ப ரீசனைக் கூர்ப்ப ரன்பிணை
தீர்ப்பர் தீயினை பேர்ப்பர் பிறவியே 91

பிறவி யேரறந் துறவி யாருவீர்
அறவ னாரடி நிறைமி னன்பினால் 92

அன்பின் நீர்மையால் முன்பு நின்றடி
இன்பி னேத்துவீர் துன்பமில்லையே 93

இல்லை யல்லவே எல்லை யில்புகழ்
நல்லர் பாதங்கள் சொல்லி வாழ்த்தவே 94

வாழ்த்த வாயுள தாழ்த்திச் சென்னியை
பாழ்த்த விவ்வுடல் வீழ்த்தல் செய்மினே 95

செய்மின் பூசனை கொய்மின் பூவினை
நைவின் நெக்குளம் துய்மி னீசனை 96

ஈசன் பேரினைப் பேசி யாடுவீர்
பாசம் போயறத் தேசின் மல்குவீர் 97

மல்கி வாழ்மினோ அல்ல வில்லவர்
செல்வா சேவடி பல்கிப் பற்றுமின் 98

பற்றுமின் கழல் சுற்றம் மற்றவன்
குற்றம் நீக்குவான் கெ ாற்ற மும்மதே 99

உம்ம தாருமே யம்மை யிம்மையும்
செம்மை செய்யும் மெய்ம்மை யுத்தமன் 100

திருச்சிற்றம்பலம்

# சிந்தாமணி விநாயகர் திருப்பல்லாண்டு

திருச்சிற்றம்பலம்

தாய்தந்தை சுற்றமெலாந் தந்திமுக னேயன்று
ஓய்வின்றி யுன்னியிடு முயர்ந்தோர் களுளத்தே
பாய்கின்ற தேனமுதாம் பண்ணவற்குப் பசுஞ்சுடர்க்குத்
தூய்மலர்களா யேநின்று சொல்லுவோம் பல்லாண்டே 1

சிந்தா மணிப்பெருமான் றேவாதி தேவனெனும்
நந்தா மணிவிளக்கு நாடினர்க்கு நல்லுறவு
பைந்தார் மணிமார்பன் பல்லூழி வாழ்க வென்றே
தந்திமுகத் தாதைக்குச் சாற்றிடுவோம் பல்லாண்டு 2

கற்றவர்தம் முள்ளத்து முதரான் பதியினிலும்
நற்றமிழால் வாழ்த்தினர்தம் நாவினிலும் நண்ணினர்க்கு
பற்றினர்தம் பற்றாகும் பந்தமிலாப் பரம்பொருட்கு
கொற்றக் கணபதிக்குக் கூறிடுவோம் பல்லாண்டு 3

வேழமுகத்து விநாயகற்கு வேதியற்கு
பாழான வெண்மல் குவியப் பணிப்பவற்கு
ஆளான வடியவர்தம் மல்ல லறுப்பவற்கு
கோளான நீக்குங் குழகற்குப் பல்லாண்டு 4

ஆகுவா கனத்தெங்க ளானைமுக வண்ணதுருப்
பாகம் வருவிக்கும் பார்முதல் பண்ணினற்குப்
போகம் புணர்த்தியிடும் பூரணற்குப் புண்ணியற்கு
நாகமுக நாதனுக்கு நவிற்றிடுவோம் பல்லாண்டு. 5

எங்கும் நிறைந்து நின்ற ஏரம்ப மூர்த்திக்கு
நங்கன் பிரானாகும் நான்மறையி னுட்பொருட்டு
தங்கும் பிறவிப் பிணியகற்றுந் தாதைக்கு
பொங்கும் கருணைக் கடலுக்குப் பல்லாண்டு 6

ஆதியந்த மில்லா வானந்த வாரிதிக்கு
நீதிநெறி யானவற்கு நீள் புழைக்கை நாதனுக்கு
கோதிலாச் சிந்தையினில்  குளிர்ந்து நின்ற கோமகற்கு
பேதித்துக் கோதாட்டும் பித்தனுக்குப் பல்லாண்டு. 7

எண்ணிறந்த யோனிகட்கு மிச்சைநிறை வாகியிடத்
தண்ணிளி செய் தந்திமுகத் தற்பரமாம் நாயகற்கு
திண்மையின் நின்றவர்க்குத் தேனாகித் தேங்கினற்கு
வண்மைநிறை வள்ளலுக்குப் பல்லாண்டு பல்லாண்டு 8

சந்தத் திருமுறைகள் சாகுமிட  மெங்கென்று
மைந்தன் நம்பி கேட்க மன்றதனி லென்றாற்கு
பைந்தமிழ் சொல் பாட்டி பனிமலைசேர் கயிலையினில்
சுந்தரன்முன் செலவிட்ட தூயவர்க்குப் பல்லாண்டு 9

தந்தையுடன் தாயரையுஞ் சார்ந்து வலம்வந்து
கந்தனுக்கு முன்னாகக் கனி கொண்ட கணபதிக்கு
செந்தழல்போல் மேனிச் சிவகுமரன் செம்மலுக்கு
சிந்தா மணியாற்குச் செப்புவோம் பல்லாண்டு. 10

திருச்சிற்றம்பலம்

# அராலி அகாயக்குளம் விநாயகர்
## மும்மணிக்கோவை

திருச்சிற்றம்பலம்

கருணை பொழியுங் கணபதி வாழ்க
அருணனி சுரக்கு மமுதே வாழ்க
அகாயக் கரையெம் அரசே வாழ்க
தகாதன கடியும் தனமே வாழ்க
மாதவின் கோயில் மணியே வாழ்க
கோதக லடியார் குறியே வாழ்க
அறியாப் பருவத் தடியனேற் கருளி
நெறியிடை நிருத்திய நிமல வாழ்க
அன்பு நிறைந்திட நிறையும்
இன்பவூற்று வாழ்க வாழ்கவே. 1

வேதங்கள் தேடியுங் காணா விநாயகனே
மாதாவின் கோயில் மருந்தே - ஆதாரம்
பல்லுயிர்க்குமான பரமா பணிகின்றேன்
அல்லல் கெடுத்தென்னை ஆள் 2

ஆளாம் நா மென்று மமல னகாயக் குளத்தவற்கே
நாளாய வீணே கழியாது நாமவினை நண்ணுவோம்
தாளா தவன்றாழ் தலைமீது தாழ்ந்து தரித்திடுவோம்
கோளாய நீக்கிக் குறித்தெம்மைத் தன்னடி கூட்டுவனே. 3

கூடு முல்கு குலைந்திட முறையே
நிலநீர் அனல்வளி நீடு வெளி யென
உயிரவை பலவும் ஒடுங்கின நின்னிடை
கையிரத மீட்டும் மற்றவை யெல்லாம்
தோற்றுவித் தருளித் துகளற நிற்க
அளித்தனை அகாயக் குளமமர் அமல
பாகம்வரநீ பல்லுயி ரெல்லாம்

போகந் துய்த்திடப் போக்கினும் பின்னும்
இருவினை ஒத்து மலமகல் நிலைவர
குருவாய் வந்துகுரைகழல் தந்து
இன்ப வீட்டி ல் இருத்துவை
இவ்வகை இயற்றுவை என்றுமைந் தொழிலே 4

ஐந்தொழில் செய்து மவன் சலிப்படைந்து
பந்தம தெய்திடான் பார்த்திடில் - தந்திமுகன்
கற்பனையா லெல்லாங் கருதி முடித்திடும்
மற்றவற் கென்னோ மறு. 5

மறுவில் மனத்தவர் மாதாவின் கோயில் வணங்கி நிற்பர்
உறுபய வென்று முளங்கொண்டு நில்லார் உளத்திலெழும்
பெருகிடு மன்பொன்றே பேரார்வமாய பிழம்பது வாய
மருவிடு வார்மன்னி மாறில் மகிழ்ச்சி மலர்ந்திடுமே. 6

மலர்ந்த முகத்தொடு மாதாவின் கோயில்
கலந்தரு பணிகள் நலமுறப்புரிவர்
புகழும் பேரும் பொருளென மதியார்
கெழும் இசையும் ஒன்றென உன்னுவர்
பசியுந் தாகமும் பறந்திட முயல்வர்
நிசியும் பகலும் நித்த லும் முயல்குவர்
நித்திய நியமம் நெறிபட நிறுத்துவர்
பத்தி ததும்பப் பணியே புரிகுவர்
அமல னகாயக் குளத்து
நிமல னடியார் நீடுவாழியவே 7

வேத சிரசுக்கு மெட்டா விநாயகன்
ஆதி அகாயக் குளத்தமர்ந்த - சோதி
அடியவ ருள்ளத்திலூறு மமுது
முடிவொன் றில்லா முதல் 8

தஞ்சமொன்றின்றித் தளர்ந்தேன் தனிப்பெருந் தந்திமுகா
அஞ்சலென்றென்னை யணைத்தருள் செய்திட லுன் பரமே
மஞ்சணை மாதாவின் கோயி லுறையும் மருக்கொழுந்தே
கஞ்ச மலர்ப்பதங் காட்டிக் கசடனைக் காத்தருளே. 9

அருளில்லாத அன்னிய னந்நாள்
இருளில் மூழ்கு மிதய னிரங்கான்
ஆலயம் பலவு மழிக்கவு மழியா
வாலிய நிலையது மாதாவின் கோயில்
சாலவு மடியார்க் கருள்பா லிப்பது
கோல நிலையது கும்பிட நல்லது
நல்ல வரங்கள் நாம்பெற அளிப்பது
ஏல இடர்கள் தீர்ப்பது
கோலக் கணபதி கோயி லிதுவே. 10

இந்தப் பிறவியெமக் இங்கு வாய்த்தது
தந்திமுகத் தந்தையைச் சார்ந்திடவேட பக்தமலாம்
மாய்ந்தொழிய மாதாவின் கோயில் வணங்கிடுவோம்
ஆய்ந்த இனமலர்க ளிட்டு 11

இட்டமுடன் தொன் டிளிதாற்று நல்லோ ரிதயமதில்
கட்டுதி நின்றிடும் மாதாவின் கோயிலில் மாமுகனை
எட்டாய மூர்த்தியா வெங்கும் பரந்திசைந் தேழ் பொழிலும்
முட்டா தனித்து முழுவதுந் தானாய் முளைத்தனனே 12

முளைத்தான் முழுதும் தானே யாகி
தளைத்தான் பலவாய்த் தயாபர மூர்த்தி
நிறுத்தின னைவையும் நியதியி லியங்க
அறுத்தணைந்து மகாயக்குளத்தன்
வல்லபை யோடு வளம்பெற வதிந்தும்
புல்லுத லில்லான் பொருந்தி யெவையும்
தானே தானாய்ச் சலிப்பற விருந்தான் 13

எல்லாஞ் சந்நிதி இயங்க
மல்லல் ஞாலம் மருவாதிருந்தானே
வானோரறியாவளனவேரம்பன்
தான் றானாய்ச் செய்து தனையடைந்த நல்லோரை
ஏன்றே இடர்களை வன் ஏரம் பன் - ஆன்ற விந்த
மேலோர் அவனையே மேவி வழிபடுவர்
ஏலார் பிறரைத்தே வென்று 14

என்றும் அருள் தரஎன்று மின் றானிப மாமுகவன்
ஒன்றிய உள்ளத்தில் உன்னி அவன் மாட்சி ஓர்ந்து நிற்போம்
நன்றருள் நல்குவன் நம்மிடர் நீக்குவன் நாநிலத்தில்
துன்று பிறவித் தொடக்கறச் சோதியாய்த் தோன்றுவனே. 15

தோற்றம் மறைவு தொன்மைய புரிதல்
மாற்றமு நிலையு மண்ணினி லியற்கை
பகலுமிரவும் வருதல் போல
இன்பமுந் துன்பமும் மாறி வந்திடும்
நன்மை தீமை விருப்பு வெறுப்பதிய இரட்டைகள்
இரட்டையொழிய ஒழியும் பிறவி
இரட்டை இல்லான் இபமுக னொருவனே
அகாயக் குளக்கரை அமர்ந்தா னவனே
மாதாவின் கோயில் சென்று
தாதார் மலர்கொண்டு தாழ்ந்து பணிவமே 16

பணிவுட னின்சொல னாகிப் பரிவாயே
மணியாகும் மாதாவில் கோயிலை - பணந்திட
நீங்கா மலமுதல் நீங்கு மடி நீழல்
தூங்காமற்றூங்கியே நின். 17

நில்லாப் பிறவி நிலைகெடுத்துத் தொன்மை நிலையாகி
வல்லார் முலைமங்கை வல்லபன் மாதாவின் கோயிலுளான்
கல்லார் மனத்துக் கசடறக் கால வனங்கடந்தான்
புல்லார் மனத்திடைப் போதான் புணையவன் புண்ணியர்க்கே. 18

புண்ணியர் போற்றும் புனிதன் புகர்முகன்
மண்ணவர் வாழ்த்த மாதாவின் கோயில்
நண்ணி உறைவான் நல்லருள் செய்து
சர்வமு மறியும் ஞானஞ் சடைமுடி
கர்வ மிலார்க்கருள் கண்க ளிரண்டு
மோதக மேந்திய முருகமர் துதிக்கை
அங்குச பாச மேந்திய திருகை
துங்க வபயந் தந்த தொருகை
தூக்கிய பாதங் காட்டிய தொருகை
ஞான கிரியா சத்தி திருவடி
ஞான பாணு ஞான உருவாய்
இணைய தன்மையிலிருந்தனன்
புனைமல ரடியினைப் புகர்முகக் களிறே 19

களிற்று முகனடியார் காதலித்து வாயில்
மிழற்று மிசைகேட்டு மெல்ல - மிழற்றுவன
கிள்ளை யொடுபூவை கேளிருடன் கூடி
உள்ள மலைய உவந்து. 20

உவந்துநீ மாதாவின் கோயி லுறை வாய் உமாசுதனே
அவந்தரும் பௌவத் தழுந்தா வகையெனை ஆண்டுகொண்டு
தவந்தரு மேலாம் நெறிதந்து தாயாய்த் தழுவிடுவாய்
சிவந்தரு மெய்ம்மைத் திருவருள்டைந் தென்னுஞ் சிறப்புற 21

சிறந்த வானோர் சிந்தைக்கு மெட்டான்
அறம்புரி அறவோர் அறிவிற கெனியன்
தாதார் வண்டுசூழ் தண்பொழில் நடுவண்
மாதாவின் கோயில் மன்னிவீற் றிருப்பன்
சுட்டிறந்த தொல்லோன் சோதி விநாயகன்
மட்டில் சிவபோத உணர்விற் படுவோன்
இணையனை உன்னும் அன்பினில்
முனைவினை கெடுக்க முகிழ்த்திடு மின்பே. 22

இன்ப உருவனை எண்ணி இரங்கிலேன்
துன்பத் தொடக்கறேன் தொந்தங்கன்ட துன்புறுத்த
மாழ்கின்றேன் மாதாவின் கோயில் மணிமருந்தே
தாழ்விலா வாழ்வெனக்குத் தா. 23

தாவுன் னடிக் கன்பு தாழ்ந்து பணிந்துனை நான் சார்ந்துய்ய
தேமன்னு தேன் வண்டின் தீம்பாடற்கீத ஒலியுட னே
பாமன்னு தண்டமிழ்ப் பாமாலைப் பாடலொ ட ாடலரும்
மாமன்னு சோலை சூழ் மாதாவின் கோயி லமர்ந்தவனே 24

அமைந்த மனத்தர் அடிய குழைப்பில்
சமைந்திடு கோட்டம் சார்ந்தினி தமர்ந்தான்
பண்டைய கோட்டம் மாதாவின் கோயில்
பண்பிலன் அழிவில் படாததோர் பண்பது
வேண்டினர் வேண்டுவ வேண்டியாள் களிப்பது
நம்பினர் நெஞ்சில் ஈரமளிப்பது
சூழ்ந்துவந் தவர்க்குத் தொல்வினை கெடுப்பது
தாழ்ந்து பணிபவர்க்குத் தன்அடி கொடுப்பது
இற்றிதன் பெருமையை எண்ணி
நற்றறத் தோர்கள் நாளும் பணிவரே. 25

பணியேன் பரமனைப் பன்மலர் தூவி
அணிநயனவனடிக் கன்பாய் - திணியாருங்
கன்னெஞ்ச னேனென் னே காதலன் போல் கடித்தேன்
உன்னன்ப னெவ்வாறுரை 26

உரையா லுணரப் படாத ஒருவன் விநாயகனை
அரைமாத் திரையு நினையே னவமே அழிந் தொழிந்தேன்
பெரியோர் துணையும் பெரிதெனப் போனேன் பிணங்கு கின்றேன்
அரிதே எனக்கினி ஆணைமுகவன் அடிமலரே. 27

மலர் மாலை சூடி வந்தனன் கணபதி
காலங் கருகிய பாநாட் கங்குல்
ஞாலமெல்லாம் நல்லதுயில் பயில்வன

கண்ணிணை நோக்கினான் செயலற்று நின்றேன்
தலைகை வைத்தான் நானழிந்து மாண்டேன்
மறை பல பேசினன் மனமு மழிந்தது
கைவளை கழன்றது கலையுஞ் சோர்ந்தது
மெய் விதிர்ப் புற்றது மேனி வெளுத்தது
கண் மழை பொழிந்தது கன்னெஞ்சம் வெதும்பிற்று
கரந்தனன் கள்வன் மயங்கி நின்ற முதேன்
ஐயகோ இவன்செய ல்நியாயம்
செய்வனக இதுவோ செகத்துள்ளீரே 28

செகத்துளா ரெல்லாஞ் சரசமாட
அகத்து னமுதம் பெருகிட முகத்தில்
அயர்ச்சி அகல அடியின் கீழ் உள்ளம்
உயர்ச்சி உறுவதென் நான் 29

நாளொடு கோளுு நமக்கில்லை என்றும் நடுக்கமுறோம்
ஆளாவோ மென்று மகாயக் குளத்து விநாயகற்கே
மாளா வினைகளை வாட்டின மனத்தை மடித்திடுவான்
கோளாய நீக்கிக் குழவன் கருணை பொழிந்திடுமே. 30

திருச்சிற்றம்பலம்

# அராலி கருணா கரைப்பிட்டி விநாயகர்
# நான்மணிமாலை

திருச்சிற்றம்பலம்

கருணா கரப்பிட்டிக் கணபதியை வாழ்த்த
வருமாசும் வல்வினையும் நீங்கிட பெருவானஞ்
சேருமே யென்றுந் தேவருந் தேர்வரிய
வாரமது வைத்துகந்தக் கால். 1

காலுங் கனலும் புனது நிலனுங் கதிரிரண்டும்
மேலு மியமான னாகாய மாகி யமர்ந்த பிரான்
நாலும் வாய் நம்பன் கருணா கரப்பட்டி நாடி நின்றான்
மாலு மறியா வழிநல்கி நந்தம் மலஞ்சுடவே. 2

சுடருஞ் செய்ய பொன்மேனிச் சோதிச்சுடரே உனைத்தொழுதேன்
படருஞ் சடையாய் பண்ண வனே பதியே பரமா பரமேட்டீ
அடரும் வினையை அறுத்தென்பதே ஆள்வாய் ஆனை முகப்பொருளே
இடர்தீர் கருணா கரப்பிட்டி எந்தாய்போற்றி போற்றியே 3

போற்றுவர் அன்பினில் பொருவில் தொண்டர்கள்
போற்றுவ னவர்தமைப்புகர்முகக் கடவுளும்
சாற்றருந் தவஞ்செய்துஞ் சார்கிலான் வானவர்
தேற்றமி லாதவர் சேனிடைத் தேவர்கள்
அருள்செய வேண்டியே ஆதாரம் பெருகிட
கருணா கரப்பிட்டி காதலித் துறைந்திடும்
மருளுடை வானவர் மயங்க
தெருளுடைத் தொண்டர் தெளியமுன் நிற்குமே. 4

முன்னின் றெனையாண்ட மூர்த்தி முழுமுதல்
தன்னை நினையத் தருகின்றான் - பின்னை
கருணா கரப்பிட்டி காமுற்று நின்ற
பெருமா முகனென்றே பேசு. 5

பேசும் பொருளவன் பேணியென் சிந்தை புகுந்துறைவான்
தேசன் தெரிவரிய தேவன் திறம்பா தேனை யாள்வான்
காசில் கருணா கரப்பிட்டி நண்ணிக் கரந்து நில்லான்
மாசில் மணியொளி வானவர் காணா மறைமுதலே. 6

மறைமுதல் மந்திர வடிவாகி
உறைபவ னுமைமக னுயிர்தோறு
நிறைபவன் நீள்சுடர் நேரில்லா
இறையவன் எங்களை ஆள்வானே 7

ஆள்பவ னாதி விநாயக னொருவனே
ஊழ்வினை உடையோ மவனுடை அடிமைகள்
இன்று மடிமைகள் இனியு மடிமைகள்
மன்றவிவ் வுலகும் மற்றவ னுடைமை
சுதந்திரமுடையோன் சோதிவிநாயகன்
சுதந்திர மிலைநாம் பரதந் திரிகன்
கருணா கரப்பிட்டிக் கணபதி காட்டும்
அருள் நாம் பெறவே அருகதை உடையோம்
அருள்வழி நின்றே அலைக்கும்
மருள்கெடுப் பதுவே மருவிய நெறியே 8

நெறிநில்லா நீதனேன் நீணிலத்து வாடி
குறியின்றிக் கோடுகின்றேன் கோவே - மறுவில்
கருணா கரப்பிட்டிக் களிறே எனைநீ
அருள் தந்திங் காள்வதினி என்று 9

என்று மறவா இதயந் தரவேண்டும் ஏரம்பா
கன்றுங் கயமுகற் காய்ந்த கருணா கரப்பிட்டியாய்
துன்றும் பிறவித் துயக்கறத் தான் தருந் தூமணியே
நன்றல்ல செய்யினும் நாளும் பொறுக்குமென் நாயகனே. 10

காயுத னாகிய நங்குரவன் நாடுங் கருணா கரப்பிட்டியான்
தாயவ னாகித் தனையடைந்த தாபத வேடர்க்குத் தண்ணளியான்
தூயவ ராகிய தொண்டர்கட்குச் சுடர்விடுசோதி தொழும்பு செய்வான்
பாயபரஞ் சுடர்ப் பண்ணவனே படியு மனத்தவர் நெஞ்சினனே 11

நெஞ்சிற் குடியாய் நீடும் நிமலன்
பஞ்சப் புலன்களின் பரப்பை அறுப்பன்
அஞ்சற்கு என்பன் ஆதி விநாயகன்
கருணைக் கடலாய்க் கருணா கரப்பிட்டி
மருவித் திகழ்வன் மாசினை நீக்கி
ஆங்கவன் றன்னை அருச்சித் தேத்துமின்
பூங்கழல் போற்றிப் பூசை புரிமின்
நீங்கமின் பாசம் நீங்க
தாங்குவன் றன்னடி தயா பரன்றானே. 12

தானந் தவஞ் செய்யேன் தாளிணைக்கீழ்த் தஞ்சடையேன்
ஊனே பெருக்கி உழல்கின்றேன் - தேனார்
கருணா கரப்பிட்டி கண்டி றைஞ்சேன் கன்ன
இரு ளுடையேன் ஈடேறல் ஏது. 13

ஏதுமறியா இருவினையேன் பாரில் இளைக்கின்றேன்
பாதகர் செய்து பலகால் பதைக்கும் பழியுடையேன்
கோதில் கருணா கரப்பிட்டி என்று குலவியிடேன்
ஏதோ இனிகான் அடைய இருக்கும் இருள் கதி யே. 14

கதிதரு கற்பகக் கையினன் கருணை பொழிதரு கண் ணினன்
பதிகரு ணாகரப் பிட்டியன் பழவினை பாற்றிடு பண்டிதன்
முதுபெரு மன்பினில் முன்னிய முழுது முதவிடு மூர்த்தியான்
கதியிலி யென்னையு மான்டினி காமரு சேவடி கூட்டுமே. 15

கூடும் அன்பிற் கும்பிட லன்றி
வீடும் வேண்டா விறலின் மிக்கார்
அடினுஞ் சுடினும் அஞ்சுத லில்லார்
வறுமையில் வாடார் செம்மையிற் செருக்கார்
பிணிநோய் வரினும் பேதுறல் இல்லார்
புகழும் இகழும் பொருளெனக் கொள்ளார்
இவரே எம்மை ஆளா உடையாந்
இவர்க்கே தொழும்பு செய்வேன்
கருணா கரப்பி ட்டிகாமுறு களிறே. 16

களிறே கருணா கரப்பிட்டி கண்ணி
தெளியே னருள் வழி நில்லேன் - இளிவந்த
செய்தே திரிவேன் செருக்குறுவேன் தீயேன்
உய்யவகை என்னே உரை. 17

உரைசெய்ய ஒண்ணா ஒருவன் கருணா கரப்பிட்டியான்
கரையில் கருணை அடியார்க் கருளுங் கணபதியை
தரையில் எழுதா மறையடி காணத் தவித்து நிற்க
புரையில் புலனுக் கெளிதாம் புதுமைத் தெம் புண்ணியனே. 18

புண்ணியன் போதங் கடந்தவன் பூரணன்
கண்ணிய கருணா கரப்பிட்டி மேவினான்
பண்ணிய சாத்திரப் பேய் கட் கெட்டாதவன்
பண்ணு மிசையும் போ லெங்கும் பரந்தவனே. 19

பரந்து நிறைந்த பரமா கணபதி
மணியி னொளியே மலரின் மணமே
பண்ணி னிசையே பாலின் நெய்யே
பழத்தின் சுவையே பாகே கனியே
விறகிற் றீயே விசும்பிற் றுளியே
கருணா கரப்பிட்டிக் களிறே கதியே
தேனினு மினியனாகி
ஊனற வுள்ளத் துறுசுவை யாமே. 20

ஆக்கந் தரும்பரமன் ஆனை முகவன்
நீக்கமின்றி எங்கும் நிறைந்துள்ளான் - காக்கவே
வந்தான் கருணா கரப்பிட்டி வள்ளலும்
நந்தா வினையை நலிந்து 21

நலியும் பிறவிப் பிணிகெட நல்ல மருந்துகேள்
மெலியு மனத்தொடு மேவிக் கருணா கரப்பிட்டியை
பலகால் வணங்கிப் பணிசெய வாய்க்கும் பரமசுகம்
அலையா மனமு மடுக்கு மமிர்தம் பெருகிடுமே. 22

பெருகிடும் அருள்பேதமை நீங்கிடும்
அருகிடும மரும் ஆதரம் ஓங்கிடும்
கருகிடும் வினை காலனும் ஏங்கிடும்
மருவு கருணா கரப்பிட்டியை சாரிலே. 23

சார்பு கருணா கரப்பிட்டியானே
சேர்வு மவன்றன் செம்மலரப் பாதம்
அச்ச மில்லை அழுங்க லில்லை
துச்ச மிந்தத் தொல்லை யுடலும்
நமனை அஞ்சோம் நரகம் நாடோம்
நமரே எவரும் பகைவ ரில்லை.
நன்றுந் தீது மில்லை
பொன்றுத லில்லை பூரிப் போமே. 24

பூரிக்கும் புண்ணியரே பொய் வாழ்வைப் போக்கிட்டு
சீரிற் சிறந்து திகழ்கின்றார் - ஏரில்
பொலியுங் கருணா கரப்பிட்டி வாழ்வே
நலியா தெமையாட் படுத்து. 25

ஆளாவோ மெனறுங் கருணா கரப்பிட்டி ஆள்பவர்க்கே
தாளா தவன் பணி யாற்றித் தனைக ளறுத்திடுவோம்
நாளான முன்செய் நவைக ளறுத்து நயந்திடுவோம்
மாளாத வாழ்வும் மறவாத நெஞ்சும் வழங்கிடுமே. 26

வளம்பெறு கருணா கரப்பிட்டி வள்ளல்
துளங்கிய அடியார் துயர்கெடுத் தருளி
நனங் கொடு பணிவார் உவகைள் பெருக்கிய
எந்தறி வறியா அமலனாய் நின்றான் 27

அமலன் அழகன் அறிவன் அற்புதன்
விக்கினந் தீர்க்கும் விக்கின விநாயகன்
ஏதங்களையும் ஏரம்ப மூர்த்தி
கதிதரு கருணா கரப்பிட்டிக் களிறு
கயமுகன் கஜானன் கணபதி என்றே

அற்புறு சிந்தையிற் பரவி
பொற்புறு கழலடி புகழ்ந்துபோற் றுதுமே. 28

போற்று மடியார்க்குப் போகம் புணர்த்தியே
சாற்றரும் பல்வரம் தந்திடுவான் - ஏற்றமாய்
தோன்றும் கருணா கரப்பிட்டித் தொல் லோன்றன்
நான்ற மலர்ப்பதத்தை நாடு 29

நாடிநின் றுள்ள முருகிட நாவு முரைகுளறி
ஆடியும் பாடி அழல்சேர் மெழுகாம் அடியவரை
நீடுங் கருணா கரப்பிட்டி நிமலன் தன்னடியே
கூடும் படியே குறிக்கொண் டருளிடும் கூடிநின்றே 30

கூடி நின்றேன் மனக் கோணினை நீக்குங் கோதில்லா
பீடுறு கருணா கரப்பிட்டி மேவும் பிரானாரே
நாடுறு மனமாங் குரங்கை கலிந்து நம்வினையைச்
சாடுதல் வேண்டும் தந்திட வேண்டும் நின்பாதம் 31

பாதப் பணியே நங்கடனாகும்
நம்மைத் தாங்குதல் கடன் விநாயகர்க்கு
னந்தங் கருணா கரப்பிட்டி யிறையே
இரந்தே னுன்னை முறைஞ்சிப் பதமலர்
பரக்கும் மனமும் பரப்பற வேண்டும்
போது மிவ்வாழ்வு புணர்த்து நல் வாழ்வு
ஆசையும் பாசமு மகன்றிட வேண்டும்
ஆதரம் பெருகி ஓங்குதல் வேண்டும்
உள்ளமு மொடுங்கி ஒன்றுதல் வேண்டும்
கள்ளமுஞ் சுருங்கி கழிதல் வேண்டும்
வேண்டினே னுன்னை விநாயக
மாண்ட உள்ளத்தில் நிறைந்து மன்னுதியே 32

மன்னி நிறைந்த மறைமுதலாந் தற்பரனே
துண்ணி யுனை யடையாத் தொல்வினையேன் - பண்ணுகின்ற
மாதுக்க மிக்க மனைவாழ்வு மண்ணிலே
ஏதுக்கே எந்தாயினி 33

எந்தா இனிப்போதும் இவ்வாழ்வு மேதினியில் ஏரம்பா
நந்தாப் புகழ்சேர் கருணா கரப்பிட்டி நாயகனே
பந்தப் பழவினை பண்ணிப் படைக்கநான் வாடுகின்றேன்
சந்த மறைதேடும் தான்சார ஏங்கித் தவித்தனனே. 34

ஏங்கித் தவிக்கு மடியார்கள் இடர்கள் களையு மேரம்பனை
ஓங்குங் கருணாகரப்பிட்டி யுறையும் பெருமானெனப் போற்ற
தேங்குந்தீய வினைகளெலாம் தீய்ந்து சிதறி ஓடிவிடும்
நீங்கற் கரிய பெருவாழ்வும் தேடித் தானே வந்தடையும். 35

வந்தே யடைந்த வல்வினை மாற்றும்
நந்தாக் கருணா கரப்பிட்டி நம்பன்
சிந்தா குலங்கள் தீர்க்கும் தேவன்
கருணைக் கிருக்கை களிதருங் கணபதி
அவனை அனுதினம் பரவி
பவக கடல் நீந்திப் பதிக்கரை சேர்வமே. 36

கரைசேர வேண்டிற் கன்மனத்தைப் பண்படுத்தி
புரைகளெல்லாம் போக்குப் புறத்தே - உரைமேவும்
நல்ல கருணா கரப்பிட்டி நண்ணியே
வல்லவா வாழ்தல் வழி. 37

வாழ வழியுண்டு நெஞ்சமே வையகம் காத்தழிக்கும்
தாழ்வில் கருணாகரப்பிட்டி வாழும் விநாயகனை
நாளு நாளும மனத்திலுருகி வழிபடுவாய்
கோளொடு கூளி கொடு வினைப் பாசம் குறுகிடாவே. 38

குறுகிடா கோளுங் கூனியுங் காளி பெல்லியும் சூனியமும்
மறுகிடுங்காலன் அஞ்சுவன் கூற்றன் அந்தக னாரனுகார்
தெறுமல பாச இருவினை தீய்ந்து தீயன தேய்ந்து விடும்
நறுவிரை கருணா கரப்பிட்டி நண்ணி நல்லன நாமுறலாம். 39

நாமுறு மராலி நற்பதி வாழ்க
தோமறு கருணா கரப்பிட்டி வாழ்க
அர்ச்சனை புரியு மந்தணர் வாழ்க
வளமிக வழங்கி வானவர் வாழ்க
குடநிறை பால்பொழி கோக்குலம் வாழ்க
வளமிக மழைபொழி வானம் வாழ்க
கோன்முறை அரசுசெய் கோமகன் வாழ்க
மாமறை மந்திரம் மன்னியே வாழ்க
செழித்து வையகம் தேனித்து வாழ்க
தழைத்துச் சைவமும் தரணியில் வாழ்க. 40

கொலைகளவு கொள்ளை பகைமை ஒழிக
சாந்தம் பொறுமை தண்ணளி நிலவுக
யாவரு மின்புற என்று
பொழிக கணபதி பொங்கு கருணையே

திருச்சிற்றம்பலம்

## யாழ்ப்பாணம் வண்ணை

## நீராவியடி ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

### நேரிசை வெண்பா

சீரார்நீ ராவிச் சிவகுமரன் செய்தாள்
பாரோர் பரவிப் பணிந்திடுவார் - ஓராத
வீரகத்தி யையுதைக்கும் வீரன் அருட்பாவை
ஊரகத்தில் என்றும் உள. 1

ஐயநீ ராவி அமல அடியவர்க்கு
மெய்யமால் காணா விரிசுடரே - துய்யதொரு
நற்சிந்தை சொற்செயல்கள் நல்குவாய் நற்பதமும்
எற்குன்றன் இன்னருளும் இன்று. 2

அலர்மேல் உறையும் அயனேநீ ராவித்
தலைவன்றாள் சூடாத் தலையை - நிலமேலாய்
நீயேன் படைத்தாய் நினைப்பகைக்க நீணிலத்தில்
நாயேன்செய் குற்றம் நவில். 3

கண்கள்நீ ராவிக் கணபதியைக் காண்பனவே
பண்கள் நிறைதுதியைப் பண்ணும் நா - மண்ணதனில்
செம்மை விரிநூல் செவிகேட்ப வேழுகரும்
இம்மை வளர்மூக் கியைந்து. 4

அன்புசெய்து நீராவிக் காக்கை பெறும்பயனை
பண்புடனே பெற்றிடுவீர் பாருளீர் - துன்பதனை
என்றும் ஒழிக்க இதுவே வழிகண்டீர்
நன்றாம்பா மாலை நவின்று. 5

கைகால்நீ ராவிக் கணபதியைக் கூப்பிஅன்பாய்ப்
பைத்தலறப் பாரில் பயன்பெறுக - உய்தலுறும்
நல்வழியே சொன்னேன் நயம்பெறுவீர் நம்பியே
பல்வழியென் பாதம் பணிந்து. 6

நெஞ்சே நினையென்றும் நீராவி நின்மலனை
அஞ்சேல் அணுகா துனைத்துன்கு - உஞ்சாய்நீ
காதலொடும் காமர் கணபதிநின் னுட்டங்கி
ஆதரவோ டங்கமர்த லால். 7

கோலஞ்செய் மாடக் கொடியணிநீ ராவிசேர்
சீலஞ்செய் கோயிற் றிருவீதி - ஞாலஞ்சேர்
புண்ணியரே மெல்லெனவே போந்து வலம்வந்து
நண்ணிடுவீர் ஞான வரம்பு. 8

இரும்பு மனத்தேன் இருவினையேன் நீராவிக்
கரும்பு தினமறந்து கண்போல் - விரும்பும்
மணியை மருந்தினை மாசிலா முத்தை
அணியை அடைகுவதும் என்று. 9

பழிப்பன்நீ ராவிப் பதிக்கரசே நின்னை
இழிப்பன்நின் பேர்சொல்லி என்றும் - களிப்பெய்திப்
பானை வயிற்றன் பருத்த துதிக்கையன்
ஆனை முகத்தவனே என்று. 10

திருச்சிற்றம்பலம்

# நீராவியடி ஜெய நீராவி வீரகத்தி விநாயகர்
# திருவூஞ்சல்

திருச்சிற்றம்பலம்

## காப்பு

அழகுமிக நண்ணுவண்ணைப் பதியின் மேவு
மாதமகா கணபதிதன் னருளைப் போற்றி
யுளமருவு மமிர்தமொழி யுலகின் மேய
உசிதமது ரத்தமிழி னூஞ்சல் பாட
தளமுளத வளவனச மாதெப் போதுந்
தாவிலென் னாவிலுறை தயவு காட்டிக்
கழகபுத வரையினித மருவு ஞானக்
கணபதிகின் கிணிச்சரணங் காப்ப தாமே.

## நூல்

சித்திரமார் வித்துருமத்த நூண்க ணாட்டித்
திவ்வியமா னிக்கரத்னச் சட்டம் பூட்டிப்
பத்தரைமாற் றிற்பசும்பொன் வடங்க ளார்த்துப்
பழவைரச் சலாகையினாற் பலகை சேர்த்துச்
சித்தமுட னேபுரிந்த வூஞ்சல் மீது
சிறந்திருந்தும் நிறைந்திருந்தும் தேவர் போற்றி
வைத்தபத்தி வடமசைப்ப ஆடீர் ஊஞ்சல்
வண்ணைநகர்க் கணபதியே ஆடீர் ஊஞ்சல் 1

ஆரணனு நாரணனு மாசி வேண்ட
ஆயிரங்கண் ணன்கவரி அருகில் வீச
பூரணசந் திரன்பரிதி கவிகை தாங்கப்
போற்றிவந்து பண்ணவர்சாந் தாற்றி ஏந்த
வாரிதிமன் படியகங்கை கொண்டு மேவ
வாதரா யன்பனிநீர் மகிழ்ந்து தூவ
மாரநின்று புகழ்பரவ ஆடீர் ஊஞ்சல்
வண்ணைநகர்க் கணபதியே ஆடீர் ஊஞ்சல். 2

ஒளிவளரு மணிமகுட மாலை ஆட
உன்னுவன்னிப் பொன்நிறத்த ஓடை ஆடக்
குலையுலையுள் நனைஉபயக் கவரி ஆட
குண்டலஞ்சண் டப்பிரபை கொண்டே ஆட
அழகொழுக வளர் அரவர் பணிக ளாட
அலங்கார உத்தரியம் அசைந்தே ஆட
மழைப்பொருவ அருள்புரிந்து ஆடீர் ஊஞ்சல்
வண்ணைநகர்க் கணபதியே ஆடீர் ஊஞ்சல். 3

அந்தரதுந் துபிமுழ விளங்கிப் பூமேல்
அண்டருந்தொண்டருமலர்கொண்டருச்சித்தேத்த
சுந்தரச்சிந் துரத்திலகம் இருளை ஓட்டத்
துத்திஅர வத்தினணி சொகுசு காட்டக்
கந்தபரி மளவழகு மிகுந்த சீதக்
கலவைமுலை வளவைபங்கிற் களிப்பின் மேவ
வந்தனைசெய் திடமகிழ்ந்தே ஆடீர் ஊஞ்சல்
வண்ணைநகர்க் கணபதியே ஆடீர் ஊஞ்சல் 4

முத்தாரம் தங்குசங்கம் அங்கை ஏந்தி
முதற்பகலிற் சற்பஉரு முறையால் நீக்கி
உத்தாரம் புரிந்தகிரு பாக டாட்ச
ஒருமருப்பைங் கரபரஎன் றுலகிற் றேவர்
மெத்தார வாரமுட னேபூ சிக்க
விஞ்சயர்கந் தருவர்கள் சொல் யாழ்வா சிக்க
பைத்தாரத் தந்திவண்ணா ஆடீர் ஊஞ்சல்
வண்ணைநகர்க் கணபதியே ஆடீர் ஊஞ்சல். 5

தளங்கருவி முழங்குமிர சிதம தாம்பூ
தரத்தைஎடுத் துயர்த்துநிசா சரனைத் தூக்கி
களங்கெனக்கொண் டெறிந்துவிளை யாடு ஞானக்
கற்பகமே பொற்பதத்தின் காட்சி காட்டென்

றுளங்கொளன்பர் தளங்குபரி மளங்கொள் வாசத்
துசிதமலர் சொரிந்துபணிந் துவந்து போற்ற
வளங்கொள்தெரி சனைஅருள ஆடீர் ஊஞ்சல்
வண்ணைநகர்க் கணபதியே ஆடீர் ஊஞ்சல். 6

செக்கரொலிச் சக்கரத்தைத் திருமால் பாலின்
திரைக்கடலின் இடைக்கமடத் தேகந் தாங்கி
தக்கசெருக் கைக்கொடுநின் றுளக்கும் போது
தாக்கிமெய்யன் பாக்கிஎன்பை நீக்கி ஏந்தி
முக்கணனுக் கணியாகக் கொடுத்த ஆதி
முழுமுதலே என ஞான முனிவர்போற்று
மைக்கயசுந் தரவதனா ஆடீர் ஊஞ்சல்
வண்ணைநகர்க் கணபதியே ஆடீர் ஊஞ்சல் 7

அளப்புளசெஞ் சடைக்கடவுள் ஏறுந்தேரின்
அச்சறுத்த உச்சிரத்தை அருச்சித் தேத்தி
துப்புளமுப் பானுயிர்கொண் டவர்கள் யாரும்
சுருதிமுறை கருதிஅன்பிற் றூய தான
முப்பழம்அப் பங்கரும்பெட் பொரிதேன் பால்நெய்
மோதகமா தியபடைத்து முறையாற் சென்று
வைப்புளகத் தொடுதுதிப்ப ஆடீர் ஊஞ்சல்
வண்ணைநகர்க் கணபதியே ஆடீர் ஊஞ்சல். 8

கமலமதி வளர்சடிலக் கடவுள் தானும்
கார்த்திகைப்பெண் பால்குடித்த மூர்த்தி தானும்
அமலவடி வுளவடுகக் கடவு டானும்
ஆரணனு நாரணனும் அருகின் மேவ
இமிலிடபக் கொடிபிடித்துக் கணங்கள் போற்ற
இருக்கறிந்நோர் அருக்கியமா தியசெய் தேத்த
மமதுணைநீ எனப்புகல ஆடீர் ஊஞ்சல்
வண்ணைநகர்க் கணபதியே ஆடீர் ஊஞ்சல் 9

சீரணியா ரணம்வாழி முனிவர் வாழி
திறல் அரசர் முறைநிறையிற் சிறந்து வாழி
தாரணியும் புயசயில வணிகர் வாழி
தாராள மாதொடுகா ராளர் வாழி
ஏரணிபால் ஊட்டுபசுக் கூட்டம் வாழி
என்றும் எனை ஆண்டஇப முகத்தோன் வாழி
ஊரணியும் நீராவிப் பதியும் வாழி
உணர்த்திடும்ஊஞ் சற்றமிழும் வாழி தானே 10

திருச்சிற்றம்பலம்

## எச்சரீக்கை

1) இணையில்லதொ ரிப மாமுக விறையே - எச்சரீக்கை
கணநாயக கயமாமுக கதியே - எச்சரீக்கை
2) நீர்வாவியி னிறைவாகிய நிமலா - எச்சரீக்கை
சேர்வாகிய சிறுமை கெட அருள்வாய் - எச்சரீக்கை
3) கயமாமுக வவுணன்னுரங் கீண்டாய் - எச்சரீக்கை
நயமாவுரை செய்வாருள நீங்காய் - எச்சரீக்கை
4) வீரற்றெறு பழிபோயிட வுதைத்தாய் - எச்சரீக்கை
சீரற்றவர் சிந்தைக்கிரு காப்பாய் - எச்சரீக்கை
5) கடமாமுக சிந்தைக்கிரு ளானாய் - எச்சரீக்கை
நடமார்தரு நம்பீசிவ குமாரா - எச்சரீக்கை
6) தொந்தோமென நடனம்புரி துணைவா - எச்சரீக்கை
சிந்தாகுலந் தீர்க்குஞ்சிவ களிறே - எச்சரீக்கை

## லாலி

1) லாலி லாலி லாலி லாலி லாலி

ஐங்கர முதலே அம்பிகை பாலா லாலி

2) சங்கு சக்கர தாரி மருகா லாலி

எங்கு நிறைந்த வெங்க விநாயக லாலி

3) அங்குச பாசா வாதி முதலே லாலி

பொங்கு சித்தி புத்தி சமேதா லாலி

4) குடமுனி கரகங் கவிழ்த்தாய் லாலி லாலி

கடகரி முகனே கணேச மூர்த்தி லாலி

5) சர்ப்பா பரணா சாந்த சொருபா லாலி

அர்ப்பண முனக்கே ஆக்கிட வருள்வாய் லாலி

6) கற்பகக் களிறே களிதரு தேனே லாலி

பொற்பத மேத்தப் புரந்திடு முதலே லாலி.

## பராக்கு

1) வல்லபை பங்குறு வள்ளல் - பராக்கு

நல்லவர் தொழுதெழு நாதா - பராக்கு

2) விக்கின விநாயகா விகிர்தா - பராக்கு

செக்கரஞ் சடைமுடி சுமுகா - பராக்கு

3) கடகரி முகமுடைக் களிறே - பராக்கு

தடமருப் பொன்றது வொடித்தாய் - பராக்கு

4) கஜமுக வவுணனைக் கறுத்தாய் - பராக்கு

சயமுட னாகென வூர்ந்தாய் - பராக்கு

5) ஐங்கரா வம்பிகை பாலா - பராக்கு

சங்கரன் றருமொரு தாணுவே - பராக்கு

6) வண்ணை நீராவியம் பதியாய் - பராக்கு

எண்ணருங் கணங்களுக் கிறையே - பராக்கு

# மங்களம்

1) மங்களம் மங்களம் மங்களம் சய சய
மங்களம் மங்களம் மங்களம்

2) விக்கினங்கள் தீர்க்குமெங்கள் விகிர்தனுக்கு மங்களம்
முக்கணெந்தை முன்னளித்த முதல்வனுக்கு மங்களம்

3) பக்தி கொண்டு பரவநின்ற பண்ணவற்கு மங்களம்
சித்தியானை முதல்வனுக்கும் வல்லபைக்கும் மங்களம்

4) ஆனிரைக்கு மந்தணர்க்கு மரசர்க்கும் மங்களம்
ஞானியர்க்கும் மருமறைக்குந் திருமுறைக்கும் மங்களம்

5) நித்தியம் மழை பொழிந்து நிலவிவாழ்க வையகம்
பக்தியூடு பயிர் செழித்துப் பல்கிமல்க வெங்கணும்

6) பூவுளார்கள் பூசலின்றிப் புணர்ந்து நிலவிவாழுக
தேவகோட்டஞ் சிறந்தபூசை விழாக்களோடு பொருந்துக

7) மங்களம் மங்களம் மங்களம் சய சய
மங்களம் மங்களம் மங்களம்.

திருச்சிற்றம்பலம்

# நீராவியடி ஜெய நீராவி வீரகத்தி விநாயகர்

# திருவிரட்டை மணிமாலை

திருச்சிற்றம்பலம்

நீர்நிறைந்த நீர் வாவி நின்மலனே நீளரக்கன்
ஏரழிய அட்ட இராமன்பால் - சேர்பழியாம்
வீரகத்தி மாள உதைத்த விநாயகனை
ஓரகத்தே வைத்தே னுவந்து. 1

உவந்துன் னருள்வழி நிற்க வகையறி யாதுநெஞ்சம்
பவந்தரு வாழ்விற் படிந்து முழுகிப் பதைபதைத்து
துவந்துவந் தூய்மைகள் செய்யாது வீணே துரிசுபட்டேன்
சிவந்தரு வாழ்வு தருவாய்நீர் வாவிச் சிவக்களிறே 2

களிறேநீர் வாவிக் கரசே கனிந்து
தெளிவந்த உள்ளத்துத் தேனே - இளிவந்த
வீரகத்தியை யுதைத்த விண்ணவனே உன்போல்வார்
ஊரகத்தே உண்டோ உரை. 3

உரைக்கடங் கானெம் மிறைவன் நீர்வாவி உறைபரமன்
புரையில் மனத்திடைப் புக்குநின் றேயெழும் புத்தமுது
கரையிலா இன்பக் களஞ்சியம் காட்சிக் கரியபொருள்
தரையிடை மற்றவன் றாட்கீ ழெமது தலைமறைவே. 4

மறைவனத் தேவீர கத்தி விமலன்
நிறையுபுனல் நீர்வாவி தேடி - உறைவான்
தனையடைந்து தன்னடியார் தங்கள் மலங்கள்
வினைகடிந்து வீடு பெற 5

பெற்ற பிறவியமைந்த தெமக்குப் பெருந்துணையாய்
நற்றவஞ் செய்தோம் நறுமலர் கொண்டு நமன்வருமுன்
குற்றமில் நீர்வாவிக் கோட்டங் குறுகி குறைந்துநின்று
பெற்ற பயன் கொளப் போதுவம் வாரீர் பிணிகெடுத்தே. 6

கெடுமிவ் வுடலென்று துன்புறல் வேண்டா
படுபயன் கொள்ளப் பலித்த - சுடுமுன்னே
நீர்வாவிக் கோட்டத்து நீடும் விநாயகனைச்
சீர்பாடிச் சேர்வம் சிறந்து. 7

சிறப்பொடு பேடில்லை செல்வம் வறுமையிச் சீருலகில்
இறப்புப் பிறப்பில்லை எண்ணுவீ ரென்றும் விநாயகனை
மறப்பு நினைப்பில்லை மன்னுவீ ரெங்கும் மருவிநின்றே
உறைப்புற் றொருமையி லோங்குவீ ரென்று முலகினிலே 8

உலகமாய் வேறா யுடனுமா யோங்கி
அலகில் பொருளிலு மாணை - இலகியிட
மன்னும் விநாயகனே மாற்றிப் படைத்தளித்து
துன்னும் தொடக்கறவே நின்று. 9

நின்று மிருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பொழியாய்
துன்றுநீர் வாவித் துணைவன்றன் தூய துணைப்பதங்கள்
கன்றை நினைந்தெழு தாயெனச் சாந்து கசிந்துருகு காய்
பொன்றும் வினைகள் புகலிடம் மற்றவன் பொன்னடியே. 10

அடிய ரொடுங்கூடே னாம்பூசை செய்யேன்
படியினுக்கோர் பாரமாய்ப் பாழே - இடைகின்றேன்
வாழ்த்தும் வகையருளாய் வண்ணை விநாயகனே
தாழ்த்தினேன் சென்னி தணிந்து. 11

தணிந்து வணங்காத் தலையுநீர் வாவித் தலைவனென
பணிந்து மொழியாத நாவும் எனக்கே பரிந்தளித்தான்
திணிந்த மனத்துச் சிரநான் குடைய திசைமுகனும்
துணிந்தேர் சிரம்பட அந்நாட் டுணித்ததுந் தேர்ந்திலனே. 12

தேர்ந்த மறையின் தமிழ்செய்த மூவரும்
நேர்ந்த முறைகளை நேடினான் - ஓர்ந்திட
நம்பிக் கருளும் நீர்வாவி விநாயகன்றன்
தும்பிக்கை என்றுந் துணை. 13

துணையான சுற்றந் துணையல்ல என்று துணிந்து கொண்டோம்
அணையார் புனல் சேர்ந்த அண்ணல்நீர் வாவி அருமருந்தே
புணையாளனுமாம் போதுமவனே புகலெனவே
இணையார் மலர்தீப மேற்றன கொண்டே இறைஞ்சுதுமே. 14

இறைஞ்சினர்க் கின்ப மளிக்கு மிறைவன்
நிறஞ்சிறந்து நீர்வாவி சேர்ந்தான் - அறஞ்சிறந்த
அண்ணலார் தாள்க ளணைந்தின் புறவல்லார்
நண்ணுவரோ மற்றோரை நாடு. 15

நாடு நமக்கென ஒன்றில்லை ஞாலம் நமதுடைமை
கூடு முறவுங் குறிக்கில் குறைவில் குவலயமே
நாடும் பொருளும் நீர்வாவிப் பதியின் நலஞ்சுடரே
வாடும் பரிசு நமக்கில்லை என்றும் வருஞ்சுகமே. 16

சுகமலர வாழ்வைச் சுகமென்று கொண்டு
மகிழ்த லொழியாய் மனமே - சுகம்வரும்
நீர்வாவிக் கோட்டத்து நீடும் விநாயகன்றாள்
சார்வாகச் சேரவே தான். 17

தானந் தமிலாத் தனிமுதல் எந்தை விநாயகனே
ஆனந்தன் நீர்வாவிக் கோட்டத் தமல னகிலமெலாம்
ஊனந் தவிர உறுபொரு ளுண்மை உளமதிலே
மோனந் திகழும் முனிவர் மனத்தன் முழுமுதலே 18

முதலும் நடுவும் முடிவும் அவனே
இதஞ்செயநீர் வாவி இணைந்து சதமெனவே
தாழ்வா ரவர்கருமம் தன்கரும மாக்கொண்டு
வாழ்வானே வீரகத்தி மன். 19

மன்னுக நீர்வாவி மாநிலத் தோருக் கருள்பொழிந்து
மன்னனுஞ் செங்கோல் முறைசெய்க அந்தணர் ஆனினங்கள்
நன்மை பெருகுக நானிலம் வாழ்க நவைஒழிக
செந்நெல் விளைக சிறந்து வயலெல்லாம் நீர்நிறைந்தே 20

திருச்சிற்றம்பலம்

# ஜெய நீராவி வீரகத்தி விநாயகர்

# நான்மணி மாலை

திருச்சிற்றம்பலம்

**காப்பு**

நீர்வாவி மேவு நிமலனடிக் கீழடங்கி
சேர்வா மவன் புகழைச் செப்பவே - பார்மீது
நல்ல தமிழ்தருவான் நாடின்ர்க்கு நாடோறுஞ்
செல்லல் கெடவருளுஞ் சேய்.

சீராரு நீர்வாவிச் செம்மல் விநாயகனை
பேர்பரவி வாழ்த்துவாய் பேதைநெஞ்சே - சீராய்ப்
பெருகிடும் பேரின்பம் பெய்கழற்கீழ் நாளும்
அருகிடும் ஆள்வினை நோய் 1

நோயின்மை வேண்டின் நுவலக்கேள் நெஞ்சமே நானுவன்ற
பாய பரஞ்சுடர்ப் பண்ணவன் நீர்வாவி மேவிநின்ற
சேயைச் சிவனார் சிறுவனைச் சிந்தையுட் சேர்த்திடுவாய்
போயறும் பாவ வினையவை போகம் பெருகிடுமே. 2

பெருகிய அன்பு வேண்டும் பேரருட் பெரும உன்பால்
உருகிட வேண்டு முள்ள மொருங்கிட வேண்டுஞ் சிந்தை
பருகிட வேண்டும் பாத பங்கய மூறு தேனும்
அருகிட வேண்டு மாசை அருள்வீர கத்தி யப்பா. 3

அப்பனல் வளிவா னருக்கனு மதியும்
செப்பிய நிலனு மியமா னனுமென
அட்ட மூர்த்த மாவன் விநாயகன்
துட்ட வரக்கன் தொலைய வடர்த்த
இராம னைடந்த விரும்பழி யான
வீர கத்தியை விறலுட னுதைத்தான்
வீர கத்தி விநாயக னமர்ந்த

நீர்வா விப்பதி நேர்படச் சென்றே
ஆர்வ முடனே அர்ச்சனை புரிய
பார்மிசைப் பழிகள் பறையும்
தீரா நோயுந் தீர்தல் திடமே. 4

திடமாக மேவிய தீர்த்தநீர் வாவித்
தடங்கரையே சார்ந்திடுந் தாணு - படமா
நெஞ்சத் தெழுது நிறைமாந்தர்க் கெஞ்ஞான்றுந்
தஞ்சமாத் தன்றாள் தரும். 5

தருக்கித் திரிவேன் தருக்கை யொழிக்கத் தருபிணிகள்
நெருக்கி யுடலை நிலைகெடச் செய்யுநீர் வாவியுறை
பருக்கை முகத்துப் பரமா பணிந்தே னின்பாதமலர்
ஒருக்கால் பிழைகள் பொறுத்தா லுனக்கென் னுறுவதுவே. 6

உறுவன வந்த போதி லுளங்கவன் றிடுதல் வேண்டாம்
உமைசுத னருளே யன்றி வேறிலை யுளைத லேனோ
நிறைமன முடையார் வாழும் நீர்வாவிப் பதியில் மேவி
நித்தலும் போற்றல் செய்வாய் நீங்கிடும் கவலை யெல்லாம்
மறுவறு வல்லபைக்கு மணாளனை யென்றும் போற்றி
வாசவன் முதலோர் வந்து வாழ்த்துவர் தவறாதென்றும்
அறைகழல் முறையா லேத்தி அருச்சனை புரிவாய் நெஞ்சே
ஆர்வத்தைப் பெருக்கி நாளும் அளவிலா அன்பு செய்தே. 7

அன்பு செய்ய இன்பம் பெருகும்
துன்பந் தொலையும் தூய்மை துலங்கும்
நீர்வா விப்பதி நின்மல னடியினை
ஆர்வ மீக்கூர அர்சனை புரிகுவம்
உள்ள முயர்ந்திடு முணர்வு மொருங்கும்
அள்ளூ றுள்ளூத் தாக்கை புரைபுரை
கனியு மஞ்சுவன் காலனு மணுக
தேனா யமுதாய்த் தித்திக்கும்
வானவன் நாடும் வழிதிறந் திடுமே. 8

திறம்பிய வாழ்வு சிறப்புற வேண்டின்
நிறைபுனல் நீர்வாவி நேடி - மறந்திகழும்
வீரகத்தி வீழ வினைசெய் விநாயகன்றாள்
ஈரமுற ஏத்தல் இனிது. 9

இனியன பேசி இறைபணி நிற்கு மிருந்திறலோர்
நினைவினில் நீங்கான் நிறைவுடை நீர்வாவி நேர்ந்துறைவான்
தனையடை வார்தமை தன்னருள் நீர்வாவி சாரவைப்பான்
பினைப்பல பேசிப் பிதற்றுவ தென்றான் பிரிவிலனே. 10

பிரியா மனத்தவர் பேரிரு ளோட்டி பெருந்திரு நல்கும் பெருமையினான்
கருமால் பிரமனுங் காணுதற் கெட்டான் கணபதி நீர்வா வயினமர்வான்
அருவா யருவுரு வாயுரு வானவன் அருள்புரிந் தன்ப ருளமுறைவான்
மருவார் மலரடி நல்குவ னெற்கும் மதகரி யானை முகத்தவனே. 11

ஆனை முகவன் அரிய னெவர்க்கும்
ஊனை யுருக்கி உள்ளொளி பெருக்கி
சாருந் தவர்க்குச் சால எளியன்
நீர்வா விப்பதி நிறைந்த நிமலன்
விக்கினந் தீர்க்கும் விக்கின விநாயகன்
சக்கர தாரி தாழ்ந்து வேண்ட
சக்கர மீந்த சாந்த மூர்த்தி
சொல்லொடு பொருளெனத் தொடக்குற நின்ற
அவனெமை யாண்ட ஆதி முதலே. 12

முதலே யெவர்க்கும் முடிவிலா ஒன்றே
கதியே கலந்தடைந்தார் காணும் - பதியாக
மேவினாய் நீர்வாவிக் கோட்டத்து மேவிநின்று
பாவிக் கருளாய் பரிந்து. 13

பரிந்தடைந் தேனுனைப் பற்றுவா யென்றன் பவ்வினைநோய்
திருந்துநீர் வாவிச் செழும்பதி மேவிய தேசிகனே
திருந்தல னாய திறலவு ணன்விழக் கோடொடித்தாய்
பிரிந்தறியா வுன்றன் பேரரு ளெற்குப் பெருந்துணையே. 14

துணையாய தொல்லுருவன் தூநெறியே காட்டிநீர் வாவிமேவி
பணிவாரைத் தாங்கிடுவான் பாரெங்கு மாகியே பரவிநின்று
புணையான வருள்வழியே போயிடுவீர் நெஞ்சினீர் புன்மைநீங்கி
திணிவாய கருமலத்தைத் தேய்த்திடுத லென்றென்று மெளிதாமன்றே.15

எழில் நிறை நீர்வா விப்பதி இறைவன்
கழலடி கைதொழல் கடனாம் மனமே
அமைதி யுறுவாய் அண்ணலை வாழ்த்தி
ஆடியு மோடியு மலைந்து பதைத்தால்
நிம்மதி யேது நிறைவுறு மன மே
பதைப்பதை யொழிநீ பரமனைப் பாடு
சிதைப்பன பிறவினை சேரா தமைதி
இன்றே தொழுவாய் இன்னே தொழுவாய்
பொன்று முடலம் பொருக்கென இன்னே
மனைவி மக்கள் சுற்றமென் றலையேல்
எம்மா னிணையடி இறைஞ்சி
சும்மா விருந்து சுகம் பெறு மனமே 16

மனமொன்றி மாசிலா மால்மருகன் பாதம்
தினஞ் சேவை செய்யாச் சிறியேன் - தனந்தேடி
ஓடாமல் நீர்வாவி உத்தமனே உன்னையே
நாடேனோ நாளும் நயந்து 17

நயந்துநீர் வாவி விநாயக னாமம் நவிலகில்லேன்
வியந்தவன் கோயில் வலம்வரேன் வீணே கழிந்தனநாள்
உய்யும் வழி காட்டாய் உமைபாலா உத்தம நாயகனே
கயமுகன் சாயக் கறுவிய நாத கணபதியே. 18

கணபதி கழலிணை கருதுவர் பெரியர் கற்றது நின்று கவினுற வதிவார்
மணநிறை மலர்கொடு மறைமுறை பணிவார் மஞ்சன மாட்டி மலிவிளக் கெடுப்பார்
குணநிறை யவரொடு குலவிடு மனத்தார் குவலய மவனெனக் குறிகொளு நெறியார்
பிணிபடு முடலினைப் பொருளென மதியார் பிறிதுடை யவர்திடம் பெருநெறி
பெறுவார் 19

பெறவுள பொருணீ பெரும்பெயர் விநாயக
உறுபொரு ளுளவோ உன்னை யன்றி
மலரிடை மணநீ மதுவினின் சுவைநீ
மணியிடை ஒளிநீ மண்ணி னாற்றநீ
நீரினின் சுவைநீ தீயிடை ஒளிநீ
வளியிடை யூறுநீ வெளியிலோ சைநீ
வான்பொழி மழைநீ வருபொரு ளெலாம்நீ
நீரவா விப்பதி நிமல
பார்வாழ் வெய்தநீ பரிந்தருள் புரியே. 20

புரிசைசூழ் நீர்வாவி புக்கரும் போதன
கரிமுகவன் கண்ணுதலைக் காணாக் - கரியவென்கண்
நீர்சோர்ந்த அந்தோ நிறைகெட்டே னென்செய்கோ
வார்கடலும் வாட்டுமே வந்து. 21

வந்தெனக்கு மையல் தருகின்றான் நீர்வாவி மாமுகவன்
பந்தங்கள் நீக்கி பலமொழிகள் பேசிப் பார்ப்பதென்னே
தந்தமரென் றென்னைத் தார்மாலை தந்து தடுத்தணைப்பான்
நொந்த நிலைமாற நூல்கள் பலவும் நுவன்றிடுமே. 22

நுலலுதற் கரிய நுண் பொருளானை
நோக்கினு நோக்கிற் கப்புறத் தானை
கவலை டீர்க்கும் கரிமுகத் தானை
கந்தனை வள்ளி சேர வைத்தானை
குவலயக் கோனாய்க் கோதறுப் பானை
கும்பிடு வார்தங் குறிநிலை யானை
அவலம றுக்கும் மமுதனை யானை
அந்தனீர் வாவி கண்டு கொண்டேனே. 23

கண்டங் கரிய கண்ணுதல் காதல
அண்ட மனைத்து மகட்டி லடக்கினை
பேழை வயிற்றுப் பெரும்பெய ரான
நாளு நின்னை நயந்தெலி சுமக்கும்

சின்னஞ் சிறிய சீருடை எலிதான்
நின்னைச் சுமக்கும் வகை யெவ்வாறோ
பெரியதிற் பெரியை சிறியதிற் சிறியை
பேருருக் கொண்டு பேணுவை அனைத்தும்
நுண்ணிய உருவில் நுணுகி நுழைந்தனை
உன்னுடை நிலையை உலகிலா ரறிவார்
நீர்வா விப்பதி மேவி
ஆர்வலர் ஏத்த அளிப்பைநின் அருளே. 24

அருளிற் றிளைக்கு மடியார்க் கறிவாய்
மருவி மனத்தி லினிமை - தருவான்
நிலையா யமர்ந்தருளி நீர்வாவிக் கோட்டங்
கலைஞான மீயுங் களிறு
களிவந்த சிந்தை கலந்தநீர் வாவிக் கனியமுதே
துளிதேன் னிறைமாலை தாரா தொழியி லுயிர்விடுவேன்
பழியுமுனை வந்து சூழம் பலரும் பழித்திடுவார்
நெறியர நீடரைக் கச்சா யசைத்திட்ட - நின்மலனே 26

நின்மலனை மறவாதார் நினைவகலா விநாயகனை
நினைகிலேன் பொல்லாப் புலையனேன்
என் வினைதான் னீங்குவது மெந்நாளோ எம்பெருமா
னினைக்கின்றேன் ஆளுந் தரமதோ
பன்மலர்க ளவைதூவிப் பணிசெய்யே னாடியினும்
பண்பாளா நின்றா டுணையதே
புன்மையுள பொறுத்திடுவாய் பொருளல்லாப் புன்மையனைப்
பொன்னடிக்கீழ்ப் புல்ல வைப்பதென்றோ. 27

வைப்பிடம் வண்ணை நீர்வாவிப்பதி
துய்ப்பது சுமுகன் துணையடி இன்பம்
பெருநிதி வேண்டார் மாசு நிறைந்தன
வழுவிடத் தரியார் கழலடிச் செல்வம்
விழுமிய துறுவார் வீர முடையார்

ஆரங் கண்டிகை அணிவது பூதி
உண்பது பிச்சை உடுப்பது கந்தை
உறைவ தம்பலம் ஊரு முலகம்
சேர்வ தடியார் சிறந்த கூட்டம்
இவரடி எய்தி நாளும்
பலவினை போக்கிப் பண்புறல் மாண்பே. 28

மாண்ட மனத்தார் வந்திறைஞ்சு நீர்வாவி
ஆண்டகையை ஆரா அமுதினை - காண்டகுசீர்
எம்மானே எந்தை பெருமானே என்றென்று
சும்மா இருக்கை சுகம். 29

சுகம்பெறச் சும்மா இருந்தலை விட்டுத் துருதுருத்து
சகமுழு தோடுஞ் சழக்கனேன் சாந்த முறுவ தென்றோ
திகழுநீர் வாவிச் செழும்பதி சென்று மனமொருங்கி
நகைமலர் கொண்டு வழிபடிற் சாந்தம் நனிவருமே. 30

வருவன கண்டு மனமாழ்கும் மதியிலி நெஞ்சே மாழ்கேல்முன்
புரிவினை தந்த பயனாகப் புண்ணிய மூர்த்தி செயலிது காண்
பரிவொடு மவனை நீர்வாவிப் பதியிடைச் சென்று பணிவாயேல்
வருவினை போக மன மோங்கும் மருவிடும் உணர்விற் சிவபோகமே 31

உணர உணர்வில் வருஞ்சிவ போகம்
இணையி லனுபவம் இயம்ப வரியது
ஐம்பொறி கொண்டு அறிய எட்டாதது
உம்பரு முணர இயல்வது அன்று
நீர்வாவி நிமலற் சார
ஆரவந்திடும் அறிவாய் நிறைந்தே. 32

நிறைமன மோடு வழிபடு நீர்மை
மறையவர் வேண்டும் வரங்கள் - நிறைவா
தருவான்நீர் வாவித் தலைவன் தாள்கள்
கருதிநின் றேத்தல் கடன். 33

கடமை வழுவாக் கடப்பாட்டி னார்கள் கலந்தவன்பால்
முடியடி சேர்த்தி முறைமையி னாலே வணங்குகின்றார்
படிமிசை நீர்வாவி மன்னு நிமலனைப் பாவவினை
பொடிபடப் பொய்மைகள் போயிட ஞானம் நணுகிடவே 34

நண்ணிய மெய்த்தவ வேடமொடுநற்றவர் நாளுநயந்தணைவார்
புண்ணிய நீர்வாவிப் பதியை பொற்புறு சிந்தை கரைந்துருகி
எண்ணிய வேண்டி இரந்திடுவார் எந்தை பிரானெனஏத்திடுவார்
பண்ணிய பாவம் பற்றறுப்பார் வந்த பிறப்பின் பயன் பெறுவார். 35

பெறுதற் கரிய பேறு தருவாய்
உறுவ துறுக உனைச்சரணடைந்தேன்
விக்கின விநாயக விமல சரணம்
நக்கநம்ப நாத சரணம்
உள்ளத் துயர்வு தருவாய் சரணம்
கள்ளங் கழிக்குங் கணபதி சரணம்
அன்பு பெருக அருள்வாய் சரணம்
நன்புல னொன்ற நல்காய் சரணம்
உலகஞ் செழிக்க உதவுவாய் சரணம்
பலரும் வாழப் பணிப்பாய் சரணம்
நீர்வா விப்ப விமல
சரணம் உன்னைத் தருவாய் எனக்கே. 36

எனக்குறு நோய்கழிய என்னைப் புரக்கும்
பனைக்கைப் பரமா பதியே - மனக்கினிய
வள்ளல் நீர்வாவி மருந்தே யுன்கழல்
உள்ளத்து வைத்தே னுவந்து. 37

உவந்துனைச் சேர்ந்த ஒருதனி இன்பினை உன்னுதொறும்
நவநவ மாயெழு நல்லுணர் வென்றால் நவிலவற்றோ
சிவந்தரு நீர்வாவி சேர்தரு நாதனே செம்பொருளே
புவந்தரு பெம்மான் புராதன போத புரவலனே. 38

போத நிறைவுறு பூதி அணிபவர் மனமுறநிலையுற அடைவாராய்
நாத நினதடி யோமை வெருவுற நலியும் வினைகெட அருள்தாராய்
ஆதி முதலென அண்மி அடைவுறு தன்மை நிலவிய நீர்வாவி
தீதில் பதியிடைசேர்வ ரவரெமை ஆளுந் தகையின ராவாரே. 39

ஆவ தளிக்கும் அண்ணல் வாழ்க
போவது நீக்கும் பொற்பு வாழ்க
வினைகெட நோக்கும் விநாயக வாழ்க
தனதடி நல்குந் தம்பிரான் வாழ்க
அகிலம் அளிக்கும் அமுதே வாழ்க
திகிலைக் கெடுக்குந் தேவே வாழ்க
விண்ணும் வாழ்க விரைமழை பொழிந்து
மண்ணும் வாழ்க மலிவளம் மல்கி
ஆனினம் வாழ்க ஆன்பால் பொழிந்து
மன்னன் வாழ்க மனுமுறை நின்று
பல்லுயிர் வாழ்க பண்பு நிறைந்து
தீமை ஒழிக நன்மை நிறைக
நீர்வா விப்பதி நீடி வாழ்க
பூதி சாதனம் பொலிந்து வாழ்க
வாழ்க அடியவர் வயங்கு சீருடனே. 40

திருச்சிற்றம்பலம்

# ஜெய நீராவி வீரகத்தி விநாயகர்
# அட்டக மாலை

திருச்சிற்றம்பலம்

## கொச்சகக் கலிப்பா

சீர்நிறைந்த செங்கனகக் குன்றே சிவகுமரா
நீர்வாவி மேவுகின்ற நிறையமுதே நறுந்தேனே
பாரின்மிசை யுன்னையன்றிப் பற்றிக் கோடாருளரே
நார்மிகுந்த சிந்தையொடு நண்ணினேன் நின்னடியே. 1

## கட்டளைக் கலித்துறை

அடியா ரிடர்கெடுத் தானந்தஞ் சேர்க்கு மரும்பொருளை
நெடுவா னிறைபுன னீர்வாவி மேவி நிலையமுதை
படிதா னிலாத பனிமலை வல்லிதன் பாலகனை
கடமார் களிற்றைக் களிதூங்க வுள்ளத்தே கண்டனனே. 2

## அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

கண்களிநீர் பாய்ந்தோட கரகமல மிசைகுவியக் கலந்தவன்பு
உண்ணிறைய வெந்நாளு முன்னடிக்கே யாளாநா னுய்யவேண்டும்
நண்ணிய நலநீர்வா விப்பதிவாழ் நன்மருந்தே ஞானமூர்த்தி
எண்ணிய வின்னமுதே யெழிலார்ந்த விபமுகனே யெற்தாயீசா 3

## எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

ஈசர்க்கு யான்செய்யும் விண்ணப்ப மொன்றுண்டு
கேட்டிடு வீரதைச் செப்பிடுவேன்
நாசெற்று விக்குள் மிக்கெழ நன்புல
னைந்து மொடுங்கிட நான் மயங்கி
பேசற்கு மொண்ணா நிலைவரும் போதெனை
யஞ்சலென் பீர்பேழை வயிறுடையீர்
தேசற்ற வீர கத்தியை யன்றுதை
செய்தீ ரிராமன் பழிகெடவே. 4

### எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

வேதங்க ளெந்நாளும் விரும்பி வாழ்த்தும்
விண்ணவனே விநாயகனே விமல மூர்த்தி
சீதங்கொள் நீர்வாவி சேர்ந்த சேயே
செம்பொருளே சீரியனே செந்தேன் பாகே
பாதகங்கள் பலசெய்து பணிதல் செய்யாப்
படுவினையேன் பாவங்கள் பாறப் போக்கிப்
பேதமற வுன்னடிக்கீழ்ப் பேணிக் காத்துப்
பிரிவில்லா நிலை தருவாய் பெரிய பேறே 5

### பதின் சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பேறு தந்தெனை யாண்டருள் பிரணவப் பொருளே
பெருத்த தொந்திசே ரைங்கார முடையதோர் பெரும
மாறி லென்வினைப் பயனவை யருத்திடு மருந்தே
மருவி யென்னுள் மயக்கற மன்னிய மணியே
ஊறி யென்னுளங் களிப்புறு முவகையங் கடலே
உன்னி யுன்னடி யென்றுமே மறந்திடல் செய்யேன்
வேறின் றொன்றியே விரவியென் சிந்தையு ணின்றால்
வேறி னிப்பெறு பேறுதான் யாதெனக் குளதே. 6

### பன்னிரு சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

உள்ளத்தை யொருங்க வைத்தே யுன்றிற மோர மாட்டேன்
ஊனினை வளர்க்க வேண்டி யுலகெலா மலைய லுற்றேன்
உள்ளுவ வொருபல் கோடி யுள்ளுறு சாந்தங் கெட்டேன்
ஊத்தையே னுய்வ தெங்ஙு னுறுதுய ரடைவ தல்லால்
வள்ளலே வீர கத்தி விநாயகா வைய மாள்வாய்
வந்தெனக் குறுதி தந்துன் வளமெலாம் வழங்கல் வேண்டும்
கள்ளமே பேசு வேற்குக் கதியுமொன் றுண்டு தானோ
கையது பாச மேந்துங் கணபதீ கருணா மூர்த்தீ. 7

## பதின்நான்கு சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

கருணையி னுருவே களிற்றுமா முகனே கண்கள்மூன் றுடையதோர் கனியே
கைகளைந் துடையாய் கனகமால் வரையே கருமலங் கழிகண நாதா
கருவிநூல் கொண்டு காணுதற் கரியாய் கருததொருப் படுநருக் கெளியாய்
கற்பக தருவே கண்ணினுள் மணியே களிதரு முளத்துறு கரும்பே
உருகிட வுள்ள முடல் புள காக வுன்னடி தஞ்ச மென் றடைந்தேன்
உறுதியில் லரசு மும்பர்தம் வாழ்வு மொருபொரு ளெனவுளங் கொள்ளேன்
வருவன வருக வண்ணைநீர் வாவிப் பதியுறை விநாயக மூர்த்தி
மற்றவை யஞ்சேன் வருவன வெல்லாம் மருவிய வுனதருட் சீரே. 8

திருச்சிற்றம்பலம்

# ஜெய நீராவி வீரகத்தி விநாயகர்

## திருப்பள்ளியெழுச்சி

திருச்சிற்றம்பலம்

ஐந்துகரவனைத் தந்தி முகவனை
சிந்தை செயவருஞ் சந்தத் தமிழே.

அலைகடன் மீமிசை யுதித்தன னருக்கன்
ஆரிருள் புலர்தரப் பரந்தது புத்தொளி
நிலவிய வெள்ளிக ணிறை யொளி மறைய
நிலவொளி குன்றிட நாணினன் பிறைமதி
புலருமுன் னெழுதரு பூசுரர் முறையால்
பூவொடு புகையொளி காட்டிட வந்தார்
புலவர்கள் போற்றிடு விநாயக மூர்த்தி
புகர்முக னேபள்ளி யெழுந்தரு ளாயே. 1

பொழுது புலர்ந்தது புள்ளின மார்த்த
பொய்கை நிறைந்திடு கமலங்கள் மலர்ந்த
நாத முழங்கின நன்மணிச் சங்கு
நாத சுரத்தொடு நல்லியம் பலவுந்
தீதவு முனிவரர் செறிந்தன ரீண்டி
செம்மைகொள் மனத்தினர் திருநிறைச் செல்வர்
கோதில்நீர் வாவியம் பதிவதி வானே
குழக னேபள்ளி யெழுந்தரு ளாயே. 2

அஞ்சலி கூப்பிய கையின ரொருபால்
அருமறை யுரைசெயு மந்தண ரொருபால்
பஞ்சடி போத்துநின் றாடின ரொருபால்
பருவரல் மொழிதர பாவைய ரொருபால்
நெஞ்சினி நிறைதரு நிலையின ரொருபால்
நிலத்திடை விழுந்தெழு நீரரு மொருபால்
மஞ்சிவர் வண்ணையம் வளம்பதி மேய
மழகளி றேபள்ளி யெழுந்தரு ளாயே. 3

ஒன்றிய சிந்தைய ருள்ளூறு மொளியே
சீர்ந்திட வில்லவர்க் குணர்வரி யானே
என்னுடை யன்பினுக் குறுகுறி யானே
ஏரம்ப வோர்க்கொம்ப விபமுக மணியே
வன்றிறல் வீரகத் தியையுதை செய்தானே
வருவன வஞ்சிலன் வல்லபை பங்கா
துன்றுனீர் வாவியம் பதியிடைத் துலங்கும்
தும்பிமு காபள்ளி யெழுந்தரு ளாயே. 4

நீர்நிலன் றீவளி வானிரு சுடரும்
நீடுயி ரெட்டெனு வகைபுணர் வானே
ஓர்பவ ருளத்திடை யொளிர்தரு முணர்வே
உருகத வில்லவ ரறிவினுக் கெட்டாய்
பேர்பர வினர் தமைப் பிரிவறி யாதாய்
பெரியவர் பலருனைக் காணிய வந்தார்
ஆர்வல ரேத்தின ராடிநின் றார்கள்
ஆனைமு காபள்ளி யெழுந்தரு ளாயே. 5

என்றனை யாளுடை யிபமுகத் திறையே
எல்லையொன் றற்றதோர் கருணையங் கடலே
கன்னறேன் பாலொடு கனியென வினிக்கும்
கஜமுக கணபதி கற்பகக் களிறே
பன்னிநின் றேத்தினர் படிறது களைவாய்
பணிசெய மருவினர் வண்ணையம் பதியிற்
றுன்னிடுஞ் சுடர்விடு சோதியே தூயா
தும்பிமு காபள்ளி யெழுந்தரு ளாயே. 6

காரிருள் மூடிடக் காண்கில னுன்னை
கருவதிற் புகுந்துழன் றல்லலிற் பட்டேன்
பேர்ந்திடும் வழியவை யொன்றையுங் காணேன்
பேயனே யெனினுமுன் றிருவருள் காட்டாய்

தீர்ந்திடு மன்பர்த மன்பதே வேண்டும்
தீர்த்தனே வீரகத் தியையுதை செய்தாய்
ஆர்ந்தநீர் வாவியம் பதியுறை யரசே
ஆனைமு காபள்ளி யெழுந்தரு ளாயே. 7

முதலொடு முடிவது நடுவுமே யானாய்
முகுந்தன நகையவள் வல்லபை மணாளா
நிதியொடு சுற்றமுந் துணைவனு நீயே
நிலைதள ராவதை நிறுவுதல் வேண்டும்
மதியின ரணைதரு விநாயக மூர்த்தி
மருமலர் பலகொடு வந்தனர் வண்ணையம்
பதியிடை நின்னெழில் காணிய விழைந்தே
பரம னேபள்ளி யெழுந்தரு ளாயே. 8

ஆகுவை யூர்தரு மருமறை முதலே
அரியய னாதிய ரறிவதற் கரியாய்
பாகன மொழியவள் வல்லபை பங்கா
பழமறை யந்தணர் போற்றிடு புலவா
ஓகையொ டுனதடி காணிய வந்தார்
உருகிய சிந்தைய ரொழுகிய விழியர்
சாகர மனையநீர் வாவிய மர்ந்தாய்
தந்திமு காபள்ளி யெழுந்தரு ளாயே. 9

புலவரை வாட்டிய புகர்முக வவுணன்
பொன்றிடக் கொம்பொடித் தெறிதருபோதா
மலமிலர் மனமகிழ் மங்கல ரூபா
மதிமுக வல்லபை வலனமர் சுமுகா
மலர்புனல் புகையொழி யவியவை கொண்டு
மருவினர் மறையவர் மறைமுறை யேத்த
கலையுணர் வதுகொடு காணுதற் கரியாய்
கணபதி யேபள்ளி யெழுந்தரு ளாயே. 10

திருச்சிற்றம்பலம்

# கொக்குவில் (புதுக்கோயில்) சித்திவிநாயகர்

# இரட்டை மணிமாலை

திருச்சிற்றம்பலம்

### நேரிசை வெண்பா

சித்தி விநாயகனே தேவேகொக் கூர்வாழும்
அத்தி முகனே அருமருந்தே - முத்திமுதல்
தெள்ளு தமிழ்தருவாய் தேர்வார் திறத்துதிக்கும்
வள்ளலே யென்மனத்து வந்து 1

### கட்டளைக் கலித்துறை

வந்திப் பறியேன் வருவினை நீக்கும் வகையறியேன்
சிந்திப் பவருள்ளஞ் சேர்வானே சித்தி விநாயகனே
அந்திப் பிறையணி யத்தா வடியேன் மனத்தகத்துப்
பந்தித்து நின்ற பழவினை போக்கிப் பரிந்தருளே. 2

### நேரிசை வெண்பா

அருடரு மண்ண லயனரி யானோர்
மருளினை நீக்க மதித்தே - ஒருதேருக்
கன்றறுத்தா னச்சை யவனெம் முடலச்சை
இன்றறுப்பா னெம்மா னிறை. 3

### கட்டளைக் கலித்துறை

இறைப்பொழு துள்ள மொருக்கி யுனையுன்னு மொண்புலவோர்
மறலி வரினு மனமஞ்சார் சித்தி விநாயகனே
பிறவி யடையார் பிணியி னலியார் பெரிதுவந்து
நிறைவி னுறைவார் நிதிய மவர்க்கு நினகழலே. 4

### நேரிசை வெண்பா

நினகழல் வாழ்த்த நிறையொளி நீடும்
மனவிருளும் மாய்ந்து மடியும் - புனமலர்சேர்
சித்தி விநாயகனே சீரார்கொக் கூர்வாழும்
நித்தனே நீயென் றுணை. 5

### கட்டளைக் கலித்துறை

துணைவா கிருபா கரற்குத் துடியிடை மான்மகளே
அணைய வருளு மரசே யறிவாய் நிறைந்திருப்பாய்
பணிவார்க் கருளும் பரமனீ யென்கை பகருமதோ
புணையாயென் னெஞ்சம் புகுந்து புரத்த நினகடனே. 6

### நேரிசை வெண்பா

நினகட னெற்றங்க னின்பணி செய்தல்
எனகட னுகு மிறையே - மனமணியே
சிந்தை நிறைவுறுஞ் சித்தி விநாயகனே
பந்த மெனக்கினி யேது. 7

### கட்டளைக் கலித்துறை

ஏதம் புரியைம் புலவேட ரென்னை யிகலுகின்றர்
சீத மதியணி செஞ்சடைச் சித்தி விநாயகனே
போது மவர்செயும் புன்மைகள் பேசும் பரிசதுவோ
கோதற நீக்கிக் குணஞ்செய்வா யென்றன் குருமணியே. 8

### நேரிசை வெண்பா

மணியாய் மணியி னொளியாகி மன்னிப்
பிணியாய்ப் பிணிக்கு மருந்தாய்க் - கணபதி
எல்லவுமா யல்லவுமா யீசனாய்த் தாசனுமாம்
மல்லல்மா ஞாலத்து மன். 9

### கட்டளைக் கலித்துறை

மன்னு புவனங்கள் மற்று மழிய மடிதலின்றித்
துன்னி யமர்வான் றுளங்களில் சித்தி விநாயகனே
பின்னை யவைதோன்றத் தன்னாற்றல் கொண்டு படைத்திடுவான்
தன்னிலை மாறத் தனிப்பொரு ளென்றுஞ் சலிப்பிலனே. 10

### நேரிசை வெண்பா

சலித்ததிவ் வாழ்வு சரணென்று காணேன்
அலுத்தா ரவல மறுப்பாய் - நிலைத்ததோர்
வீடு தருவாய் விநாயகனே மற்றதனாற்
கூடுங் குறையென்ன கூறு. 11

### கட்டளைக் கலித்துறை

கூற்றம் வருமுன்னே குஞ்சி வெளுத்துக்கண் பஞ்சடைமுன்
போற்றிப் புகழ்ந்து புனைமினோ சித்தி விநாயகன்றாள்
ஊற்றமா யெம்மா னுறைகின்றான் கொக்கூர்ப் பதியதனிற்
காற்றுள்ள போதிலே தூற்றிக்கொ ளென்பர் கவிஞர்களே. 12

### நேரிசை வெண்பா

கவின்சிறந்த கொக்கூர்ப் பதிவாழ் கணேச
நவினாவி னின்றுறை நாத - புவியெல்லாம்
போற்றிட மன்னும் பொருளே நினதுபுகழ்
சாற்றிடுவேன் நின்னையே சார்ந்து. 13

### கட்டளைக் கலித்துறை

சார்ந்தார் நலம்பெறல் கண்டுமே சார்குவன் பொய்ப்பொருளே
நேர்ந்த மனக்குறை நீக்கிடு சித்தி விநாயகனே
கூர்ந்த மதியிடைத் தித்தித்தல் கூரும் மதுரசமே
பேர்ந்து பிறப்பதும் வேண்டுவன் நற்சார்பு பெற்றிடினே. 14

### நேரிசை வெண்பா

பெற்ற மனிதப் பிறப்பிது பேறுறவே
நற்றவஞ் செய்தல் நமது கடன் - மற்றது தான்
சித்தி விநாயகன் சீர்ப்பாதஞ் சிந்தையில்
வைத்தே யொருமை யுறல். 15

## கட்டளைக் கலித்துறை

உற்றா ருறவினர் சுற்றமே யொக்க லெனேப்பலரும்
பற்றி யிருந்து பலபல பேசுவர் சில்பொழுது
மற்ற விநாடி கலைந்திடு வார்சந்தைக் கூட்டமிதே
உற்ற துணையது சித்தி விநாயக னொண்பதமே. 16

## நேரிசை வெண்பா

ஒள்ளியா னண்ணினர்க்கு நண்ணாருக் கோர்வரியான்
உள்ளி னவனுரு வோங்காரம் - வள்ளலாஞ்
சித்தி விநாயகன் சேவடிகள் யாவர்க்கும்
அத்தமே யாகு மகத்து. 17

## கட்டளைக் கலித்துறை

அகத்துறு நோயை யறிவா ரகத்தி னமர்ந்திருந்தே
மிகைத்திடு நானென தென்னு மகந்தையை வேர்களைவான்
செகத்தினில் வைத்தியன் போலருள் சித்தி விநாயகனே
திகைப்புற துன்ப மருந்தென வூட்டித் திருத்துவனே. 18

## நேரிசை வெண்பா

திருந்தா வவுணன் றிறல்கெட வீட்டிப்
பெருந்தேவ ரின்னல் களைந்தான் - அருந்தவத்தோர்
சேர்கொகூர்ச் சித்தி விநாயகன் சீராரும்
பேர்சொல்லப் போமே வினை. 19

## கட்டளைக் கலித்துறை

வினைப்பகை வெல்ல விரும்பு நமர்காள் விநாயகற்கு
முனைப்பொன்று மின்றி முழுமுத னீயே யெனமொழிந்து
மனத்தினிற் சேவடி சேர்த்தி மறைமுறைப் பூசனைகள்
தினைத்துணை செய்யினுஞ் சிந்தித்த காரியஞ் சித்திக்குமே. 20

திருச்சிற்றம்பலம்

# கொக்குவில்

# கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி மீது பாடப்பெற்ற

# அந்தாதி

## காப்பு

சீரார்ந்த கொக்குவிற் சேந்தன் சிவசுப் பிரமணியன்
வாரார் பணைமுலை மாத ரிருவர் மருங்கணையுந்
தாரார் கடம்ப னடிக்கீழ்த் தமிழ்மாலை சாத்துதற்குக்
கூரார்ந்த கோட்டுக் கணேசன் குரைகழல் கூடுதுமே.

## நூல்

வடித்த தனிவே லுமதி வதன மலர் நகையு
மெடுத்த வரதா பயகர முந்தோளி லேருருவத்
தொடுத்த சுடர்த்தெ ரியலுங் கடம்புந் துணைப்பதமு
மடுத்த விழுத்துணை யாங்கும ரேச னடியவர்க்கே. 1

அடியா ரவல நினைவிற்கொண் டீடி லருள்சுரக்கக்
குடியார் மனைக ளலைகு மரனருள் கூடிடுமேல்
படியார் மிசைவரு நோய்பகை யாதி படரனைத்தும்
பொடியாம் பரத்திற் புகழ்முத்திப் பேறும் பொருந்திடுமே. 2

பொருந்து புவனப் பொருண்முத லாசை புறனகற்றித்
திருந்து கிருபா கரன்துணைத் தாண்மலர் சேர்நினைவி
லிருந்து மிகநைந் திரங்கி யலமந் தெழுபவர்கள்
மருந்து மகிழ்வு முடனெய்தி முத்தி மருவுவரே. 3

மருவார் கடம்பன் மலரடி மன்னு மனத்தினர்க்குத்
தருவார் நிதியுந் திடனுந் தெளிவுஞ் சிறந்திடுநற்
பெருவாழ்வும் புகழும் பெட்பும் பிறவிப் பிணியறுக்கக்
குருவாந் திருவரு ளுங்கூ டிடுமிக் குவலயத்தே. 4

குவலயத் தேகட லேழுங் குடித்த குறுமனிதன்
கவலகத் தேதமிழ் தேக்கிக் கருது கலையனைத்து
நுவலவ ருள்கிரு பாகரன் நாளு நினைபவர்க்கிங்
கவலம றுத்தரு னல்குவ னன்பி லகமகிழ்ந்தே. 5

மகிழ்வ தனமு மலர்க்கண்ணு மார்பும் வரமருளத்
திகழ்வேற் கரமுங் கடம்பமர் தோளுந் திருந்தடியார்
புகழேர் பதமு நினைந்தக மேற்றுப் புனைந்துநித
நெகிழ்ப வருக்கென்று நீடுய ரின்ப நிலைத்திடுமே. 6

நிலையாய் நிறுத்தி யிருதாள்க ளுய்த்து நினைபவர்தந்
தொலையாத் துயர்மாய் விக்க மயிலிற் றுரிதமுட
னிலைவா யயில்கொண் டருகி லணைவ னிகலவுணர்
தலையா யெழுசூர் முதறடிந் திட்ட சரவணனே. 7

சரவண னேசஞ் சலநெஞ்சஞ் சோரச் சலித்தலமந்
தருகணை வார்த மருவினை தேய்க்கு மருட்டுணையே
யொருகண நான்மற வேனு பயபத மோருதரக்
கருவணை யாவகை யுய்த்துக் கருணையிற் காத்தருளே. 8

காத்திடு கைகளா றிரண்டுங் கருணை கதுவிமகிழ்
பூத்திடு நெஞ்சுந் தலையி லணிந்து புனைந்தடியா
ரேத்திடு பாதமு மென்று மருளு மெழின்முகமு
மீத்துயர் தீர்த்திடு வேலுமிங் குண்டு விழுத்துணையே 9

துணையுஞ் செழும்பொரு ளுந்தொடர் சீருஞ் சுகநலனு
மிணையில் புகழு மிசையு மெழிலு மிருநிதியுந்
தணலிற் றெறலுங் கிருபனென் றேத்து தகவுடையோ
ரணையும் புகழெய்தி யார்த்த பிறவி யறுப்பவரே 10

அறுத்தே னெனதறி யாமை யரவினை யாதியெலாஞ்
செறித்தேன் றிருவடி யகத்தே சீர்திகழ் திண்மையினாற்
பறித்தேன் பிறவி பொருந்தே னரகம் பயமொழிந்தேன்
வெறுத்தேன் புலனாசை மன்னுவேற் கையனை வேட்டபின்னே 11

பின்னே துரந்துன் னடியாரை யன்பிற் பிணிப்பதற்குங்
கன்னே ருளநெகி ழக்கனிந் தென்றுங் களிப்பதற்கும்
முன்னே விரத முயன்றுகொண் டேன்வியன் மூவுலகும்
மன்னு கிருபா கரனே வரமருள் மாணிக்கமே. 12

மாணிக்க மேயடி யாருள்ள மன்னி மதிப்புயரு
மாணிப்பொன் னேயம ரர்துணை யாய வருணிதியே
சேணிற்கு நெஞ்சினர் சேராத திருவேயென் சிந்தையுணின்
தாணிற்க வேயருள் வாய்தகை சால்நின் தயையுளமே 13

உளமே விருத்தி யுணர்வ ழியநின் றுயர்கதியின்
வளமே விநிற்க முயல்பவ ரார்வர் மயலொழித்துக்
களமே வுபகை தொலைக்கக் கமல கயமருவு
தளமே யகிரு பாகரன் தாண்மலர்த் தண்ணிழலே. 14

நிழலே விரும்பி நலிவர் வெயில்சுட நிற்பவர்நின்
கழலே கதியெனக் கொண்டுண் மகிழ்வர் கவினடியார்
தொழலே யினியென்றொண் டாகுந் துரந்து தொடர்வினையி
லுழலேன் மனத்திற் கிருபனு யர்கருணை யூறிடவே. 15

ஊறு சுவைநாற்ற மோசை யொளியென் றுறுபுலன்கள்
வேறு வழியுய்க்கக் காலன் முடுகி விரைந்திடுநா
ளாற துரந்தே யெனைக்காத் தருளன் றெனக்குதவித்
தேறுத னல்கு சுரர்சிறை மீட்ட சுடர்க்கொழுந்தே. 16

கொழுந்தே மனங்க சியத்தலை தாழக் குனிந்துதரை
விழுந்தே பரவு மவர்வினை வீக்கும் விழுப்பொருளே
செழுந்தேனே சேர்ந்தேன் திருவடி வந்து திரும்பவினி
யழுந்தேன் பிறவி யதுநான் புரிந்த வருந்தவமே. 17

தவம்புரிந் தேயென் கரும மியன்றேன் தவமறியா
தவம்புரி வார்நெறி நில்லே னிடர்தரு மார்வினையாந்
துவந்துவந் தேயத் திருவுயர் தொண்டர் தொடர்வழியே
நிவந்துற மார்வ மிகுந்தே னிலைத்திட நீயருளே 18

அருளாரு மன்னை கருணை யறியா தழுஞ்சிசுப்போல்
மருளாரு நெஞ்ச முலைவேற் கருளி மகிழவணைத்
திருளார் நரகி லிருங்கால னுய்க்க விசைந்திடுநாள்
பொருளார் கழலா வெனைக்கா பொருவில் புரவலனே. 19

புரவல னேபுண்ணி யர்தம் பொருளே புலனைந்தும்
பரவல ருங்கங்கை மைந்தா படரும் பகையவுணரப்
பொரவல னேயன்ப ருள்ளம் பொருந்து பொருளனைத்துந்
தரவல னேசண் முகனே தருதிநின் தண்ணளியே. 20

அளியே யடியா ரகம்புக் கிருந்திங் கருள்சுரக்கும்
விளியே விரதிய ரின்னல் விலகிட வீசுதென்றல்
வளியே யெயினர் குலவள்ளி சேனை மனமகிழுங்
களியே யுதவு கருதிடு மின்பக் கதியெனக்கே. 21

கதிநல்கு ஞானமு நல்குங் கருதுகங் கைநதியாந்
ததிநல்கு சாவா மருந்தாய்த் தகுவோர் சரணடைய
மதிநல்கு முத்திக்கு வித்தா முதனல்கு மன்னுயிர்க்கே
விதிநல்கு வேதா சிரமொக்கு வான்றன் விரைகழலே. 22

விரையு மறலி யுயிர்க வருமுன் விழைந்துமனங்
கரையு மெனைக்காத் தருள்வாய் கனலுங் கனகதழல்
புரையு முருவிற் பொலிதரு வாய்புகழ் பொன்மறையி
னுரையு முதலு முடிவு மெனவுய ருத்தமனே. 23

உத்தம னென்னை யவனியிற் காத்திட மொண்பொருளாய்
மத்தம னசத்தினர்ச் சேரா மதிநல்கி வாழ்வளித்தே
சித்தம கிழ்வித் தடிக்கீ ழிருத்திச் சிறப்புயர
வைத்தன னன்பை வகையறிந் தெத்திறம் வந்திப்பதே 24

வந்தனை செய்துள மார வணங்கி வழுத்திமன
நொந்தனை வார்துணை யாகி நினைவி னிலைத்திடுஞ்சீர்க்
கந்தனை வள்ளி மணாளனை யானைதன் கேள்வனையே
சிந்தனை செய்மன மேசெல்வன் சேவடி சேர்வதற்கே. 25

சேரன் புடன்செய் பூசையிற் றிகழ்ந்திடு செவ்வேலோன்
பேரன் பினிலே பிணிபடு வான்பின்னும் பீடுயரு
மாரன் பினிலே யருளீவ னற்றார்க் கருந்துணையாஞ்
சூரன் பினேதொடர் சுற்றந் தொலைத்த சுரர்பதியே. 26

பதியேன் பொருளாம் பதமகத் தேபத்தர் பற்றுநெறி
வதியேன் கிருபற் பரவி வழுத்து வகையறியேன்
மதியேன் மகிமை மலர்கரு ணைக்காய் மனனெகிழத்
துதியே னிருந்தேன் தொலைத்திடு வேனோவென் தொல்வினையே 27

தொல்வினை வேரறத் துன்னு பவந்தேயச் சொல்லரிய
நல்வினை யாலுன் னருள்பெற்றேன் நானினி நண்ணுகிலேன்
வல்வினை யுய்க்கு நிரயம் பணிவன் மனமெனுமென்
கல்வினை மென்கனி யாக்குங் குமரன் கழலிணையே. 28

இணையி லருள்பெறு தற்கே யிராப்பக லேங்கிநிற்குந்
துணையி லியைக்காத் தருள்வாய் துதியாருந் தொண்டரரு
கணையுங் கிருபா கரனே மறைபுக ழாரமுதாய்
பிணையன் பினிற்றுயர் மாயப் பிறவிப் பிணியறுத்தே 29

பிணிவே ரறுக்கும் பெருமா னடியார்க்குப் பேறருள்வான்
அணிசேர் மடவா ரிருவர் மருங்கே யமர்ந்திருக்கப்
பிணிமுக மூருங் கிருபா கரனாய்ப் பிறங்குகின்றான்
பணிபவர்க் கென்றும் பரிந்தருள் செய்யும் பதியவனே 30

பதியாய்ப் பசுவினை போக்கும் பிரான்கிரு பாகரனே
நதிசேர் புனலொத்த வாழ்வினை மாற்றி நடுவுசெய்வான்
துதியார் மனத்தினிற் றூரநிற் பானெங்கள் தொல்முருகன்
கதியே தருவான் றனைப்பணி யுத்தம சீலருக்கே 31

சீலந் தருவாழ்க்கை யுள்ளத்த ருள்ளே சிறந்தினிக்கும்
மாலது வானவர் மற்றதை யீதெனக் காண்கிலார்
ஓலிடு வானவ ருற்ற துயர்களை யொண்பொருள்காண்
மேலிடு முள்ளத் துணர்வாய் மிளிர்கிரு பாகரனே. 32

கரம்பன் னிரண்டுடைக் காளைபா லன்புகூர் காதலர்கள்
நிரம்பு மனநிறை நேயர் நிதஞ்சலிப் பில்லவர்கள்
வரம்பு கடவார் வணங்கிய சென்னியர் வானவருங்
கரங்குவி கண்ணியர் கங்குல் பகலது காண்கிலரே 33

காண்கிலர் நின்னைக் கடுத்தவஞ் செய்துங் கலைப்புலவோர்
தீண்டினன் பாதஞ் செருச்செய்து நிற்பினுந் தீயவுணன்
ஈண்டிதன் விந்தை யெவரறி வார்க ளெழின்முருகா
மாண்ட தவத்தின் மகிமை யறிவார் மதிபெரிதே 34

மதியுடை வேடர் மகளை மணந்தான் மழமுருகன்
நதியன வாழ்வில் நசையுடை யானே நமையுடையான்
சதியுடை யைம்புல வேடரி னீக்கித் தனதடிக்கீழ்க்
கதிபெற வைத்தனன் கார்வளர் கொக்கூர்க் குருமணியே. 35

குருமணி யாகிக் குடிலையைத் தந்தைக்கு முன்னுரைத்தான்
உருகி யுளங்கொள வாறெழுத் தோது மொருமையரை
கருவினில் வாரா வழியருள் செய்வான் கலந்துநின்று
செருவினிற் சூர்முதல் செற்றிட்ட சேவற் கொடியவனே 36

கொடிய வவுணரைக் கோலினிற் காய்ந்த குமரனையே
படியி லெழுதிப் பலமுறை யென்மனக் கோயிலினுள்
நெடிது நிறுவி நிறைபுன லாட்டு நிலைவருமோ
செடிகொ ளுடலினைச் சீர்பெறப் போற்றுஞ் சிறியெனுக்கே 37

சிறியனேன் புன்மொழி செல்லுமோ வுன்செவி செந்திவாழ்வே
குறுகுநோ யெண்ணில கொள்கல னிவ்வுடல் கோதைமமார்தந்
திறமுளேன் றீமையே செய்வன்யா னென்செய்கேன் றெய்வமாதர்
புறமுளாய் யான்செயும் புன்மை யனைத்தையும் போக்குவாயே. 38

போக்கில னென்றும் வரவிலன் யாண்ட நிறைவினைய்
ஆக்கி யெவையு மளித்தமிப் பானெங்க ளாதிமுதல்
நோக்கினிற் றூய்மை நுணுக நுனிக்குமெய்ஞ் ஞானியரைத்
தாக்கறத் தானாக வாக்கு மெழில்சேர் சரவணனே 39

சரவண னென்றொரு காற்பேசிற் சாந்தி நிலைத்திடுமே
நரகமு மில்லை நமனா ரணுகார் நலஞ்சிறக்குஞ்
சுரருல காகுஞ் சுமைபல நீங்குஞ் சுகம்பெருகும்
பரவிட வாரீர் பணிவோம் பதமலர் பன்னி நின்றே 40

பன்னிப் பணிந்து கிருபா கரவென் றழுதழுதே
துன்னித் துணைவனைக் கூடம் படியு முளதுகொலோ
முன்னைப் பிறவி வினைவந்து கூட முழுமகனாய்ப்
பொன்னைப் புகழொழு பூமியைத் தேடம் புலையெனுக்கே 41

புலையனாய்ப் போகம் புரிந்து திரியும் வினையுடையேன்
அலைபுன லாடி யடியிணை சூடி யகனமர்ந்தே
நிலைமன னோடு நினைவுறு நாளு நிகழ்ந்திடுமோ
சிலைநுதற் றேவி துணைமுலை சேர்ந்திடுஞ் சண்முகனே. 42

சண்முகா வென்றன் றயாநிதீ குற்றந்த தவிர்த்தருள்வாய்
மண்ணிலே வந்து மயங்கினேன் மாதர் புணர்ப்பினிலே
கண்ணிலேன் மற்றோர் துணையிலேன் கந்தப் பெருந்தகையே
விண்ணுளோர் வாழ விடுத்தனை வீர வுடம்பிடியே. 43

உடம்பிடி யேந்தி யொருபெருஞ் சூர்மா வுடறடிந்தான்
கடம்பமர் காளை யெனிலவன் செய்கை கதமுடைத்தோ
கொடுஞ்சூர் மமதை குறைத்தது ஞானங் கொழுத்துதற்காந்
திடம்படு மாணவ நீங்கித் திகழ்வது நங்கடனே. 44

கடனெமக் கிங்குன் கழலடிக் கன்பு கடைப்பிடித்தல்
உடையவ னீயுன் கடனெது வென்று முரைப்பதாமோ
இடைவிடா துன்ற னடியார்கூட் டத்தி லிருக்கவைப்பாய்
கொடைமிகு கொக்கூர்ப் பதியினில் மேவும் குமரவேளே. 45

குமரனைக் கொக்கூர் கொழுந்தினைக் கொங்கார் கடம்பனையே
அமரர்கள் வாழ்த்தி யடலுடை யாற்ற லிடர்கடந்தார்
சமரிடை வந்திடுந் தாரகன் சிங்கன் சரிந்துபட
நமரென யாரு நசிவுறச் சூரனும் பட்டனனே. 46

பட்டது போதும் பரம குருவே பழியுடையேன்
இடரைச் சேர்ந்து னினத்தொடுங் கூடி யிருப்பதெந்தாள்
மட்டவிழ் மாலைக் கடம்பணி மார்பா மதிதருவாய்
துட்டரை நீங்கித் துரிசு மகன்று சுகம்பெறவே. 47

சுகம்பெற லாகுமச் சூர்முதல் கீண்ட துணைவனடி
அகந்தனில் வைத்துத் தனசெய லற்றுத் துயில்புரிந்தால்
இகலுற வில்லை யிடர்சுக மில்லை யெவையுமொன்றே
புகலுதற் கில்லைப் புதுநிலை மற்றிது போதுவமே. 48

போதுவங் கொக்கூர்ப் பதியினிற் பூரணன் கோயில் கொண்டான்
மாதுயர் தீர்க்க மறுவறு மாத ரிருவரொடும்
நாத நமவென நல்வாழ்த் தெடுப்பவர் நண்ணிநின்றார்
தீது நெறியினிற் சேரா திருந்திடச் சேருவமே. 49

சேவற் கொடியவன் வந்தெனைச் செய்தன செப்பவற்றோ
பாவைக் கொடிய ரிருவ ரிருக்கவும் பார்த்து நின்றான்
தாவிப் பிடித்தெனைத் தன்னரு காக விருத்தினன் காண்
ஆவிக்கு மோசம் வருமோ வறிகில னாரணங்கே. 50

ஆரணம் போற்றிடு மாறு வதனத் தழகொழுக
வாரணி கொங்கை மடவா ரிருபால் மகிழ்ந்தமரச்
சீரணி சேவல் மயிலொடு வேலுஞ் சிறந்தொளிரப்
பூரணன் கந்தன் புதுக்கோயின் மேவும் பொலிவிதுவே. 51

பொலிந்திட மேனி பொதுள வணிபூதி கண்டிகையும்
மெலிந்திடு யாக்கையுங் கோவண வாடையு மேவுதண்டும்
நலிந்தெனை நோக்கு நயனுறு பார்வையு நாடிக்கண்டேன்
வலிந்தரு ளாண்டீ வருமோ வெனக்கிந் நிலையதுவே. 52

அதுவே குறியந் நிலையெற் கருளா யருட்கடலே
கதிர்வே லவனே கடம்பணி மார்பா சரவணனே
புதிதா வருமொரு கோயிற் புனிதா புகலிடமே
மதுவா யெனது மனத்தினுள் வாராய் மறைப்பொருளே. 53

மறைப்பொருள் காட்டும் வழிநின்று மாத்துயர் மாற்றிடுவீர்
இறைத்துணை சோதிக்க வேண்டா மிறைவ னருட்பெருமை
துறைப்பல காட்டினன் றொல்லுயர் வாழ்ந்து துறையடையக்
கறைப்பா டிலாதன கண்டிப்பாய் வீடு தருவனவே. 54

வீடு பலிக்க விறைவுறு நெஞ்சே விரிந்துசெல்லும்
பீடில் மனத்தைப் பிடித்து நிறுத்தி யொருகுறியில்
நீடு நிலைக்க விடுவாய் முயன்று நினைவொருக்கி
கூடு முனக்கொரு கூறெனை வின்பக் குறிநிலையே. 55

குறியொன் றிலாத கொடுவினை யேனைக் குலைகுலைத்து
மறுகிட வாட்டும் பழவினை தீர்த்தால் மறுவருமோ
அறுவ ரளிக்கு மமுதுண்ட கந்தா வணிமலர்சேர்
மறுவறு கற்புடை வள்ளிதெய் வானைக்கு வாய்த்தவனே. 56

வாய்த்தநின் கோலத்தை வானவர் காணார் மயங்குகின்றார்
தீய்த்தொழிற் சூரனோ மற்றதைக் கண்டு திளைத்து நின்றான்
ஈய்த்துநீ காட்டித் தெளித்திடிற் காண வியல்பதுவே
மாய்த்திடு சூரனைக் காணென்று காட்டித் தெரித்தனையே. 57

தன்னையே தந்திங் கெனைக்கொண்டான் சண்முகன் தாரணியில்
பின்னைப் புதுக்கோயில் மேவிப் பிரிகிலன் பேணிநின்றான்
என்னை யுடையா னினியெனக் கேதுங் குறைவிலையே
மன்னி மகிழ்ந்து மருவிநின் றாடுவென் கூத்தினையே. 58

தினைத்துணைப் போது நிலையிலா விந்த வுடம்புகொண்டே
எனைத்துணை யேனு நினக்குறு பூசை புரியவெண்ணேன்
பனைத்துணை தேடிப் பசிக்கும் புதல்வர்க்கும் பாவையர்க்கும்
மனைக்கு மெனவே மறுகுகின் றேனென் மதிமயக்கே. 59

மதிகெட்டு மங்கைய ராசை வலையிடைப் பட்டுநின்றேன்
கதிகெட்டு வஞ்சப் பொறிவழிச் சென்று கலங்குகின்றேன்
நதியன்ன வாழ்வை மறக்க வறியே னறுங்கடம்பா
பதுமைகொள் கோயில் புரிந்திருந் தாய்நீ புகலிடமே 60

புகலரு வாவி யிடைவரு கந்தக் கடம்பணிவான்
நகைமுகப் புண்டரி கத்திடை மேவு மயனைமுன்னாள்
தகவுறு வேத சிரப்பொருள் கேட்டுச் சிறையிலிட்டான்
மிகையுடை யாரும் மமதை யுறுதன் முறையலவே. 61

முறையில ராகி யமரர் முதலோ ரிடருழந்தார்
கறையயில் வேலனை வாழ்த்திக் களைந்தார் தமதிடர்கள்
இறைநிலை யமர்ந்தோ ராயினும் வீழ்வர் முறைதவறின்
நறைமலர் மாலைக் கடம்பனை வாழ்த்தின் நலம்வருமே. 62

வரும்பவ நோய்கெடும் வள்ளி மணாளனை வாழ்த்தினர்க்குத்
திருந்தா மனமுந் திருந்திடுந் தீயார் பகையழியும்
பொருந்தாத பூத மடைத்த சிறைநீங்கிக் கீரனுமே
பெருந்தமிழ் பாடி முருகனைப் பேறு பொருந்தினனே. 63

பொருந்தும் பிறவியைப் போக்கலாம் புன்மை தவிர்த்திடலாம்
திருந்திய நல்லன வெல்லாம் பெறலாங்கு பாகரனை
நெருங்கி யொருதரம் கொக்கூரிற் சென்று தொழுதிடவே
மருந்தாய்ப் பிணிதீர்ப்பன் மாமறை காணா மறையவனே. 64

மறைமுதல் தந்தை செவியின் மருவ மொழிந்தருளிச்
சிறைவீ டயனுக் களித்தசெய் யோயெஞ் சிவகுருவே
நறைநிறை பூஞ்சோலைக் கொக்கூர்ப் பதியி யைந்திருந்து
முறைமை நிலைபெறச் செய்வாய் சிறியேமை யேன்றுகொள்ளே. 65

ஏன்ற சராசர மெல்லா மொருதன் வயிற்றடக்கித்
தோன்றாப் பொருளதாய்த் தானே தனித்த தொருபொருளாய்
ஈன்றாகும் போதி னிருவரைக் கூடி யெழிற்குமரன்
மூன்றாய தன்மைய தாகி முழுதுந் தொழிற்படுமே. 66

படுகின்ற வெல்லா மவனன்றி யில்லைப் பரந்தபொருள்
நடுநின்று காப்ப னொருதனி வேலு முடன்பொருந்த
முடிவினி லெல்லா முடன்றனிற் சேர முகிழ்த்துநின்று
துடியிடை யாரு மலைவில ராக நடித்திடுமே. 67

நடிப்பள வேயா முடலுயிர் வாழ்வு நலமழிவும்
படிப்படி யாக விதனை யுணர வருமருவி
செடிச்செடி யாக வினைபடச் செய்து முவர்ப்புறவே
நொடிப்பொழு துண்மை யுணர்வு பெயர நுவன்றிடுமே. 68

நுவன்றன கொண்டே நுவல்வழி நின்று நுவலரிய
பவநீங் கிடலாம் பரவெளி யுள்ளே புகுந்திடலாம்
நவநவ மான நிலைமைகள் கூடு நமதிறையும்
புவிமுதன் மாளப் புறத்தினி லின்றி யுணர்வுறமே. 69

உணர்வி லொளியாகி யூற்றெடுத் தோடு மமுதமதாய்ப்
புணரு முருகன் புதுக்கோயில் சென்று பணிந்திடுவோர்
இணையி லருள்பெற் றடையார் நரகக் குழியதனிற்
புணையா மவர்க்குப் பொருகந்த வேளிப் புவியிடையே 70

புவனியி னின்னடி யானென நாடக மாடுகின்றென்
அவமுடை யென்னிடை யன்பு நினக்குச் சிறிதுமில்லை
பவமறுப் பேனெனப் பாவனை செய்யு மனத்திடையே
சிவகுரு நாதா வுனக்கன்பு செய்ய வருளுதியே. 71

அருளே யமையும் பிறிதொன்று வேண்டேன்க்ரு பாகரனே
பொருளாய் மதியேன் புரந்தரன் வாழ்வும் புவியரசும்
நிரந்தர நின்னை நினைக்கப் பெறினமை யும்முருகா
சுரந்தமு தூறு மடியினைக் கீழென் றலைமறைவே. 72

மறைந்தே யொழுகிடும் வாழ்க்கை யுடையேன் மறைமுருகா
நிறைந்த மரஞ்செறி கொக்கூர்ப் பதியிற்க்ரு பாகரனைக்
குறைந்து வழிபடும் பேறுள தேவிப் புவிமிசையே
பிறந்த பிறப்பும் புனித முளதேயிப் புன்மையற்கே. 73

புன்மை கெடமன நின்னை நினைக்க சிரமதுவும்
நின்னடித் தாழ்க திருமேனி கண்களுங் கண்டிடுக
பன்னியே வாயும் புகழ்பேச கொக்கூர்க்ரு பாகரனே
இன்ன வகையெற் கருளுதி யேலென் றவம்பெரிதே. 74

தேவே கடம்பணி மார்ப குமர வெமதிடரைக்
காவா யெனவே யமரர் முறையிட வாங்கவர்க்காக்
கோவா மசுரன் கிளையொடு மாள வயிலெடுத்தாய்
ஓவா தெனையடர் தீவினை யோட்ட லுன்கடனே. 75

கடலே நிலனனல் காற்றொடு விண்ணு மிருசுடரும்
விடவே றடையிய மானனு மாகி விரிந்துநின்ற
சுடர்வே லுடைய பராபர கொக்கூர்க்ரு பாகரனே
அடர்கின்ற நோயெனை யாற்ற கிலனந்தோ வென்செய்வேனே 76

செய்ய சடையிடைச் சேர்கங்கை மைந்தா சிவகுமரா
உய்ய வழியறி யாது மயங்கு மொருவனுக்குத்
துய்ய திருவடி காட்டி யளித்தாற் குறையுளதோ
ஐய கிருபா கரகொக்கூர் வாழ்வே யறுமுகனே. 77

அறுமுகச் செல்வா வமரர்கள் கோவே யகப்புலன்கள்
வெறியுறு கின்ற விளைவ தறியேன் விடுதிகொலோ
நெறியுற நின்று நினையறி மார்க்க நிலையருளாய்
பொறிவழிப் போகா வழிபெற வேண்டும் புரவலனே. 78

புரையுடைத் தோற்பை யுடலிது நாளும் புதுக்குகின்றேன்
வரைவில் வியர்வை வடிந்திட நீராற் கழுவுகின்றேன்
விரைமலர் சோலைக்கொக் கூர்க்கிரு பாகரன் வாழ்த்தறியேன்
நரைதிரை மூப்புளே னெற்றுக்குத் தோன்றின னிவ்வுலகே. 79

உலகி லுறுதுணை யாவன் கிருபா கரப்பெருமான்
அலகில் விளையாட் டுடைய னமரரைக் காத்துநின்றான்
பலபல செய்வான் பகைவர வொட்டான் பரந்துலகில்
நிலைநெறி தந்து நினைவினுள் வந்து தலைப்படுமே. 80

தலைப்பட்டு நின்னடி சாரும் வழியெற் குளதுகொலோ
அலையிடைப் பட்ட துரும்பென லானேன்க்ரு பாகரனே
உலையிடை யோடுங் கமட மதுபோ லுகந்திடுவேன்
அலைவா யமரு மமுதே கிருபா கரமுதலே. 81

முதலு முடிவு மிலாத முருகா முழுமுதலே
சதமொன்று காணேன் சலிக்கின்றேன் சாவாய் விடுதிகொலோ
சதமிலா விந்த வுலகினில் வாழே னழைத்தருளாய்
புதுக்கோயில் மேவும் புனித கிருபா கரமுதலே. 82

கிருபா கரமுதல் கேடில் விழுப்பொருள் கிட்டினர்க்குக்
கரவா தளிக்குங் கடம்பணி மார்பன் கதியளித்து
மருவு மவரை மறைமுறை காட்டு மதிக்கொழுந்தே
அருவு முருவுட னானவ னேயென் றனித்துணையே. 83

தனிப்பொருள் யாவுக்குந் தாரகந் தோன்றலில் சண்முகனே
நுனித்தறி யொண்ணாத நுண்பொருள் கொக்கூர் நுழைபொருளே
பனித்த சடையுடைப் பாலா கிருபா கரமுதலே
இனித்த முடைநின் னடிக ளகத்தே யியைவனவே 84

இயைந்தே யெவையுங் கலந்துறை யுங்கிரு பாகரனே
பயந்தார் துணையாகும் வேற்படை யாய்மயில் வாகனனே
அயர்ந்தேன் பிணியொடு மூப்புக்கு மாளாகி யாற்றகில்லேன்
உயர்ந்தார்க் கருள்புரி யுத்தம னேயெனைக் கூவிக்கொள்ளே. 85

கூவா தொழியி னுயிர்விடு வேன்பழி கூடிவிடும்
நாவாற் றுதிப்பா ரினியுனை யென்றுமே நாடியிடார்
பாவாணர் தாமும் படியார் கிருபா கரவுனையே
தேவா னவருஞ் சிரிப்பார் பினையென்ன செய்குவையே 86

செய்ய திருப்பொற் பதமல ருஞ்சீர் பொலிந்திலங்கும்
துய்ய வரையி லுடையி னழகுந் ததைந்தமைய
ஐயன் கடம்புந் திருமுகச் செவ்வியுஞ் சேர்ந்தொளிர
மெய்யன் கிருபா கரனை யணியுறக் கண்டனனே. 87

கண்களுன் றாள்களைக் கண்டு களிப்புற் றமர்ந்திடுக
பண்புகள் கேட்க செவிகள் பரந்த புகழ்களையே
எண்பெறு வாயு மியம்புக கைகள் மலர்கள்கொண்டே
அண்மி யணியவென் கால்களு மாலயஞ் சூழுகவே. 88

சூழ்ந்தடித் தாழுக சென்னி முரலுக மூக்கினியே
ஆழ்ந்தொருப் பட்டு நிலையுக சிந்தனை தாளிணைக்கீழ்
வீழ்ந்து தரைமிசை யாகுக மேனி வினைகெடுத்து
வாய்ந்த பிறப்பிது வாய்த்த தவனியி னந்தமக்கெ. 89

கேடொன்று மில்லைக் கிருபா கரனம்மைக் காத்திடுவான்
நாடு நலம்பெறு நம்பிணி போயறு நாமுயர்வோம்
பீடை கெடுமினிப் பேதுற வில்லைப் பெருமைவரும்
வீடும் பகையும் விளைவுறும் வீர மினிதுறுமே. 90

உறுவ வுறுக வொருதனி வேலுண்டிங் கஞ்சுவதேன்
அறுமுக வண்ண லமர்ந்துளன் கொக்கூர்ப் பதியினிலே
உறுதி யுடனவ னுண்மைகள் பேசி யுருகிடுவோம்
இறுதி வரினு மயர்விலை யின்பமு மெம்பொருளே. 91

பொருளருட் செல்வம் புனைவது கந்த புசிப்பதுவும்
பெருகிய வையம் புறங்கடைத் திண்ணை யுறங்குவது
பருவர லேது பழவடி யாரெம் முறவினராம்
பரிதியு மெங்கே யெழிலென் கவலை யுறவிலமே. 92

இல்லையென் னாதீயு முள்ளமு மென்னுங்க்ரு பாகரனே
அல்லல் வரினு மசையா நிலையு முருத்தெழுந்து
கொல்ல வரினு நகைசெய் முகனாய்ச் சினத்தலிலா
நல்ல வுறுதியு நான்பெற வேண்டுஞ் சிவகுருவே. 93

வேலாற் றுளைத்து வரையைப் பிளந்த சிறுகுமரா
நூலா லறிந்திட லொண்ணுமோ நீயே தெரிக்கினன்றிக்
காலா யுதக்கொடிக் கந்தா முருகா கடம்பணிவாய்
சீல மிலாத சிறியே னுனை யெங்ஙன் றேர்வதுவே. 94

தேரேன் சிவசுப் பிரமணி யாவுன் றிறங்களல்லாற்
பாரே புனலனல் காற்றுட னாகாச மாகிமற்றைச்
சீர்சே ரிருசுட ரான்மாவு மாய்நீ மருவியெங்கும்
பேராது நின்றாய் பிணிப்பில னாகிப் புவியினிலே. 95

ஏது மறியா ரயன்முதற் றேவர்க ணின்பெருமை
மாத ரிருவர் மருவிட வெல்லா மளித்தழிப்பாய்
சோதி சுடர்விடு தோன்றல் கிருபா கரகுமரா
ஆதி யெனவே யறைவே னென்று நின்புகழுகே. 96

புகழ்பேச வல்லா ரருண கிரியொடு கீரனுமே
அகழ்வாரைத் தாங்கு நிலம்போல நீயு மறுமுகவா
இகழ்வாரை யுங்காத்து நிற்பை நெறிமுறை நாட்டிடுவாய்
தகவிலாச் சூரனை யூர்தி கொடியாகக் கொண்டனையே. 97

கொண்டா யிடமாக வாறு படைவீடு கோமகனே
தண்டா வலைவாய் பழமுதிர் சோலை பழினியொடு
துண்டாது சிந்து பரங்குன் றுடன்வரு மேரகமும்
எண்டிக்கு முள்ள மலைகளு நின்விளை யாட்டிடமே. 98

ஆடுங் குமர னணைந்தென் னுளத்துட் புகுந்துநின்றான்
பாடும் பரிசு மளித்துப் பணிந்து பரவவைத்தான்
கூடும் பரிசன் றெனக்கிது கொச்சைக் குறுப்புடையேன்
தேடு மமைதி மனத்தி லடைந்தனன் றேசிக்னே. 99

தேசிக கொக்கூர்க் கிருபா கரனே யெனநினைந்து
மாசில் கழற்கீழ் மருவி யிருக்கு மதுவலது
வீசு கதிர்முடி வேந்தர் பெருநிலை வந்துறினுந்
தூசெனக் கொள்வேன் றுளங்கிடே னென்றன் சுகவடிவே. 100

திருச்சிற்றம்பலம்

## கொக்குவில் (புதுக்கோயில்)

## கந்தன் கலம்பகமாலை

### வஞ்சி விருத்தம்

சித்தி யானை தன் சேவடி
நித்தம் நீடி நினைந்திடச்
சித்தி யாயிடுஞ் செய்தொழில்
பத்தி செய்து பணிமினோ. 1

### எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

பணிபடச் சீறும் பச்சை மயின்மிசைப்
பறந்து நொடியினிற் பரிந்தருள்வான்
பிணியொடு பீழை பிறங்கு முடலிது
பேணி நிதமும் வளர்ப்பதென்னீர்
நணுகுமின் நல்ல கொக்கூர்ப் பதியது
நாடி நலிவு நனியகல்வான்
பணிவொடு பால முருகனைப் பாடப்
பாறிடும் பாவ வினைகளையே. 2

### எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

பாவ வினைகள் களைவாய் நீயே
பன்னிரு கையுடைப் பரமன் நீயே
தேவ தேவனாய் நின்றாய் நீயே
தேறுவா ருள்ளுணர் வானாய் நீயே
தாவு மயின்மிசை வருவாய் நீயே
தறுக ணசுரனைத் தடிந்தாய் நீயே
கூவு தொண்டர்தங் கோமான் நீயே
கொக்கூ ரமருங் கொழுஞ்சுடர் மூர்த்தி 3

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

மூர்த்தி மூவர்க்கும் முன்னவன்
முழுது மாகி முகிழ்த்தவன்
தீர்த்தன் செம்மையுள் நிற்பவர்
சிந்தை மேவிய சேவகன்
ஆர்த்த சூர்முத லட்டவன்
அண்ணல் கொக்குவில் மேவினான்
வார்த்தை யொன்றென் செவியுளே
வண்ணம் பேசி மகிழ்தந்தான். 4

### கலிநிலைத்துறை

தந்தைதாய் சுற்றமே தார மகவென் றிவரியாரும்
சந்தையிற் கூட்டமே யல்லது மற்றொன் றிலையெனவே
சிந்தைசெய் நெஞ்சமே தேடருங் கொக்கூர்ப் பதியமரும்
எந்தைதாள் வாழ்த்தி யிறைபணி நிற்ற லருந்தவமே. 5

### எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

மேலே யிந்திரன் வானவர் தானவர்
மேவு வார்நினைத் தம்பதம் பேணக்
கோல மஞ்ஞையூர் கொக்குவில் மேய
குமரனே யுனைக் கூடுமா றறியேன்
சால நின்பதத் தன்புதந் தருளாய்
சார்வ தற்கொரு சார்பது காணேன்
காலன் வந்தெனைக் கைக்கொளும் போது
கைகொ டுத்தெனை யாளுதி ஐயா. 6

### கலிவிருத்தம்

ஐயநின் பற்றொழிய மற்றொருபற் றீங்கில்லை
செய்யசே வற்கொடிசேர் சேந்தனே கொக்கூர்வாழ்
தையல்தெய் வானையொடு வள்ளிசேர் தற்பரனே
உய்யுநெறி காட்டுவா யுன்றாளென் சென்னியவே. 7

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

சென்னியோ ராறுந் திருவிழிகள்
மூவாறுந் திருமுகஞ்சேர் செவ்வியும்
பன்னிரு கையிற் படையுங்
கடம்பணி மார்பகமும் பான்மதிபோல்
மின்னுந் திருநீற்றின் மெய்யொளியும்
மேவி யரைக்கசைத்த மென்றுகிலும்
துன்னு திருவடியின் றோற்றமுங்
கண்டேன் றுகளெனை யடையாவே. 8

### கலிவிருத்தம்

அடைக்கல முனக்கே ய றுமுக மணியே
துடைக்கினும் போகேன் றொழுது வணங்கி
மிடுக்குறு கிற்பேன் மேவல ரஞ்சி
நடுக்குறு வார்கள் நமன்றமர் நணுகார். 9

### நேரிசைவெண்பா

நணுகா வினைகள் நலியா பசிநோய்
மெலியோமே யென்று மெதற்கும் - வலியாய
சூர்முதற் செற்ற சுடர்வே லுடையானைக்
கார்மேவு கொக்கூரிற் கண்டு 10

### எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

கண்டா ருனையிலை விண்ணிலு மண்ணிலு
மென்று பழமறை சாற்றியிடும்
தண்டேன் பிலிற்று மணமாலை பண்டு
குறமகள் சூட்டிடுந் தாபரனே
தொண்டாண்டு கொண்ட தூமனத் தாருளங்
கோயிலாக் கொண்டருள் செய்பவனே
கண்டே நறவொடு பாகே யெனவர்
சிந்தையு ளூறிடுஞ் செம்பொருளே. 11

### வஞ்சித்துறை

செம்பொரு ளானைக்
கம்பித மாகிக்
கும்பிடு வார்கள்.
வெம்பிணி போமே. 12

### கலிநிலைத்துறை

போமா றுளதோ புழுத்தலை யேற்குப் பொய்ம்மையெல்லாம்
ஆமாறு மென்றோ அயிலோய் நின்னுடை யின்னருளே
தேமா மதுரக் கொக்குவிற் பதியிற் றெள்ளமுதே
காமா திகள்கெட நின்றவர் போற்றுங் கதிரொளியே 13

### நேரிசை ஆசிரியப்பா

ஒளியுநீ இருளுநீ ஒருதனிப் பொருளுநீ
அளிதரு மண்ணனி ஆர்வலர்க் கமுதநீ
இன்பநீ துன்பநீ ஏதிலர்க் கிடியுநீ
துன்பற நீக்கிடுஞ் சோதிநீ ஆதிநீ
அறமுநீ மறமுநீ அந்தமு நடுவுநீ
திறலுநீ தீனநீ திருத்திகழ் செல்வநீ
துக்கமொடு சுகமுநீ நீயாலா லொன்றிலை
கொக்குவிற் பதியமர் குமர
திக்கெலாம் விளக்குந் தீபமு நீயே 14

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

தீயன புரிபவ ராயினுஞ்
சென்றுகொக் குவிலிறை யுற்றிடின்
போயவை மாய்ந்து மடிந்திடும்
புத்துயிர் பெற்றவ ராகுவர்
சேய்ன சேவலங் கொடியவன்
தெய்வத நற்றிரு வந்திடும்
தூயன சிந்தை நிறைந்திடும்
சோதி முகத்தின ராவரே. 15

## எண்சீர்ச் சந்தவிருத்தம்

வரமாணப் பெற்றந்த அயனாதி வானோரை
வானாட்சி குலைவெய்த வருமாறு வதை செய்த
சுரநாசன் முடிவெய்தச் சுடர்வேலைத் தொட்டன்று
சுரர்வாதை துடைத்திட்ட சிவன்மைந்த னிருதாள்கள்
திரமாகப் பற்றிப்பின் றீதான செற்றிட்டுச்
சிறியேனு முய்யுநெறி தேர்ந்தே னெனக்கினியென்
அரியாதி யமரர்கள் அனுதினமு மர்ச்சிக்கும்
அரசான கொக்கூரிற் பரனாரென் சிரசாரே. 16

## எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

சிரமா றுடைய செம்மல்செவ் வேற்பெருமான்
திருக்கோயில் கொண்டமருங் கொக்கூரில்
வருமாலோ வீதி வனிதைய ரிருவரொடும்
வண்ணங்கள் பேசி வடிவழகன்
உருகிற்றெ னுள்ள முளைகின்ற தென்மனமும்
ஒருதுறையுங் காணே னென்செய்கோ
மருவி யெனையணைய வாரான் முகம்பாரான்
மா திமையோ மற்றிவற்கு மங்கையீரே. 17

## எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

மங்கைய ரிருவர் மருவின ரென்னும்
மல்லிகை மாலை புரள்கிற தென்னும்
தங்கிலன் சென்றான் றகவில னென்னும்
தருமோ மாலை தானெனக் கென்னும்
கொங்கலர் கோழிக் கொடியவ னென்னும்
கூறருங் கூர்வே லுடையவ னென்னும்
அங்களிர் மயின்மே லமர்வா னென்னும்
ஆலயஞ் சென்று மீண்டவென் பெண்ணே. 18

## பதின்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

பெண்க ளிருவர் பெட்புறு பெம்மா னிவனேகாண்
பேதையர் நெஞ்சம் பேதுற வருவா னிவனேகாண்
வெண்சுடர் வேல்கொடு வீறுகொள் வீர னிவனேகாண்
வெந்துயர் தந்தெமை மெலிவுறச் செய்வா னிவனேகாண்
தண்ணளி யில்லான் றாவி மயின்மிசை வருகின்றான்
தார்தரி னென்னோ தாழ்ச்சி யிவற்கா மென்பார்கள்
வண்ண வடிவன் வருவழி நின்ற மடநல்லார்
வாடி வதங்கி வார்த்தை யிவையிவை பகர்வாரே. 19

## வேறு

பகர்வா யெனக்கிது பண்பறி யேனை வினவிடுவேன்
பாங்குற வலப்பால் வள்ளியை வைத்தாய் இச்சைகொலோ
நிகரி லிடப்பால் தெய்வி யமர்தல் கிரியையதோ
நேர்பெறு வேலது நிறைதரு பூரண ஞானமதோ
குகனே கொடியொரு கோழியு மாதி குடிலைகொலோ
கொண்டிடு மயிலுங் குணமுடை மாயை யதுதானோ
சகமுழு தாடத் தனிமுத லான தற்பரனே
தாதவிழ் பொழில்சூழ் கொக்குவிற் பதியமர் சண்முகனே 20

## வஞ்சி விருத்தம்

சண்முக னடிகள் தொழுதெழுவார்
மண்மிசை வாரார் மதியாளர்
புண்ணிய பூமி கொக்குவிலை
நண்ணினர் நாளும் நலிவெய்தார் 21

## எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

நலிகின்ற நானென் மலமான சூரன்
உடன்மாய்ந்து வீழ வெறியும்
வலிநின்ற வேலை வலமா யுயர்த்து
வருகின்ற செந்தி முதலே

கிலியொன்றி நின்று கெடுகின்ற வென்னைக்
கிலிதீர்த்த லுன் கடனே
ஒலியொன்று பாட லுளமார வோதி
உறுசேவை செய்த லெனதே. 22

## கலி விருத்தம்

எனதெனு மமதை யிறவருள் முருக
உனதிணை யடிக ளுறுகவென் மனனே
தனமொடு தாரந் தனையரு நீயே
மனமறு நிலையும் மருவுக மன்னி. 23

## ஆறடித்தரவு கொச்சகக் கலிப்பா

மன்னாதி மன்னவரும் மாய்ந்து மடிகின்றார்
மன்னாத வாழ்க்கையிது மன்னுமென மாய்கின்றாய்
என்ன சுகநெஞ்சே நீகண்டா யிவ்வாழ்வில்
பன்னிப்பல சொன்னாலும் பாழ்மனமே கேட்கிலையே
கொன்னுனைவேற் கோமானைக் குறுகிப் பணிகலையே
உன்னுடனே வாழுகிலே னுறுதியிது கூறிவிட்டேன். 24

## கட்டளைக் கலித்துறை

கூறுந் தரத்ததோ கொள்ளை கொலைகள் குவலயத்தே
நாறுங் கடம்பன் தாள்களை நாடா நலிவிதுகாண்
கூறுங்கொக் கூரிற் குமரனைச் சென்றுநீர் கைதொழுவீர்
வேறு புரிவது மற்றிதற் குப்பரி காரமன்றே. 25

## அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

பரியென மயிலினை நடவின னகிலமு
நொடியினில் வலம்வந்தான்
கரிமுக னிருமுது குரவரைக் கடிதினில்
வலமிடக் கனிகொண்டான்

முருகனும் வருதலும் புகுவது தெரிவுறப்
பொருமினன் துறவுற்றான்
புரிவது மிருமுது குரவரி னிகலமும்
புறத்திலை யெனுமுணர்வே. 26

## எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

உணர்வதற் கரியவ னிலனல னுளனவன்
உயிர்களுக் கருள்செயு மொருபெருங் கருணையினால்
புணர்வுறும் பகுதியி னுலகமு முடல்களும்
புலனொடு போகமும் பொருத்தி யியங்கவிட்டான்
குணங்குறி யிலனென வுரைப்பினு முயிர்களின்
குறையுணர்ந் துருக்கொடு வறிபட வந்தருள்வான்
மணங்கமழ் பொழில்வளர் கொக்குவிற் பதியிறை
மருவுவ னடியரின் மகிழ்வரு சிந்தையிலே. 27

## எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

சிந்தை செய்கை வாக்குக் காயஞ்
சேர வொன்றி நின்றிலேன்
புந்தி கெட்டுப் புன்மை மிக்குப்
போத மின்றி யுழல்கிறேன்
எந்தை கொக்கூ ரீச வென்னை
ஆண்டு கொள்ள வல்லைநீ
தந்தை தாயுஞ் சுற்ற மெல்லா
முன்னை யன்றி யுளர்கொலோ. 28

## வஞ்சித்தளையுடை நாற்சீர்ச் சந்தவிருத்தம்

உளனென்பவர்க் குளனாமவ னிலனென்பவர்க் கிலனே
தெளிவில்லவர் தேறாதவன் றெறுசூர்முதற் றடிந்தான்
அளியுள்ளவர்க் கருளும்முமை தருகாதலன் முருகன்
துளியன்புவைத் திடினுமவர் துயர்தீர்த்தரு டருவான். 29

## எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

அருள்பொழி வதன மாறுகண் டொருத்தி
அறிவழிந் தாள் நிறையிழந்தாள்
பருவர லெய்திப் பசலை படர்தரக்
கைவளை சோர்ந்தாள் கண்கலுந்தாள்
அரகர முருகா வம்பிகை பாலா
எனமொழிந் தாள்கை கூப்பிநின்றாள்
தெரிவரி தாலவன் செய்கை யிதுவெனத்
தேறில ளந்தோ திகைக்கின்றாள். 30

## அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

திகைப்பினை பொழிந்து நெஞ்சே
சேர்குவை கொக்கூர் தன்னில்
பகைப்புலஞ் செற்ற செவ்வேள்
பரிந்துனைப் புரந்து காப்பான்
மிகைப்படு துயர மெல்லாம்
வீந்தொரு நொடியில் மாயும்
பகைப்பவ ரில்லை மேலை
வானமு முனக்கு வாய்க்கும். 31

## எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

வாய்த்ததொரு நற்பிறவி வையமிசை யெற்கு
வானவருந் தானவருந் தாம்விழைவர் சார
தீத்தொழிலால் வேதியர்கள் செம்மையுறு கொக்கூர்
சென்று தொழு வார்வினைகள் தேய்ந்தொழிதல் திண்ணம்
சாய்தலை யோடு நிதஞ் சண்முகனை செய்வேன்
சஞ்சலமு நைந்துபடச் சாதனைகள் செய்வேன்
தூய்தமிழின் மல்குபுக ழாரமவை சாத்தித்
தொண்டுபல செய்துவினை தூறு நெறி நிற்பேன். 32

### நேரிசை வெண்பா

நிற்பது கொக்கூர நிமலனை வாழ்த்தியே
கற்பதுங் கந்தன் கதைகளே - பற்பல
பேசிப் பொழுதென்றும் போக்குவ தில்லினி
நேச மவனிடை வைத்து. 33

### நேரிசை ஆசிரியப்பா

வைத்தன னுனக்கே யென்மனம் வேலவ
கைத்துணை கொண்டு கடிமலர் சொரிவேன்
பைத்தலைப் பணியைப் புடைக்கும் மயிலோய்
நித்தனே நிமலா நிகரில் நிறைவே
பத்தி செய் பவர்தம் பாவந் துடைப்பாய்
நோயவை களைவாய் நுனைநினை வோர்க்குப்
பாய புகழோய் பாலெனத் தேனெனச்
சேயே நிற்பாய் நீயே
தூயநின் சேவடி தொழுதமர் வேனே. 34

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

அமரரு முனிவரு மருந்தவஞ்
செய்து வாடினர் காணகிலார்
சமர்பொரு சூரனுங் களித்தனன்
கண்டு சார்ந்தன னூர்தியாகிக்
குமரனே கொக்குவி லமர்தரு
கோமான் காத்தரு ளெனத் தொழுதேன்
தமரொரு வருமிலர் தாங்குதல்
வேண்டுஞ் சண்முக தற்பரனே. 35

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

பரனே பதியே பல்லுயிர்க் குயிரே
பரவுவார்க் கணியவனே
குரவா குமரா குறமகள் கணவா
கொக்குவில் வாழ்முதலே

அரனார் மகனே அம்பிகை பாலா
ஆதுலர்க் கருள்பவனே
எரியா ருருவா இறைவா எம்மான்
என்பவ ரிடரிலரே. 36

## குறளடி வஞ்சிப்பா

இடர்கூர்தர வலமந்திடுங்
கொடியேனுன வடிசாருவன்
வடிவேலவ சிறிதேயருள்
புலனானவை வலிபோயிட
மனனேர்நிலை நெடிதுற்றிட
என்றும்
மகிழு நிலையை மருவ
திகழு நினதடி தலைமிசை யனவே. 37

## வஞ்சித்துறை

வேலன் சேவடி
நூலின் முறையால்
சீலஞ் செப்பக்
கால னோடுமே. 38

## கட்டளைக் கலித்துறை

ஓடொடு செம்பொனு மொன்றென நோக்கு முயர்தவத்தோர்
நாடிடு கொக்கூ ரமர்தரு நாதனென் னுள்ளிருக்கக்
கோடிடு வேந்தன் கொடுமைகள் செய்து குலைத்திடிலென்
ஓடி நமனுடை யொற்றர் குறுகி யொறுக்கிலுமே. 39

## கலிவிருத்தம்

ஒறுத்திடு புலன்களை யொடுக்கி நிலைகொள
நிறுத்திடு நலத்தவர் நீடுறை கொக்கூர்க்
குறத்தி மணாளனைக் குறித்துணர் மேலோர்
மறப்பிலர் நினைப்பில ரேமுறு வாரே. 40

### நாலடித் தரவு கொச்சகக் கலிப்பா

ஏரார்ந்த கொக்கூரி லியைந்திருந்த வெம்பெருமான்
சீரார்ந்த சேவடியே சேர்ந்தபெருந் தனமெமக்குப்
பேராது நாடோறும் போற்றிடுவோம் மற்றவையே
ஆராத வீட்டுலகு மாசைகொள்ள மாட்டோமே. 41

### நேரிசை வெண்பா

மாடுறு செல்வமும் மற்றுள போகமும்
வீடுமே வேண்டா விறலுடையார் - நாடியுனக்
காளாவார் கொக்கூ ரரசே யன்னார்க்குக்
கேளாவார் வேறுண்டோ கூறு 42

### பதின்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

கூறு மடிய ரிடர்கெட வருள்புரி குமரன்
கொக்கூ ரமருங் குருபர னெழில்மிகு மிறைவன்
நூறி யசுரர் முறிதர வமர்புரி நுகவன்
நுணுகி யறியு மறிவின றறிவினுள் நுழைவன்
நாறு மலர்க ளணிகுழன் மடவரல் நயவன்
நாளு நலியு மடர்புல னிடரவை நலிவன்
பேறு பணியு மடியவர் பெறவருள் பெரியன்
பீடை நலியப் பருவர லுறுமெம தரணே. 43

### பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

அரணா யுறுபவ னமல னாதி புராதன னிறைவன்
அன்பர்தம் நெஞ்சினி லமர்வா னந்தமி லன்பினை யருள்வான்
சரணா யடைபவர் சார்பு சாத்திரம் பலபல வளித்தான்
சார ராயினுஞ் சரணாஞ் சஞ்சலந் தீர்ந்திட வாள்வான்
முரணார் மூர்க்கரை முனிவான் முன்னிக் கொக்கூ ரமர்ந்தான்
முயல்வர் முயற்சியு ணிற்பான் முடிவி லின்னருள் செய்ய
அரனார்க் கன்றுரை செய்தா னாதிக் குடிலையின் பொருளை
அண்டினெ னறுமுகனடியை யவனே யெனக்கொரு துணையே 44

## அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

துணையோ சுற்றமு மக்களுந் துன்னி நமனார் பற்றிடுங்கால்
அணைவான் றுணையென லேவ னண்மிக் கொக்கூரி லமர்ந்தருள்வான்
பணிவோம் பற்றி யவன்பதம் பாறும் பாவ வி னைமுழுதும்
மணியே முத்தே பொன்னே மன்னே யெனப்பாடி யாடுவமே. 45

## எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

ஆடிப் பாடி யணிகொக் கூரா
அன்பர்தந் தாசா வெனப்பேசித்
தேடிக் கூடித் திருமால் மருகன்
தேவர் தஞ் சேனா பதிதன்னை
வாடு மெனது வாட்டந் தீர்க்க
வருவாய் மயின்மீ தெனத்தொழுவேன்
நாடும் பொருளே நம்பா நாதா
நாயேற் கிலைமற் றொருவருமே. 46

## எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

ஒருவனே யோர்வாருக் குண்மயனே கொக்கூர்
உத்தமனே யோங்காரத் துட்பொருளே முன்னா
வருகைமா முகற்கிளையாய் வணங்குவா ருள்ளூற்றே
வள்ளிமகிழ் மணவாளா வண்மைநிறை மருந்தே
கருவா யுலகுக்குக் காரணமாய்ப் பல்லுயிர்க்கும்
களிப்பூட்டிக் காத்திடுங் கருணைமிகு கடவுளே
தருவாயுன் றாளிணைக்கீழ்த் தண்ணிழலெற் குருப்பம்
தாங்ககிலே னிந்த நாறுடலின் பாரமுமே. 47

### நேரிசை வெண்பா

பார முனக்கே பழனி முருகையா
வாரமு முன்னடிக்கே வைத்தேனென் - ஆரமுதே
உன்னையே தஞ்சமென் றுள்ளுவே னென்னிலைமை
தன்னை யறியாயோ தான். 48

### கட்டளைக் கலித்துறை

தானே யெனக்குத் தலைவனாய்க் கொக்கூ ரமர்ந்தருள்வான்
நானு மவன டியவ னென்னுமிந் நீர்மையினால்
தேனொடு பாலெனத் தித்தித் திருக்கு மெனக்கவனே
ஊனுயி ரெல்லாங் கலந்தின்ப நல்கு முறுமுதலே. 49

### நாலடித் தரவு கொச்சகக்கலிப்பா

முதலாகி முடிவாகி முன்னுமாய்ப் பின்னுமாகி
இதமாகிக் கதமாகி யோகமாய்ப் பலவுமாகிச்
சதமாகித் தனையுடைவார் தம்வினைகள் போக்குவிக்கு
மதனாலிவ் வுயிர்க்கடைவே யம்முத்தி சித்திக்குமே. 50

திருச்சிற்றம்பலம்

# கொக்குவில் புதுக்கோயிற் சிவசுப்பிரமணியர் தாண்டகப் பத்து

திருச்சிற்றம்பலம்

பத்தி செயு மடியாரைப் பயந்தீர்த் தாண்டாய்
பாவியேற் குனதருளுங் கிட்டு மோதான்
சித்திதருஞ் சேவகனே தேவ தேவே
சிவசுப்ரமணியனே சிவனார் பாலா
முத்திமுதல் முன்னவனே மூவா மூர்த்தீ
முழுநாளு நாயகனே முயல்வோர்க் கென்றும்
நித்தியமாம் நிலையருளும் நேய மிக்காய்
நீசனேற் கருளுவது மென்று தானோ. 1

என்றென்றே ஏங்குவேற் குறுதி யுண்டோ
இவ்வுலகி லினியெனக்கிங் கியாருமில்லை
நன்றதுவுந் தீயதுவும் நீதா னெந்தாய்
நாயகனே சிவசுப்ர மணிய மூர்த்தி
பொன்றாத புதுக்கோயில் மேவு மீசா
புத்துயிரெற் களித்தருள்வ துன்றன் பாரம்
கன்றைநினை தாயெனவே வந்திங் கென்னைக்
கருமாளக் கடைக் கணிப்பாய் கந்த வேளே. 2

கந்தவேட் பெருமானே கருது வார்க்குக்
கருணை மழை பொழிமுகிலே கனகக் குன்றே
சிந்திப்பார் சிந்தைநிறை தேனா றூற்றே
சிவசுப்ர மணியனே சிவனார்க் கன்று
முந்தைமறை முதலைமுறை யாகச் சொன்ன
மூர்த்தியே ஆத்தமாம் பேறு நல்கும்
எந்தையே என்னையுமோர் பொருளாக் கொண்டென்
இலம்பாடிங் கொழித்தருளிச் செய்தி டாயே. 3

செய்குவன செய்யாதே யவமே செய்யுஞ்
செடியனேன் செனித்தபயன் கொள்ளே னெந்தாய்
நெய்யொடுபா லாட்டுகந்த நிமல வாழ்வே
நிறைபொருளே சிவசுப்ர மணிய மூர்த்தி
மையமருங் குழல்வள்ளி மையல் நீங்க
மணமாலை சூட்டியருள் மலையே யுன்னைக்
கைதொழுவார் குறை நீக்கல்கடன தன்றே
கடம்பமலர் மாலைபுனை கொக்கூர்க் கோவே. 4

கோவாகிக் குவலயத்தைக் காக்குங் கோனே
குறிகுணமொன் றில்லாத குமர வேளே
சேவாருந் தில்லையுளான் சேயே கொக்கூர்ச்
சிவசுப்ர மணியனே செவ்வே லேவி
மாவாருஞ் சூரனுட லிருகூ றாக்கி
மயில்சேவ லெனவடிமை கொண்ட மைந்தா
பூவாரு மாக்கள்படு துயரந் தீரப்
புன்மையவை போக்கிடுவாய் பூத நாதா. 5

நாதவடி வாகியுறு சேவ றன்னை
நல்லகொடி யாவுயர்த்த நம்பி யெந்தாய்
சீதமிகு சோலைசெறி கொக்கூர் மேய
சிவசுப்ர மணியனே செம்மை யாள
போதமுறு பிரணவத்தின் பொருளைக் கேட்டுப்
பிரமனைவெஞ் சிறையிலிடு புனித வேலா
தீதின்றி யுலகமெலாஞ் சிறந்து வாழத்
திருவருளின் நிறைவருள்வாய் தேவ தேவே. 6

தேவரொடு முனிவர்களுந் தொக்கி ருந்து
தக்கன்செய் வேள்வியவி யுண்ட பொல்லாப்
பாவவினை நீங்கிடவே சிறையிற் புக்கார்
பரவவரு சிவசுப்ர மணிய மூர்த்தி

மூவரொடு மொருவனென முறைமை யாக
மூவுலகும் படைத்தளித்தே அழித்தல் செய்வாய்
பூவுலகு புன்மைமுதற் பகைமை நீங்கப்
புண்ணியனே நின்னருளுங் கூடல் வேண்டும். 7

வேண்டியன ஈபவனாய் நின்ற நின்னை
வேதங்கள் தேடியலைந் திளைத்து நின்ற
தீண்டரிய கற்புடைய தெய்வ யானை
கணவனே சிவசுப்ர மணிய தேவே
தூண்டுசுடர் விளக்கனையாய் சொல்லுக் கெட்டாத்
தூமணியே சொற்பொருளே துலங்கு நின்னைப்
பூண்டுகொண்டு தலைமீதே போற்றா நாயேன்
பூவுலகிற் கிடந்துழலப் பிறந்த வாறே. 8

பிறப்பிறப்பைக் கடந்தார்கள் பேசிப் போற்றப்
பெரியவுல கவர்க்கருளும் பிரானே எந்தாய்
சிறப்பர் நிறை மாடமலி கொக்கூர் மேய
சிவசுப்ர மணியனருள் ஞானம் நல்க
அறப்பணிகள் பலபுரியுந் தொண்டர் பல்லோர்
அறிவாளர் அவரெந்தம் உச்சி மேலார்
மறப்பரிதா மவர்பெருமை மாண்பு மிக்கார்
மற்றவர்தஞ் சேர்க்கையெனக் கென்று கிட்டும். 9

கிட்டுதற்கே எட்டாதான் கொக்கூர் வாழ்க
கிடைத்தற்கிங் கரியவவன் அருளும் வாழ்க
சிட்டர்போற் றெடுப்பவமர் கின்ற செல்வச்
சிவசுப்ர மணியனுமே வாழ்க வாழ்க
மட்டலங்கற் குழலிருவர் வாழ்க வாழ்க
மயிலுடனே வேல் சேவல் வாழ்க வாழ்க
பட்டவிடர் நீங்கியிட வுலகம் வாழ்க
பல்லோரும் மகிழ்தூங்க வாழ்க பக்தி. 10

திருச்சிற்றம்பலம்

# வேலன் பாட்டு

திருச்சிற்றம்பலம்

உள்ளத்தாற் பொய்யாதோ ருறவு கொள்ளேன்
உன்னடியை ஒருமையுட னுணர மாட்டேன்
பள்ளத்தே பாய்ந்தோடும் நீரே போலப்
பரங்கருணை பொழிமுகிலே பைந்தார் வேலா
தெள்ளூற்றே சிந்திப்பார் சிந்தை யானே
தேவசே னாபதியே தெய்வி கோனே
கள்ளத்தேற் கருள்புரியுங் கால முண்டோ
கலங்கினேன் களைகணிலேன் கந்த வேளே. 1

வேட்டுருகு மடியார்த முள்ளத் துள்ளே
விளைதேனே வேறின்றித் தோன்றும் வேலா
வாட்டமுட னுனையடைந்தேன் வைவேற் கந்தா
வள்ளியெனுங் கொடிபடரும் வயிரத் தூணே
வீட்டுநெறி காட்டி நிற்கும் வேத நாதா
வேண்டியதே தந்தருள்வாய் வெம்மை நீங்கி
ஈட்டுவினை யவையெரிய எளிய னேற்கும்
இனியவுரை யொன்றுசெய்வ தெந்த நாளோ. 2

நாளோடு கோளவையும் நமை யென் செய்யும்
நமனுடைய தூதருமே நணுக மாட்டார்
தூளாக வரைபொடித்த வேலன் றாள்கள்
துணையுண்டு பயமில்லைத் துரிச றுத்தோம்
கேளானா ரவனடியார் நேயம் மிக்கார்
கேடுபடாத் திறமுடையார் பிறப்பு மில்லார்
ஆளாகி யவனுக்கே அன்பு செய்வோம்
அருள்வழியே அமைந்திருப்போம் அலைவி லோமே. 3

இலையார்ந்த பொருநெடுவே லொருகை யேந்தி
இமையோர்தம் இடர்களைந்த எந்தை வேலா
உலைபாய்ந்த மெழுகென ஒருத்தி காதல்
உன்பால்வைத் துருகுகின்றாள் விந் தை யீதே

அலைபாய்ந்த என்மனமு மொன்றி நிற்க
அருளுவது முன்றிறமே யன்றி யில்லை
கலைவாய்ந்த தமிழ்முழுது மகத்தி யற்கே
கற்பித்தாய் நின்றிறங்க ளறிவார் யாரே. 4

அறிவாகி யுள்ளத்தே அமர்வான் றன்னை
அறுபடை வீடுடைய அப்பன் றன்னைக்
குறியான கோமானைக் குமரன் றன்னைக்
குறமகள் காதலனைக் குழகன் றன்னை
வெறிவிரவு மலர்கணிறை கொக்கூ ரானை
வேலவனை மாலவற்கு மருகன் றன்னை
நெறியதனை விரித்துரைத்த நீர்மை யானை
நினையாதே வீண்காலம் போக்கி னேனே. 5

போகங்கள் புணர்த்துகின்ற பூத நாதா
பூரணனே பொய்யிலியே பொருவி லாதாய்
வேகங்கள் கெடுத்தாண்ட விமல மூர்த்தி
விண்ணவர்தஞ் சிறைமீட்ட வீர வேலா
மோகங்கொள் முறையில்லாக் கொற்றம் நம்மை
முருக்குதலை ஆற்றுகிலோம் ஏந்தா யீசா
சோகமுறு தனயர்துயர் துடைப்ப தற்குன்
சுடர்நெடுவேல் மீண்டொருகால் எடுத்தி டாயே. 6

ஆயுடனே அப்பனுமாய் அணைத்துத் தாங்கி
அருங்கருணை பொழிமுகிலே அணியார் கொக்கூர்
மேயபெரு மலையேயெற் றபயந் தாராய்
விறலார்ந்த வடிவேலா விழுமி யோனே
காயமிது கானனீ ரெனவே கண்டேன்
கருவினிலே வீழாத வழியே காட்டாய்
தூயநின தடியிணைக்கே அன்பு பூண்டேன்
துயர்க்கடலைத் தாண்டுதற்கோர் நாவாய் நீயே. 7

ஏரகமும் அலைவாயு மென்ன என்றன்

இதயத்து மமர்கின்ற இறையே அன்று

வாரிலங்கும் அறுவர்முலை கரந்தே யூட்டி

வளர்க்கவளர் சரவணப்பூம் பள்ளியானே

சூரனுடல் துணிபடவே எறியும் வேலா

சோலைசெறி கொக்கூரிற் சிறந்த செல்வா

பாரவன முலைமடவார் பற்றாய் நின்றாய்

பணிபுரிந்தே பிறந்தபயன் பெறுவன் யானே. 8

யான்பெற்ற பெருஞ்செல்வம் யாரே பெற்றார்

யாண்டுமுறை சேந்தனையே பாடப் பெற்றேன்

ஊன்செறிந்த இவ்வுடலம் ஒன்றென் றெண்ணேன்

உழைப்பதற்கே வந்ததென உணரப் பெற்றேன்

தேன்மிகுந்த அவ்வாழ்வுந் தேட மாட்டேன்

திருமுருகன் திருநாமம் நாவிற் கொண்டேன்

கான்புகுந்தே ஊன்வற்றிக் கழிய மாட்டேன்

கருத்தழிந்து கழல் வணங்கப் பெற்றேன் பேறே. 9

பேறிதனின் மிக்கதொன்று முண்டோ சொல்வீர்

பேசாதே வாய்மூடி மௌனி யானேன்

நாறுமலர் பறிக்கவெனில் நாணுங் கைகள்

நல்வேலன் நயந்தங்கே நண்ணு கின்றான்

கூறுமொழி யாற்குமரன் குணங்கள் பேசக்

குணமில்லாக் கோமானைக் கூற லெங்ஙன்

ஆறிமனம் அவனடிக்கே யிடமா வைத்தேன்

அகலிடத்தீர் வம்மின் அமர்ந் துள்ளு வோமே. 10

மௌனம்

திருச்சிற்றம்பலம்

## சிந்தியற் பத்து

திருச்சிற்றம்பலம்

நீக்க மறவெங்கும் நின்றிலங்கும் வேலவனைப்
பூக்கொண்டு நாடோறும் பூசிக்க - வாய்த்திடுமே
செப்பற் கரிய சுகம் 1

கந்தக் கடம்பனைக் காடுமே டெங்கணும்
முந்தி முயன்றால் முடியாது - சிந்தையரே
நாடுவீ ருள்ளே நயந்து. 2

இந்தப் பிறவி எமக்கீதோர் நற்பிறவி
எந்தப் பிறவியு மீடாக - சிந்தை
திருந்திடுக சேந்தற் றெளிந்து, 3

பகைக்கிற் பகையாகும் பண்பிலார் செய்கை
மிகைசெய்தே சூரன் மடிந்தான் - நகைவேலோற்
கன்பு செயின் வேலே அரண். 4

நண்ணார் கரியகுகன் நற்றாள் மனத்திருத்தி
எண்ணி இறைஞ்ச எளிவருவான் - மண்ணோர்
மருளுக் கவன்வேல் மருந்து. 5

முன்னை வினையவனையே மூளுமென்பர் மேலோர்கள்
என்னவினை செய்தோமோ யாமறியோம் - இன்னினியே
எந்தை குமரனுக்கே ஆள். 6

ஆளானார் செய்கை அயில்வேலன் ஏன்றிடுவான்
கேளாகி நாமவற்கே கீழ்ப்படுவோம் - தூளாகும்
நஞ்செய்கை எல்லாம் நசிந்து. 7

நானே அவனென்று நன்றாகப் பாவிக்க
நானே அவனாக நண்ணிடலாம் - ஆனவிது
நல்ல மருந்தாம் நமக்கு. 8

ஆறெழுத்தை ஐந்தடக்கி ஆர்வ முடன்கணிக்க
மாறிடுமே முன்னைப் பயின்றவெலாம் - தேறுமிது
சிந்தைக்கு நல்ல செயல். 9

என்செயலெ ல்லாமென் றெண்ணி இளைத்திருந்தேன்
உன்னருளே யென்ன உணர்ந்ததன் பின் - உன்னருளின்
உள்ளடக்கி நின்றேன் உவந்து 10

திருச்சிற்றம்பலம்

# கொக்குவிற் கிருபாகரன் குறட்பத்து

திருச்சிற்றம்பலம்

சித்தி விநாயகனைச் செவ்வேற் பெருமானைப்
பத்திசெய்வேன் பாதம் பணிந்து. 1

கொக்கூர்க் குழகன் கொழுகொம்பு கூறுநர்க்குத்
தக்கார்க்குத் தண்ணிழலே யாம். 2

புதுக்கோயில் மேவும் புதுப்பூவின் நாற்றம்
மதுப்பில்கு மென்னுள் மலர்ந்து. 3

பாட்டிற்பண் பாலின்னெய் பாலகிரு பாகரனை
நாடினேன் நெஞ்சுள் நயந்து. 4

ஆதித்த னிற்சோதி ஆக்குகிரு பாகரனைச்
சாதித்தே னென்னுட் டரித்து. 5

ஆறு முகவனை அண்ணுகிரு பாகரனைத்
தேற வுனத்துள்ளே தேடு. 6

வள்ளிகிரு பாகரனை வானவர் தங் கோமானை
உள்ள மலமகல ஓது. 7

தெள்ளு தமிழ்க்குரவன் தேவகிரு பாகரனை
உள்ள வுருகுமென் நெஞ்சு. 8

பள்ளம் படர்புனல்போற் பாய்ந்தோடி வந்திடுவான்
உள்ளவே கொக்கூ ரிறை. 9

சேந்தன் சிவசுப் பிரமணியன் பாதங்கள்
சாந்துணையுஞ் சாராத தேன். 10

திருச்சிற்றம்பலம்

## சைவ உரன்

திருச்சிற்றம்பலம்

### இன்னிசை வெண்பா

கிருபா கரற்கே அடித்தொண்டு பூண்டோம்
மருவிய சுற்றமும் மற்றவன் றொண்டர்
உருகிய சிந்தை உறுமோ பயந்தான்
பொருபடைக் கிங்கென் செயல். 1

சொல்லுவது யார்க்கு மெளிய அரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயலென்று முன்னமே
சொல்லிவைத் தானெங்கள் தொல்லாணை வள்ளுவனும்
நில்லோமோ நாமிவ் வழி. 2

யாதனின் யாதனின் நீங்கியான் தேர்தல்
அதனின் அதனின் இலலென்னும் வாய்மொழியைத்
தீதறவே கைக்கொண்டு சேந்தன்றாள் சேர்வோமேற்
போதுமோ நம்மாட் டிடர். 3

இன்னா செய்தாற்கு மினியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பென்றான் எம்முன்னோன்
மன்னுகிரு பாகரனை மனத்தி லுறவைத்து
நன்னயமே செய்வோம் பிறர்க்கு. 4

துட்டரென் செய்தாலுந் தூய மனத்தேமாய்
இட்டஞ்செய் வோமெங்கள் ஈசன்க்ரு பாகரற்கே
அட்டாங்க மாக அடிவணங்கி ஆர்வமுடன்
அட்டபுட்பஞ் சாத்தி அமைந்து 5

கட்டங்கம் பாய்ந்தாலுங் கையற் றழுங்காமல்
சிட்டன்க்ரு பாகரற்கே சேவைகள் செய்திடுவோம்
நெட்டிருப்புப் பாரைக்கு நெக்குவிடாப் பாறையினும்
விட்டுருவிச் செல்லுமர வேர். 6

வாரி வளங்குன்றி வற்கடந்தான் வந்தாலுஞ்
சோருவதிங்  கெற்றுக்குத் தூயகிரு பாகரனார்
பேரருளிங் குண்டென்றே பேதுறா நெஞ்சமுடன்
சாருவோம் மற்றவன்றன் றாள். 7

சாதி சமயமுதற் பேதமிலை எவ்வுலகுந்
தீதின்றிச் சேருவோம் தீமையொரு நன்மையிலை
ஓதுகிரு பாகரனார் உள்ளுறைவார் நம்மனதில்
பீதி உறுவோமோ பேசு. 8

கோள்கள் குறிதவறிக் கொட்புற்றுச் சென்றாலென்
ஆழியொரு தேரோன் அருக்கன் அவிந்தாலென்
ஊழி முதல்வன் கிருபா கரற்கடியோம்
தாழ்வு வருமோ நமக்கு. 9

கந்தை உடையுண்டு கஞ்சி குடிக்கவுண்டு
சந்திசேர் சாவடி தங்கிச் சரியவுண்டு
வந்தித்து வாழ்த்துதற்கு வேலுண்டு வாய்த்ததுவே
இந்தப் பிறவி எமக்கு. 10

## கொக்குவிற் கிருபாகரர் திருவடி பரவிய

## தேவபாணி

### அம்போதரங்க ஒரு போகு (கொச்சகக் கலிப்பா)

திருச்சிற்றம்பலம்

**(தாழிசை)**

கலைக்கூட மிருபாலுங் கதிர்பரப்பிக் கவின்சிறந்து
நிலைக்கொண்டு நீடியிட நிகழ்ந்துகிரு பாகரனே
உலைக்கொண்ட மெழுகதென வுருகியுள மொருப்பட்டுத்
தலைக்கொண்டு தாளடையத் தருமதுவு முண்டுகொலோ;

பள்ளியிரு பாலுமாய்ப் பாரித்து நிலைகொள்ள
அள்ளியருண் மழைபொழியு மழககிரு பாகரனே
உள்ளியுள மொருப்பட்டுன் னுணர்வினிலே யூறியென்றோ
வள்ளலுன தாளடைந்து வாழ்வுபெற்றிங் குய்வதுவே;

அருக்கலைகள் பலபயிற்று மருங்கூட மிருபாலா
நெருங்கிநிலை கொள்ளவருள் நீங்கிரு பாகரனே
ஒருங்கிமன முனைமுயங்க வுன்பாத தாமரைகள்
வருங்கால மென்றுகொலோ வடிவேற்கைப் பெருமானே ;

**(அராகம்)**

உளநிறை வொடுபல வடியவர் வழிபட
வளமலி கொக்குவிற் பதிநயந் துறைகுவை ;
அரிவைய ரிருபுற மணைவுற வமர்பர
சரவண பவகுக சஞ்சல மறவருள் ;

**(தாழிசை)**

கரும்பெனவே யுளத்தினிப்பாய் கார்மயில்வா கனவேலா
அருந்துயர மவைதீர அருளுவதுன் கடனன்றோ;
ஐம்புலனுக் கெட்டாத ஆதிமுதற் பரம்பொருளே
வெம்புவக் கடல்கடக்க வினைதீர்த்திங் கருள்வாய்;

---

* "நிலைகொண்டு" என்பது எதுகை நோக்கி
"நிலைக்கொண்டு" என்று நின்றது

# கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி

# திருவிரட்டைமணிமாலை

திருச்சிற்றம்பலம்

கிருபை பொழியுங் கிருபாகரனின்
பெருகு புகழ்கள் பேச - ஒருகை
மாமுகனே மாதேவன் மைந்த விநாயகனே
தாவெனக்கு நல்ல தமிழ் 1

நல்ல தமிழ்மலர் நாடித் தெரிந்தன்பு கார்தொடுத்துத்
தொல்லை வினைகெடத் தூயகிருபா கரற்கனிவேன்
பல்கு பிறவியின் வேரறும் பாசமும் பாழ்படுமே
எல்லையிலாவி வூற்றெடுத் தோடிடு மென்மனத்தே 2

என்மன மொன்ற வேழைக் கருள்செய்யாய்
முன்னம் முளைத்த முதலே - இன்னும்
கிருபா கரனே கிரவுஞ்சங் கீறும்
ஒருவாவென் னுள்ளத் துறை 3

உறைவாய் புதுக்கோயில் ஓங்காரத்துட்கிரு பாகரனே
மறைவாய்ப் பிரமன் மதியான்மறைமுன் பொருள் வினவி
முறைவா யடைத்துச் சிருட்டித் தொழிலைப் புரிந்திட்ட நீ
உறைவாயென்னுள்ளத்தி லோரைவ ரென்னை யொறுக்காமலே 4

ஒறுத்த வழகோ உலாப்போந்து வந்து
சிறக்கச் சிறிதென்னை நோக்கி - மறித்துங்
கிறிசெய்து கிருபா கரன்மனம் வவ்வல்
முறையோ முதல்வா மொழி 5

மொழிகின்ற வாறுன்றிருவடியன்றி வேறறியேன்
கிளிநின்ற மென்மொழி யாரீரு பாற்கிரு பாகரனே
பழிகின்ற வெண்ணையு மாண்டுன் பழவடி யீந்தருள்வாய்
அழிகின்ற தென்னெஞ் சருள்பெற வேங்கி யிரந்து நின்றே. 6

இரந்து நின் றேனுனை யென்பிணி நீக்கி
பரந்தெங்கு மான பரனே - சுரந்தே
கிருபை புரியுங் கிருபா கரனே
வருவாய் மயில்மீ திவர்ந்து. 7

மயின் மீ திவர்ந்து வருங்கிரு பாகரன் மாலவுணர்
மயில் போர் முகிந்துபடு முடல் சோரி பரந்திழிய
அயில்வேல் விடுத்தே அமரர் சிறையை அகற்றி நின்று
மயிலே றியவேன் மணந்தான் மறுவறு தோகையையே 8

தோகையர் மாயைத் தொடக்கறு வென்றிசேர்
வாகை புனைந்த வலியோர் - ஓகை
நிறைந்த மனது நிரம்பி நிலையாய்
உறைந்தா ணுமையாள் சுதன் 9

உமையாள் சுதன்கிரு பாகரனும்பரு மோர்வரியான்
எமையா னிளையவனேரம்பன் நல்லருள் பெற்று நின்றே
கமமைசேர் மடவரல் வள்ளியைக் காதல் மணம்புணர்ந்தான்
இமையோர் முதலெவ் வுயிரு முலகி லியைந்தொன்றவே. 10

ஒன்று முளத்தொடு மும்பர் பெருமானை
நன்று வழிபடா நற்கீரன் - நின்ற
மிடைகெட மேவித் திருமுரு காற்றுப்
படையுரை செய்தான் பரிந்து. 11

பரிந்த மனத்தொடும் பண்டுகிருபா கரனைவேண்டி
வருந்தினோம் வல்லண னன்றி வானோர் வணங்கி நின்றாள்
பரந்த கிளைமாவாஞ் சூரனே வேலா லுரம்பிளந்து
சுரந்து கருணை வானவர்க்கு வேலன் சொரிந்தனனே. 12

சொரிந்த மலர்மாலை சூட்டி வதுவை
புரிந்தான் கிருபா கரனே - விரும்பித்
தெய்வ மகளாந் தேவகுஞ் சரியை
உய்வ மவனடியை யுன்னி 13

உன்னற் கரிய கிருபாகரனை யுளத்து வைத்துப்
பன்னிப் பணிந்து பழவினை பாழ்படப் பற்றறுக்க
முன்னை வினையு முழுதழிய மூளும் அருள்பெற்று
நன்னர் தனிநெஞ்சே நாயக னாலய மாயிடுமே. 14

ஆவது மன்றியழிவதும் மீண்டிங்கு
போவது மெல்லாம் புகுந்தாயில் - தேவதாம்
கிருபா கரன்செயல் கேளீர் மடநெஞ்சே
வருகா நியமிங்கு வேறு. 15

வேறாகும் வாழ்வை விரும்பியலையாகத வெய்யகிரி
கூறுபட நூறுங் கிருபா கரனைக் குறிக்கொண்டு
நீறுசேர் மேனிவராய் நேயம் மலியும் நெறிபூண்டு
தேற வமுதுண்டு தெய்வ வருளாய்த் திரிகுவமே 16

திரியு மிடமினி யொன்றே யென் றில்லை
அரியு முறவா மெமக்குட பிரியமாய்
உண்பதும் பிச்சை உறங்குவது மூர்மடம்
நண்பினர் யாகும் நமக்கு 17

நம்பொருள் நம்மக்கள் என்று நவிற்றிநரை வந்திட
கம்பம தெய்திக் கபம்வார்ந் தொழுகிடக் காதடைத்துத்
தம்பம தென்னத் தலைகால் விறைத்து
தும்பி முகற்குத் துணைவ கிருபா கச்சாய்ந்திடும் போது 18

அருளாய சத்தி யிருவ ரிருபால்
பெருகார் வத்தோடு பொருந்த - ஒரு வாதே
நின்ற கிருபா கரவெனை மேவி நின்
றென்றுமென் போகாப் புகல் 19

புகலிட மீங்கெனக் கொன் று மிலைகிரு பாகரனே
அக லிடத் தென்செயல் யாது மிலையெனை யாதரித்து
இகலிடு மைவர் வலிகெட வுள்ளத் திருளகற்றி
பகலிடு போதம் பறிந்தொழிந் தோடக் கிருபை செய்யே 20

திருச்சிற்றம்பலம்

## கொக்கூர்ப் புதுக்கோயில்
## வேணுகோபாலர் திருவூஞ்சல்

திருச்சிற்றம்பலம்

### காப்பு

நீணிலத்து நின்றிசைத்த குழலி னோசை
நிலனிறைந்து வானகத்தும் பரவ வூதும்
வேணுகோ பாலனிசை யூஞ்சல் பாட
விரவியென துள்ளத்துள் விஞ்சி நின்று
காணுமிட மெலாநிறைந்து காட்சி நல்கும்
கணபதியே காப்பாக நிற்ப னென்றே
பேணியவன் றிருவடிக்கே சென்னி சேர்த்துப்
பிரணவத்தை யோதியுளே சிந்திப் பேனே.

### நூல்

சீரிலங்கு செம்பொன்னாற் கால்கள் சேர்த்துச்
சிறந்தொளிகால் வயிரத்தால் விட்டம் பூட்டி
ஏரிலங்கு மிரத்தினநல் விதான மாக
எழிலுடனே மாணிக்கப் பலகை சேர்த்து
நேரிலங்கு முத்துவடம் நிரலத் தூக்கி
நிறைவுடனே யமைந்ததோ ரூஞ்சன் மீது
வாரிலங்கு மடவார்க ளிருபான் மேவ
வளர்வேணு கோபாலா வாடீ ரூஞ்சல். 1

வளர்சோமன் சூரியனுங் குடைபி டிக்க
வந்துநம னுடைவாளே தாங்கி நிற்க
அளகர்கோ னடைத்தடைப்பை யேந்தி நிற்க
அங்கியவ னொளிநிறைதீ வர்த்தி தாங்க
வளியவனு மெழினிறைசா மரையி ரட்ட
வண்மைநிறை கொக்கூரை நீங்கா தென்றும்
வளம்பலவு மடியவர்கட் குதவும் வள்ளல்
வளர்வேணு கோபாலா வாடீ ரூஞ்சல். 2

கன்றாலே விளவெறிந்த கமலக் கண்ணா
        களியுடனே யுறிதிருடுங் கரும்பே தேனே
குன்றாலே மழைதடுத்துக் கோக்கள் காத்தாய்
        குருந் தொசித்துக் கோபியர்கள் மானங் கொண்டாய்
நின்றாடிக் காளிங்கன் கொடுமை தீர்த்தாய்
        நிலையாகப் புதுக்கோயில் வாசங் கொண்டாய்
என்றுமே யிதஞ்செய்வா யெங்கள் கோவே
        எழில்வேணு கோபாலா வாடீ ரூஞ்சல். 3

நறுமலர்க ளுடன்முடித்த குஞ்சி யாட
        நல்லவரை மிசையுடுத்த பட்டு நீடக்
குறுநகைசெய் செவ்வாயிற் குறும்பு சேரக்
        கேக்குலங்க ணாற்புறமுந் துள்ளிச் சூழ
நிறைநீல மேனியழ கொழுகிச் சோர
        நின்றநிலை கண்டவர்க ளன்பு கூர
நறையொழுகு பொழில் சூழ்ந்த கொக்கூர் மன்னும்
        நயவேணு கோபாலா வாடீ ரூஞ்சல். 4

தேவகியர் ரகத்துதித்த தெய்வச் சாலீ
        சிறந்தயசோ தைவளர்க்க வளர்ந்தாய் வஞ்சப்
பூவரச னாங்கஞ்சன் புணர்ப்பி னீங்கிப்
        புவிகாக்கத் தலையெடுத்தாய் புலமை சான்ற
நாவரசர் நற்புலத்திற் செழித்தாய் முற்றி
        நற்கருணைக் கதிரீன்று நன்மை செய்தாய்
வாவிநிறை கொக்கூரின் வளஞ்சி றக்க
        வருவேணு கோபாலா வாடீ ரூஞ்சல். 5

வெண்ணெயுணும் வேட்கைமிக வுறியி லேறி
        வீடுதொறும் விரும்பியுண்ட வெறுவாய்க் கள்வா
பண்ணொழுகும் பாட்டிசைத்துக் குழல்கொண் டூதீப்
        பண்டுபசு நிரைமேய்த்த பவள வாயா

துண்ணெனவே கோபியர்க டுயர மெய்த்த்
துடுக்குடனே யவராடை கவர்ந்த சோரா
விண்ணளவு மாடமலி கொக்கூர் மேய
வேணுகோ பாலனே யாட ரூஞ்சல். 6

பார்த்தனுக்குப் போர்முகத்துக் கீதை யோதிப்
பற்றறவே பணி செய்யும் வகையுங் காட்டிப்
போர்த் தொழிலை முற்றுவித்தாய் புவியின் பாரம்
போக்குதற்கு நீசெய்த புணர்ப்புத் தானோ
தீர்த்தனே செங்கண்ணா கருணை வாழ்வே
திருமகளும் பூமகளும் தோயு மார்பா
கீர்த்திமிகு கொக்கூரிற் குடிய மர்ந்தாய்
கிளர்வேணு கோபாலா வாட ரூஞ்சல். 7

வாய்முத்தந் தருதாயர் வடந்தொட் டாட்ட
வாணியவள் வாழ்த்தெடுத்தே யாசி கூற
நோய்நீங்கு கோபியர்கள் சீர்த்தி யெல்லாம்
நுவன்றுவந்து பல்லாண்டு பாடிப் போற்ற
வாய்நல்வரு வனிதையர்கள் வணங்கி மண்ட
மலர்மகளு நிலமகளு மருவிச் சேர
ஆய்தமிழோர் சேர்கொக்கூ ரகலா தென்றும்
அணை வேணு கோபாலா வாட ரூஞ்சல். 8

பஞ்சவர்க்குந் தூதுவனே யாட ரூஞ்சல்
பார்த்தனுக்குச் சாரதியே யாட ரூஞ்சல்
நஞ்சுடைய நாகணையா யாட ரூஞ்சல்
நான்மறையி னுட்பொருளே யாட ரூஞ்சல்
கஞ்சமகள் காதலனே யாட ரூஞ்சல்
கமலக்கண் ணுடையவனே யாட ரூஞ்சல்
விஞ்சைகள் வல்லவனே யாட ரூஞ்சல்
வேணுகோ பாலனே யாட ரூஞ்சல். 9

பொங்குகடற் பள்ளியனே யாட ரூஞ்சல்
பூபாரந் தீர்ப்பவனே யாட ரூஞ்சல்
சங்கொருகை யுடையவனே யாட ரூஞ்சல்
சக்கரநற் படையானே யாட ரூஞ்சல்
மங்குனிற மேனியனே யாட ரூஞ்சல்
மாசுகளைந் தாள்பவனே யாட ரூஞ்சல்
வெங்கடநற் கிரியானே யாட ரூஞ்சல்
வேணுகோ பாலனே யாட ரூஞ்சல். 10

## வாழி

மறையவரும் வானவரும் வாழி வாழி
மழை பொழிந்து வளஞ்சிறக்க மாசு நீங்க
முறைதவறா மன்னவர்தா மோங்கி வாழ்க
முத்தமிழின் றிறம்வாழ்க முனிவோர் வாழ்க
நிறைதவறா நல்லொழுக்க நீடி நிற்க
நித்தனது திருவருளே நிறைந்து பொங்க
அறைபுனல்சூ ழுலகமெலா மமைந்து வாழ்க
அன்புநெறி தழைத்தோங்க வறமும் வாழ்க.

## எச்சரீக்கை

1. இசைபின்படர் நிரை மேய்த்திடு மிறையே - எச்சரீக்கை
நசையாலுறி வெண்ணெய்கவர் கள்வா - எச்சரீக்கை
2. குன்றான்மழை த்டுத்தேநிரை காத்தாய் - எச்சரீக்கை
கன்றால் விள வெறிந்தேகனி யுகுத்தாய் - எச்சரீக்கை
3. ஐவர்க்குறு துணையாகிய வண்ணா - எச்சரீக்கை
பைவைத்துறு நாகம்பட நடித்தாய் - எச்சரீக்கை
4. ஆண்டாளணி மாலையுகந் தணிந்தாய் - எச்சரீக்கை
பூண்டோய்முலை மகண்பார்புற வைத்தாய் - எச்சரீக்கை

5. செங்கண்ணர வணையிற்றுயில் கொள்வாய் - எச்சரீக்கை

கங்கம்மொரு கையேந்திய தலைவா - எச்சரீக்கை

6. புல்லாங்குழ லூதிவரு புனிதா - எச்சரீக்கை

முல்லைநில முதல்வாசெங்கண் முராரீ - எச்சரீக்கை

## பராக்கு

1. திருமா லிருஞ் சோலைத் தேவே - பராக்கு

திருவேங் கடம்பிரியாச் செம்மால் - பராக்கு

2. மதுரா புரிக்கரசே வள்ளால் - பராக்கு

துவாராபுரி யாண்ட தூயா - பராக்கு

3. பிருந்தா வனவழகா பிரானே - பராக்கு

வருந்தா வணமருளு மாதி - பராக்கு

4. கச்சி வரதப்பா கண்ணா - பராக்கு

நச்சி யுறிதிருடா நம்பீ - பராக்கு

5. வண்ணை மகிழ்ந்துறையும் வரதா - பராக்கு

நண்ணிப் பொன்னாலை நயந்தாய் - பராக்கு

6. கொக்கூர்ப் புதுக்கோயிற் கோவே - பராக்கு

இக்கு வேட்கத்தா ஈசா - பராக்கு

## லாலி

1. லாலீ லாலீ லாலீ லாலீ லாலீ

கோபியர் காதல் கொண்டு களித்தாய் - லாலி

2. நல்லோர் வாழ நண்ணிணை ஞாலம் - லாலி

பொல்லார் பொன்றப் புணர்ப்புகள் செய்தாய் - லாலி

3. முரளீ தரனே முராரி லாலி - லாலி

அரவ மீதே அறிதுயில் கொள்வாய் - லாலி

4. சங்கொரு கையாய் சாரங்க வில்லாய் - லாலி
பொங்கு பாற்கடற் புத்தமு தானாய் - லாலி
5. ஆயர் பாடியில் ஆடல் புரிந்தாய் - லாலி
நேயங் கொண்டு நேர்வார்க் கருள்வாய் - லாலி
6. கொக்கூரப் புன்னைக் கீழமர் கோவே - லாலி
சக்கர தாரி சாந்த மூர்த்தி - லாலி

## மங்களம்

1. மங்களம் மங்களம் மங்களம் சய சய
மங்களம் மங்களம் மங்களம் .
2. வைய முற்று மிசை பரம்பும் வள்ளலுக்கு - மங்களம்
கையிற் சங்கு கொண்டிலங்கு கடவுளுக்கும் - மங்களம்
3. பஞ்சவர்க்குத் தூதுசென்ற பண்ணவற்கு - மங்களம்
தஞ்சுதங்கு பாந்தளாடு நம்மிறைக்கு - மங்களம்
4. உரலிலேறி வெண்ணெயுண்டவுத்தமற்கு - மங்களம்
அரவு பாய லாயுறங்கு மாண்டகைக்கு - மங்களம்
5. புதிய கோயிற் புன்னைநீழற் கோவலற்கு - மங்களம்
நிதிய நல்கு மலர்மகட்கு நிலமகட்கும் - மங்களம்
6. மங்களம் மங்களம் மங்களம் சயசய
மங்களம் மங்களம் மங்களம்

திருச்சிற்றம்பலம்

# கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி

# பஞ்சகம்

## எழு சீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

அன்னியா யல்லல் கெடுத்தெனைத் தூக்கி யணைத்தருள் புரிதருமமுதே
மன்னியென் சிந்தை மலர்ந்திட வூறு மானந்த மாபெருங்கடலே
பன்னி யுன் னாமம் பயின்றனன் நாளும் படுதுய ரெனக்கினி யுண்டோ
கன்னலே தேனே கனியிடைச் சுவையே கலந்துளங் கரைபொரு நிறைவே. 1

நிறைந்துல கெங்கு மாயவை யல்ல யாயுடை னாயிரு மாதீ
மறைந்தென துள்ளே மற்று நான் செய்யுந் துரிசுகட் குடனுமாய் நின்றாய்
நிறைந்திரு மன்னை இருவிடையுள்ள மொருக்கியே யோகிசெய் திருந்தேன்
பிறந்தபின் மண்ணில் மறந்தன னந்தோ மனநிறை வாகிய வமுதே 2

அமுதமே தேனே யானந்த வாரியறுமுக முடைய வெம் மண்ணா
எமனுடைத் தூத ரென்னைவந் தமர்போ திணையுறு முணர்வு தந்தருள்வாய்
அமைதியென் னுள்ள மடைதர வார்வ முன்றனக் காக்கினே னையா
உமைதரு பாலா வொளிவிடு வேலாவோ மெனு மொருதனிப் பொருளே 3

பொருதுசூர் மாய்த்துப் புணர்மூலைத் தெய்வ யானையைப் பொருந்திடு மார்பா
பொருகடன் மீது பரிதிகண் டாங்கு மயின்மிசைத் தோன்றிடு மொளியே
மருவுமென் சித்த மென்றுநீங் காது மற்று நான் புரிவன் வறிவாய்
இருவினை நீக்கியெனக்கருள் செய்யும் வடிநெடு வேல்முருகேசா 4

முருகனே கொக்கூர் முதல்வனே வேத மோலமிட் டின்ன முங் காண
மருவிடு மன்ப ருளம்பிரி யாத மைந்தனே மலைமகள் குமரா
உரனுடையைவரெனையடர்த் தென்னைத் தம்வச மாக்கின ரகுதோ
ஒருமையினைந்து மொருங்கிட வருள்வா யுலகவர்க் கண்ணையேயினையாய் 5

திருச்சிற்றம்பலம்

## காப்பு

குன்றடு வேற்கைக் கொக்குவிற் கோமான் குமரசீர் குறைவறப் பேச
இன்றமிழ் தருவா யீசனே யென்னை யாளுடையைங்கரமுதலே
நன்றுறு மான்பன்னறுஞ் சுவைத்தேனே நலமலர் வாசம்போ லெங்கும்
ஒன்றிடும்ம் பல் முகமுடை யென்றனக நிறை யிருஞ்சுடர் குன்றே.

# சிவபெருமான் மும்மணிக்கோவை

திருச்சிற்றம்பலம்

மெய் மயிர் பொடிப்ப மேனி விதிர்ப்ப
கைதலை ஏற கண்மழை சொரிய
பொய்மை தவிர்த்துப் போதமிக் கேற
உள்ளம் வெதும்ப உமாசுதன் கணாதீபன்
வள்ளல் பதமலர் வணங்கி உரைப்பாம்
பஞ்சப் புலனும் பரப்பற வேண்டி
செஞ்சடைக் கடவுள் சீர்த்தி
சாயா அன்பினை நாடொறும் வளர்த்தே 1

வளர்கதும் பத்தர்கள் வானம்பொழிக
துளங்கிலாத் தூய்மை பெறுக - வளஞ்சிறந்து
மன்னுயி ரெல்லாம் மகிதவத்து மாறின்றி
துன்னுக தொண்டாற்றி நின்று 2

நின்று தொண்டாற்றும் கொடியோன் முதலா மமரரெலாம்
துன்றிய தம்பதந் தாவிலா தென்றுந் தழைத்திடவே
மன்றினில் நின்று மடவரல்காண நடம்புரியும்
குன்றுடை வில்லியைக் கூட்ட நா(ழும் வழுத்துவதே. 3

வழுத்துவார்க் கென்று மெளியன்னாயினும்
வழுதாதார்தம் கனவிலு மில்லான்
அன்பர்கெனிலன் ஆனந்த வடிவினன்
கல்லாலெறிந்த சாக்கியர்க் கருளினன்
மலர் வாளி தொடுத்த மன்மதற்காய்ந்தனன்
தாதையைத் தடிந்த சண்டிக் கருளினன்
தணிவேள்வி புரிந்த தக்கண அழித்தான்
பிள்ளையை அறுத்த வள்ளல் சிறுத்தொண்டர்க் கருளினன்
அவன்செயல் இதுவென்பர் பெரியோர்
அவனடிக் கன்பு பூண்டு வாழ்வரே. 4

வாழ்க்கை இதுவென்று மாழ்கும் மடநெஞ் சே
வாழ்க்கை இதுவன்று மாநிலத்தில் - வாழ்க்கைதான்
தெவ்வொன்று மில்லாச் சிவனார் திருவாகும்
அவ்வாழ்வே வாழ்வென் றறி. 5

அறிவொன்று மின்றி அங்குமிங்குமோடி அலைந்திடாமல்
தறியொன்று மாபோ லிருந்து மனமொன்றிச் சார்ந்து கின்றால்
பிறிவின்றி நெஞ்சில் பெரும்போக மாய்வினை பிஞ்ஞகனே
குறியொன்று நல்ல குழுவாகித் தன்னடி கூட்டிடுமே. 6

கூட்டும் பிறவியில் கொன்றையந் தாரான்
வாட்டும் மலத்தைப் போக மருத்தி
இருவினை ஒத்து மலம்வலி அழிய
அருட்சத்தி படியும் அணையுங்குரவனாய்
அருட்பார்வை நல்கி னரிக்கும் பழவினை
நல்லுப தேசம் தடுக்கும் வருவினை
ஐந்தெழுத் தோதிச் சீடன்
நந்துத லில்லா நற்பதம் பெறுவனே. 7

பெற்ற பிறவிப் பெருங்கடலி னுட்பட்டு
பற்றுக்கோ டின்றிப் பதைக்கின்றேன் - நற்றவத்தோர்
போற்றும் பஞ்சாட்சரமாம் புணையெனக்குத் தந்தருள் வாய்
சாற்றியே நான்கரையில் சார. 8

சாரும்பொருளென்றுஞ் சங்கரனே என்று சலிப்பின்றி
ஓடும் பெரியார்தம் உள்ளத்தி லின்பமா யூறியிடும்
தேரு முணர்வுடையோர் அன்பிற் பிணிக்கத் திடமாக
வாருங் கருணை பொழிவு முமைகோன் மலர்ப் பதமே. 9

மலர்ப்பத மொன்றே என்று முறுதி
கலக்கந் தவிர்க்குங் காதல் பெருக்கும்
மலக்கொடும் பிணியை மாற்றும் மருந்து
நினைப்பவர் மனத்தில் நிலவும் விருந்து

முனைப்பொடு முன்னின் முளையா முழுச் சுடர்
அனைத்திலுஞ் செறிந்த ஆதி பராபரை
குருவடி வாகி வந்து
குருவே றறுக்குங் கழறரும் பொருளே. 10

பொருளே தமியேன் புகலிடமே புந்தி
மருள்தீர்மனை குருவாம் - அருளே
அணிபொழில் சூழ் தில்லை அமுதே அடியேன்
பிணி நீக்கிப் பேறருள்வ தென்று 11

என்று மெமையாளுடைய இறைவ னுமைநடுங்க
குன்றை எடுத்த அரக்கனுடல் தெரிதரவே
அன்றி முழுவிரல் வைத்தா னலறி இசைபயில்
வென்றி வரம்ப வாளொடு நாளுங் கொடுத்தனனே. 12

கொடுப்பனடியவர்க்குக் குறுகாப் பெரு நெறி
கடுத்ததும்பிய கண்டன் கண்ணுதல்
மாலயன் முதல் வானுளார் தமக்கு
சாலு மவர்பதம் தருவன் தற்பரன்
ஏலுமீங்கினவ நிலையில
காலு நின்பதத் தன்பொன்றே வேண்டுமே. 13

வேண்டுவ தொன்று மிலையீங் கெனக் கொன்றும்
தாண்டவஞ் செய்பெருந் தாதையே - ஆண்டநின்
தாழினைக் கன்பொன்றே வேண்டுவது தாதையே
ஆழ்விலா இன்ப முற 14

இன்பந் தருவாய் எழு பிறப்பும் முனக் காட் செய்கின்றேன்
அன்பில் விளைந்த அமுதே அரசே அருமருந்தே
துன்பங்களைந்து துகளறுத் தென்னைச் சுடர்க்கொழுந்தே
என்புக் கனிந்திட ஈர்த்துன் னடிக்கீ ழிருந்துவையே. 15

அடிக்கீ ழிருந்துவா யடியருடன் கூட்டி
படிதா னில்லாப் பரிவுனக் கருளி
சங்கர சம்பு சதாசிவ சரணம்

கொங்குசேர் கொன்றை கூவினம் மத்தம்
திங்கள் தாங்கிய திருமுடி சரணம்
நங்கன் தீவினை நீக்கி நிறைவாய்
எங்கு மாகிய இறைவ
சரணம் சரணம் சிவனடி சரணம் 16

சரவணன் றடைந்திருஞ் சால்புடைய சான்மேர்
மரணம் பிறப்பில் மறித்துங் - கரணங்கள்
செல்லா வகை நிறுத்திச் சேணொன்ற வைத்து கந்த
நல்லோக்தம் நல்லுறவு நன்று 17

நன்றுறினுந் தீதே உறினும் வனத்து நிலையினர்
இன்றெமை ஆளா உடையர் அவர்க்கே பணிசெய்குவோம்
குன்றை வளைத்த குழகன் அவரிடம் கொண்டு நின்றான்
துன்று பிறவித் தொடக்கற வாய்த்த பரிசிதுவே. 18

பரிசிது என்றே பண்பொடு பிறவித்
தூரிசற என்றும் துணைப்பதந் தொழுதேன்
அந்தமி லாத அறிவே போற்றி
பந்த மகற்றும் பரிவே போற்றி
சுந்தர மான சோதி போற்றி
நந்துறீ லில்லா நம்ப போற்றி
இந்துசேகர இறைவ போற்றி
உண்மை அறிவானந்த ஒருவ போற்றி
வண்மை நிறைந்த வள்ளல்
தண்ணளி போற்றி தயாபர போற்றி 19

போற்றுகர்க்குப் போகம் புணர்த்தினான் போதமிகத்
தேற்றிநர்க்கு ஞானந் தெருட்டியே - ஆற்றலுறத்
தள்ளற் கரிய தனதுருவைத் தான்கொடுத்தான்
எள்ளற் கரிய இறை. 20

இறைவனாய் யார்க்கும் எழுதரிய மூர்த்தி அலந்தவர்க்குத்
துறைவானய்த் துன்னி அவர்கள் துயரைத் துரந்திடுவான்
அறவனாய் நீதி நிலவ அறம்பல ஆக்கியிட்டான்
நிறைவனாய் அண்ட முதலெங்கும் நீடி நிறைந்தனனே 21

நிறைந்த பூரணம் நீடி மன்னுக
குறைவிலா நிறைவு கோதிலா அமுது
அதுவும் பூரணம் இதுவும் பூரணம்
குறையேது மில்லை நாமும் பூரணம்
ஒருபொல்லாப்பு மில்லை என்றனன் ஆசான்
அது என்று முள்ளது நாமுமென்று முள்ளோம்
பூரணத் துதித்தது பூரணம்
உண்மை இது உணர்ந்தே பூரணமாவோமே. 22

பூரணமாய் நின்ற புண்ணியனைப் போதமாம்
ஆரணமுந் தேடி இளைக் கின்ற - ஆரணங்கு
பாதியான் பண்ணவன் பாவலர் பாவிலுறை
நீதியான் என்நெஞ்சத்தான் 23

நெஞ்சே கொடியை நினையாய அரனைத் திணைப்பொழுதும்
துஞ்சா திரவும் பகலு மலைந்து துயருறுவாய்
பஞ்சே ரடியா ளிடப் பாகர் பாதம் பணிந்திடுவாய்
தஞ்சே அடைந்து சரணிரண்டும் சார்த லெளிதாமே. 24

எளிய னடியவர்க் கென்றுமம் பலவன்
ஆயினு மரிய னயன்முதற் றேவர்க்கு
வெல்க அவனடி வேத வாய்மையன்
தேவரு மறியாச் சிவனடி வெல்க
மூவரு மறியா மூர்த்தி வெல்க
யாவரும் பெறவுறும் ஈசன் வெல்க
பெண்ணா ணலியெனும் பெற்றியன் வெல்க
மண்ணவ ரறியா மாமணி வெல்க
கண்ணினின் மணியாங் கருத்தன்
வெல்க வெல்க வேதியன் வெல்கவே. 25

வேதியனே விண்ணவனே வேறில்லா மாதுமையோர்
பாதியனே பாதம் பணிவார்தம் - சோதியனே
முப்புரங்கள் வேவ முறுவலித்த முக்கண்ணா
இப்பிறவி வேண்டேனினி 26

இனியிந்த வாழ்விற் பயனிலை எந்தாய் இது கழிய
உனையுறு முள்ள முதலிடல் வேண்டு முமை கணவா
பிணையொன்று விட்டாலதுபின்ன செய்துவ தாரறிவார்
நனைமலர்க் கொன்றை நதிமதி சூடிய நாயகனே 27

நாயகன் வாழ்க நம்பன் வாழ்க
தாயனி தந்த தற்பரன் வாழ்க
பேயோடாடும் பிஞ்ஞகன் வாழ்க
குழகன் வாழ்க குருமணி வாழ்க
மழவிடை ஏறும் மைந்தன் வாழ்க
அழிவிலா ஆனந்த வாரி வாழ்க
திருவுடை நீறு சிறந்து வாழ்க
பொருவிலார் தொழுத்துப் பொலிந்து வாழ்க
நன்மணி அக்கொடு மடியார்
பொன்மழை பொழிய வாழ்க வாழ்கவே. 28

வாழ்வுதரு மெய்யடியார் கூட்டத்தில் நாயேனை
தாழ்வின்றிக் கூட்டாயோ சங்கரா - மாழ்கின்றேன்
தேவே செழுசுடரே தேனா ரமுதமே
கோவே எனையேன்று கொண்டு 29

கொள்ளேன் பிறதெய்வம் உன்னையல் லாலன்று மிவ்வுலகில்
நள்ளேன் நினதடி யாரொடல் லாலெங்கள் நாயகனே
கள்ளார் மலர்க்கொன்றை கங்கை மதிச்சடைக் கண்ணுதல்
விள்ளா அடியர்தம் மெய்ப்பொரு ளாகிய மெய்யவனே. 30

திருச்சிற்றம்பலம்

# அடியார் கூட்டம்

திருச்சிற்றம்பலம்

அடைந்துநின் றன்பா லடியே பொருளென ஆனந்தித்துத்
தொடர்ந்த துரிசறத் தோகையர் மாயைத் தொடக்கறவே
படிந்த மனத்தொடும் படிமேற் பரவும் பழவடியார்
மிடைந்த பெருங்கூட்டம் மேவுல தென்றென் மிடைகெடவே. 1

மிடைகெட மீளாநெறி சென்று மேன்மை நிலையுறலாம்
துடியிடைத் தூமொழித் தையலர் பாகர் துணைப் பதங்கள்
முடியிடைத் தாங்கிய மூதறி வானரைக் கூடிநின்று
படியில் பணியவர்க் கேசெயப் பந்த மறுந்திடுமே. 2

பந்த மறுத்தவர் பாரினிற் பாடலொ டாடலருள்
சிந்தையற் சீரியர் வாழ்க்கைவளர் ஈசனார் சேவடியே
அந்தம் வாத வரும்பொரு ளென்ன வகத்துவந்த
முந்தைய ரோடு முயங்கிடில் மேனிலை முற்றிடுமே. 3

முற்றிய கேள்வியில் மூதறி வாளர் முழுத்தொழும்பு
பற்றிய நெஞ்சினர் பாவையநல் லாரொடு பங்கினர்தம்
நற்கழல் பேணிய நாவினர் நன்மையர் நல்லுறவு
பெற்றிடல் வேண்டும் பிறையணி வேணியா பிஞ்ஞகனே. 4

பிறையணி பிஞ்ஞகன் பகர்பல காலும் பிதற்றி நிற்பார்
நிறைதரு சிந்தையர் நீறன்மேனியர் நேர்மையினார்
மறைபயில் நாவினர் மாலொடு நான்முகன் தாம் வணங்கும்
குறைவில் குணத்தரைக் கூடுவதென்று வேலயத்தே. 5

குவலயம் வானவர் கும்பிடுங் கோதில் குணத்தினர்கள்
அவல மறுப்பவ ரானந்த வாரி யழுந்திடுவார்
கவலை கெடநின்று காயத்து வாழ்வு கரிசறுத்தார்
இவர்க ளெமையென்று மானா வுடைய விறையவமே 6

இறைபோது மீசனடிமற வாத வியல் பினர்கள்
நிறைபோது நீர்கொண்டு நின்மலற் காட்டு நியதியில்
குறையாத கோவண வாடையர் ஊரிடு பிச்சையுண்பார்
நறைசேரு நாண்மலர்ப் பாதங்கள் தந்தெமை யாள்பவரே. 7

ஆளா வுடைய வடியர் பதங்க ளணுகலின்றி
கேளா மனைமக்கள் கீழ்மைகள் செய்யுங் கிறியிற் பட்டு
மாளா நரசிடை மாண்டு மடிய விரைந்து நின்றேன்
கோளா யினநீக்கி குற்றமிலாரொடுங் கூடுவனே. 8

கூடிய வன்பினிற் கும்பிடு கொள்கையர் கூடுவதும்
நீடிய தொல்புகழ் நேயர்தங் கூட்டம் நிறைந்தவுள்ளம்
தேடிய செல்வமுந் தேவர் பிரானருளாகுஞ்செல்வம்
நாடி யவரடிக் கன்பு செய வின்பம் நண்ணிடுமே. 9

நண்ணுமில் வாழ்க்கை நல்லடி யாரை நயர்திடவே
திண்ண மவருற வின்பந் தினைத்தல் தினந்தினமும்
மண்ணிற் பிறந்தவர் கல்லா விது பெற லாவதன்று
நண்ணி யவரடிக் கன்பா யடைதல் நம்கடனே. 10

திருச்சிற்றம்பலம்

# நெஞ்சை நோக்கி

திருச்சிற்றம்பலம்

எம்பி மறைந்தான் எனைப்பலர் கூடிப் பிரிந்து சென்றார்
இம்பர் மனைவாழ்க்கை இனிதெனக் கொள்வதும் என்கொல் நெஞ்சே
தும்பி முகனை தொழாதுவீண் காலம் கழிப்பதென்னே
தம்பியும் வாரான் தரணியில் தஞ்சம் விநாயகனே 1

தயாபரன் தாரணி தண்ணளி கொண்டு தரித்திடுவான்
பெய்யுமழை என்னப் பெரிதவன் காட்டிடும் பெய்தலொட்டான்
நயமுற நம்மை நல்வழி காட்டும் நடையிதுவே
பயன்பெற லாமென்றும் பண்ணவன் பாதம் பணி நெஞ்சமே. 2

அமைதி யுறுக மனமே அரனா ரடியிணைக்கீழ்
உமது செயலு முளவோ உலகெலா மீன்றளித்த
உமையொரு பாகனே உற்ற துணையாம் உறுதிகொள்வாய்
நமையவ னாண்டு நலந்தரும் நண்ணுக நாதனையே 3

தோற்ற முளதேல் மரணமு முண்டெனத் தொல்லுலகில்
சாற்றினன் சுந்தரன் சாந்தம் பொறுமை கடைப்பிடிப்போம்
ஆற்றுவ மான பணிக ளரனார்க்கே ஆணவம் போம்
சாற்றும் பிறவி வெயிலுக்குத் தண்ணிழ லாம்பதியே. 4

உலக மொருபுறம் போகட்டுன் வேலையைப் பார்மனமே
அலகில் புகழுடை அண்ணல்தான் சிந்தித்த லுன்கருமம்
பலபல சிந்தித்துப் பந்த முறவேண்டா பாழ்மனமே
கலமல தில்லை யெனவே நவிற்றுதி நன்மனமே 5

# திருமுறை வணக்கம்

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் சம்பந்த னின்றமிழி னிசைபோற்றி
உம்பர்நிலை யரசருளு முயர்தமிழி னுரைபோற்றி
நம்பியா ரூரர்நவில் நற்றமிழின் னலம் போற்றி
அம்பரம ராளுடைய வடிகளருட் டமிழ் போற்றி 1

திருவிசைப்பாத் திருப்பல்லாண்டிசை கேட்கு மிரு செவிகள்
திருமூலர் மந்திரத்தின் செவிக்கு காத்தித் தித்து
செருநிலையோர் காரைக்காற் பேய்மொழி தனைவிருந்து
அருண் மொழித்தே வருள்மொழிகள் சாந்தநிலை தரவருவ. 2

சம்பந்தர் தாமளித்தார் தாவில் முதல் மூன்றுமுறை
அம்பந்த மில்லாத வரசுநா லைந்தாறு
நம்புதமிழ் முறையேழு நம்பியா ரூரரிறை
தம்பதமே தருமெட்டுத் தந்தார்மணி வாசகனார் 3

திருமா ளிகைத்தேவர் சேந்தனார் கருவூர்த்தே
பெருநம்பி காடவர்கோன் பிறங்குகண்ட ராதித்தர்
திருவாலி யமுதனார் செய்யவே ணாட்டடிகள்
புருடோத் தமர்சேதி ராயரொன்பான் முறை மொழிந்தார் 4

திருமூலர் பத்துத் திருவால வாயுடையார்
மருவுகா ரைக்காற்பே யையடிகள் காடவர்கோன்
சேரமான் நற்கீரர் கல்லாட தேவர்
பரணரொடு கபிலதேவர் விளம்பெருமா னடிகளே 5

அதிரா வடிகளே பட்டினத்தார் நம்பியாண்டார்
ஓதியவர் பன்னிருபேர் பதினோராந் திருமுறையை
நீதிநெறி வழுவாத மந்திரியார் பன்னிரண்டாம்
ஆசியார் திருமுறையை யருள்மொழித்தே வருளினரே.

திருச்சிற்றம்பலம்

# சுதந்திரம் பெறத் தகுந்த வழி

இன்னாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பென்றே - முன்னம்
மொழிந்தான் முதுபுலவோன் மற்றதனைச் செய்யார்
இழிந்தா ரெனவே இயம்பு. 1

இன்னாசெய் தாரை ஒறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடலென்றே - பின்னும்
பேசினா னத்தமிழன் பேசுங் குறி நிற்கக்
கூசி டிற்கூடுங் குறை 2

கோவலனைக் காவலர்கள் கொன்றா ரெனக்கேட்ட
காவல னாந்தமிழ் மாறனும் - பூவுலகில்
தன்னாவி நீத்தானே தாவிலான் கண்டீர்
மன்னுயிரைத் தன்னுயி ரென்று. 3

புத்தன் மகான் காந்தி போதித்த பொன் மொழிகள்
இத்தரையி லென்று யேற்றெழுக - வித்தகமாய்
பெறலாந் தமிழீழம் பேச்சில்லை யன்பின்
நெறியாகும் மற்றையது நேர்ந்து 4

பகைவரையும் நேசியெனப் பாரில் மொழிந்து சென்றான்
பகையில்லா நாதன் பண்புடைய - தகைசால்
யேசுக் கிறிஸ்துவும் யேகாவா பாதத்தில்
பேசிப் பரிந்தான் பெரிது. 5

சேர இருக்குஞ் சிறந்த இலக்கெனவே
நேரும் வழியும் நிறைவாகிட்ட - பாரில்
தூய்தாக வேண்டுமெனக் கொண்டானே காந்தி
ஏதமிலாத் தன்மை இது. 6

உல்லாச வாழ்க்கை அவன்கொண்ட தில்லை
பல்லைப் பறிகொடுத்தான் பண்புடையான் - கல்
ஏழையென வாழ்ந்தான் எங்கு மிரந்தேற்றான்
கோழை யலனென்றே கொள். 7

எத்தனை அப்பாவி ஏழைகண் ணீர்வடிக்க
கத்தி முனையிற் கனகொள்ளை - இத்தனையும்
ஏற்குமோ சொல்லாய் இதுதான் தமிழ்ப் பண்போ
தேற்ற முறவே தெளி 8

தமிழனாய் வாழாது தான்தோன்றி யானால்
தமிழீழ மென்றுமே இல்லை - தமிழீழம்
தானே வருமாலோ தக்க நெறி நின்றால்
தேனான வாழ்வுந் தரும். 9

நேர்நின்று போர்செய்து மாண்டான் தமிழனந்நாள்
பாரிற பதுங்கி அறிந்ததில்லை - ஓர்மம்
உறைப்பவே நின்றெதிர்த்தான் ஓடி ஒழியான்
சிறப்புற வாழ்ந்தனனேயத் தேர் 10

வள்ளுவன்றன் வார்த்தை வழிவாழ்ந்தால் தப்பாது
தெள்ளு தமிழீழஞ் சேர்ந்திடுமே - கொள்ளை
கொலை களவு காமங் குடிகெடுக்குங் கொள்கை
நிலைநிற்க நேர்மை நெறி 11

அடம்பன் கொடியுந் திரண்டால் மிடுக்காம்
புடம்போட்ட தங்கம் பொலிந்து - திடம்படவே
பொங்கி மிளிர்வதுபோல் பொய்வாழ்வு நீக்கியே
மங்காது வாழ மதி. 12

பெகின் செய்படு கொலை பேருலகங் கண்டு
திகில்கொண்டு சேர்ந்தே எவரும் - நகுந்தன்மை
நல்லதொரு பாடம் நமக்குமதுவே யாகும்
பல்லுலகும் பேசும் பரிந்து. 13

பேருல்லாச மொன்றோ பெருத்தவிஸ் ரேலியரே
கோரக் குரல்கொண்டு கோட்டமின்றி - கோரிநின்றார்
ஈரமில்லா நெஞ்சத் திஸ்ரேலிய அரசைப்
பாராளவேண்டாநீ என்று. 14

என்ன நடந்தாலும் எங்கட்கும் எட்டாத
பன்னந் கரியதொரு மாசத்தி - தன்னதொழில்
தானே நடத்துவது தகவாய் வெளியாச்சு
காமே னிதற்கு கலிவு. 15

வேண்டாம் பகைமையொடு வேண்டாத சொற்போக்கன்
தூண்டாத மேன்மைசேர் தூய்த்தமிழா - ஈண்டுலகில்
எல்லோரு மின்புற் றிருக்க நிமிர்ந்திடுவாய்
வல்லாரு முன்றன் வசம். 16

ஐயகே வீழத்துத் தமிழர்நிலை பரிதாபம்
விருகின்றார் கொள்ளைக்குங் கொலைக்கு மிடையொரு புறத்தே
வெய்ய வர சாங்கப் படைவேறுவதை செய்கின்றார்
உய்யுநெறி யறியாதே உலகின்றா ருத்தமனே. 17

தெருவிலே போனாலோ தீயவர்கள் பட்டாளம்
உருவிலே யெமனாகி யுடைக்கின்றார் தலைமண்டை
வெருவிவீட் டினுளிருந்தால் வீட்டினுள்ளும் புகுந்திடுவர்
தருதியே யுன்கருணை தாயாகித் தயா நிதியே 18

உன்கருணை யொன்றேதா னுற்றதுணை மற்றவர்க்கு
அன்புநிலை தெரியாதே அலைகின்றா ருரையையோ
வன்பு பல புரிகின்றார் மயங்கியே திரிகின்றார்
துன்பங்க டீர்த்திடுவாய் தூயபரத் தொல்பொருளே. 19

# மழைவேண்டல்

மழையாகிப் பொழிகின்றான் மணிமன்றில் மருவிநின்றே
இழையாருங் குழலுமையாள் இனிதுவந்து நனிகாண
பிழையாது பெரியநடம் பிறங்கியிடப் புரிந்துநின்றான்
விழைசெந்நெல் விரும்பு கன்னல் விளைந்துமிக்கு விருந்தாக 1

கருணைமழை பொழிகின்றான் கரியகண்டன் கதிர்மதியன்
கருமுகில்கள் கடல்முகந்து கணங்கொண்டு மழைபொழிய
சுருள்நீங்கி விரிசெந்நெல் சொகுசுநிறைந் தினிமைபெற
மருள் நீங்கி மருவுயிர்கள் மலர்ந்தினிதாய் வறுமைகெட 2

பல்லுயிரும் பதைப்பொடுங்கப் பரிந்தூட்டும் பெருமாட்டி
நல்லமனப் பெரியோர்கள் நனிவேண்ட நயந்துசொரி
எல்லையிலாக் கருணையென எழிலிமழை பொழிகின்ற
தொல்லுலகு துயர்நீங்கத் தொகுவயல்கள் மிகவிளைய 3

அண்ணவழ நிலை மனத்தில் ஆனந்தம் பெருகியெழ
கண்மலர் நீர் சொரிவதெனக் கனம் விண்டு மழைபொழிய
வண்மைநிறை வயல்வாவி வழிந்துநீர் நிலைநிற்க
மண்ணின் மேல் மலர்புனங்கள் மணிமணியாய் விளைகசெந்நெல் 4

பண்டைவினை பறிந்தொழிய பரமனையே பரவிநின்று
மண்டிநினை மனமுயர்ந்து மகிழ்சிறந்து மலர்வதுபோல்
விண்டுமுகில் மழைபொழிய விளைநிலங்கள் மிக நிறைந்து
தெண்டிரைநீர் நிலை நின்று திகழ நெல்லும் விளைந்திடுக. 5

ஐம்புலனு மகத்தடக்கி அகமலரி லுருவெழுதி
தம்பெருமான் றனை மனதில் ஒன்றியசிந் தையினராய்
தம்பமென இருந்துநினை தபோதனர்கள், தண்ணளிபோல்
கம்பமுகில் மழைபொழிக கவின்சிறந்து வயல்விளைக. 6

உலகம் வாழ ஒன்றி நின்று சிந்தை செய்யும் உண்மையாளர்
அலகில் யாவும் அன்பினாலே ஆளவல்ல அந்த ணாளர்
கலகங் கண்டு கண்ணினீரை காலுகின்ற தன்மை வானம்
பொல பொலன்று பெய்க பொய்கை வாவி தேங்கி மண்ணும் வாழ 7

# தனிப்பாடல்கள்

வெட்டினுங் கொத்தினும் வேறு வேறாக்கினும்
சுட்டெரித் திடினுஞ் சூழ்ச்சிகள் செய்யினும்
நட்டம தாடி நமக்கோ ருறுதுணை
உட்கிட மாட்டோ முறுதுய ரடையோம் 1

சட்டங்கள் போடிலென் சாவ வடிக்கிலென்
பட்டினி யாக்கிலென் பயம் பல காட்டிலென்
எட்டுணை யஞ்சோ மிறையடி பூண்டோம்
சிட்டனைச் சேர்ந்தோம் தேறினம் மனமே 2

நல்ல அமைதி நனி தேங்க நம்முகத்தில்
பல்கும் பரிவுநம் பார்வையிலே - மல்குக
பொல்லாங்கு நேர்ந்தாலும் பொங்குக ஆனந்தம்
நல்லாங்கு நாம்வாழ் வழி. 3

சுத்த சத்துவ குணத்தாய் தூய ஒளியை வளர்ப்பவனே
நெற்றி நாட்டத் தவநின்னை நீளநினைந்தோம் வெள்ளரியின்
முற்றிப் பழுத்த கனிகாம்பை விட்டு விலகு மதுபோல
அற்ற பிறப்பு மிறப்பிரண்டு மமர ராயனடைவோமே. 4

சூழ்வினை வசத்தாற் சுழன்று சுழன்று
வாழ்வினைப் போக்கும் வகையறியோமே
வாழ்விலுந் தாழ்விலும் வந்தருள் செய்யாய்
போழிளங் கண்ணிப் புரிசடையோனே. 5

தேடிய தேட்டங்கள் தேய்ந்தழிந்தாலும்
வாடி வதங்கா வாழ்வு தந் தருளாய்
கோடுத லில்லாக் குணப்பெருங் குன்றே
நாடிட நின்னை நயந்தருள் செய்யாய் 6

மக்களொடு தாரம் மற்றுள சுற்றம்
ஒக்க மடியினு முனை மற வாமை
தக்க வரமருள் சாந்த சொரூபனே
நக்க நம்பனே நாரியோர் பாகனே 7

ஆட்பல முண்டென ஆர்ப்பரிப் பார்கள்
கூட்டிக் கொலையொடு கொள்ளை செயிலென்
நாட்டம் மூன்றுடை நம்பனை நண்ணி
ஆட்படோம் யார்க்கு மரனுக்கு யடிமை 8

யாவரு மின்புற் றிருக்க வருளாய்
பாவலர் நாவலர் பாடும் பரனே
பூவலர் கொன்றையந் தாராய் புனிதா
கோவலர் கோல் செம்மை யுறவருள் செய்யாய் 9

ஆறிலுஞ் சாவுண்டு நூறிலுமுண்டு
தேறு மனமருள் செய்திடு தேவே
கூறுவோர் சிந்தை கோயில் கொண்டானே
ஈறிலி யெங்கு மியைந்து நின்றானே 10

பித்தம் பிடித்துப் பிதற்றி யலையாமல்
நித்தனே நின்னருள் வழியி.்.தென்றே
நித்தம் நினைக்கும் நிலையெமக் கருளாய்
சித்தந் திரியாத் திறம் பெறல் வேண்டும். 11

ஏழை யடியேங்க ளிந்நிலை நீங்க
ஏழைபங் காளனே யிரங்கிடல் வேண்டும்
நாளை வருவது நாமறி யோமே
பேழைச் சடைமுடிப் பிஞ்ஞக னேயோ 12

நால்வரைக் காணோம் நலிந்து மெலிகின்றோம்
நால்வர்க்கு நல்லருள் செய்திடுதி நாதா
கோல்வளை கூறு குணப்பெருங் குன்றே
ஏல்வகை எங்கட் கரணாதி நீயே 13

சாதல் பிறத்தல் சரதம் முலகில்
போதந் தருவாய் புண்ணிய மூர்த்தி
ஏதமுற் றடைந்தோ மின்றெமை யாள்வாய்
கோதகல் வண்ணங் குழகனே கூட்டாய் 14

உலகிடர் தீர உறுவன செய்யாய்
பலர்பதைக் கின்றார் பார்ப்பதுன் பரமே
குலவிடச் சாந்தி குறிப்பதுன் கடனே
நலம் விளை விப்பாய் நல்லருள் தாராய் 15

உன்னை மறவா ர்மெமக் கருளாய்
பொன்னை மணியைப் பூமியை வேண்டோம்
துன்னி யிடரலைக்கின்ற பொழுதில்
மன்னியுன்னடியே மதித்திடல் வேண்டும். 16

# குறட்பத்து

பித்துப் பிடித்தொருவன் பேசுவன கொண்டெவரும்
ஒத்துக் கொளாவுரை தானிது.

தீர்த்தன் றிருவடியைச் சிந்தை செய்தாற் றேனூறும்
வார்த்தை சொல்ல வாரா வகை 1

ஆனந்தம் பொங்கு மரிய நிலை யாரறிவார்
மோனந்தான் முற்றும் முதிர்ந்து 2

தேகம் மறந்துவிடும் தேடுவன மாய்ந்து விடும்
போகம் புணரும் புதிது. 3

நோய்நொடிகள் தாமில்லை நோதகவு தானில்லை
வாய்மையே யெஞ்சி நிற்கும் வாய்த்து 4

காண்பன யாவுங் கருதுவனவுங் கூட
மாண்பாகும் மன்னி மனத்து 5

தோயார் துயரங்கள் தூங்குவார் தூவதனில்
மாயா நிலைகூடும் மற்று 6

மக்கள் மனை சுற்றம் மாண்டாலு மேது மில்லைத்
துக்கந் தொலைந்தே விடும். 7

பகையில்லை நட்பில்லைப் பார்க்கி லுலகொன்று
நகையே நமக்கென்றும் நன்று 8

துள்ளிக் குதித்திடுவோஞ் சோபனங்கள் பேசிடுவோம்
எள்ளும் வகைதானிங் கேது. 9

தீமையும் நன்மையுந் தீமேனி யானவனே
வாய்மை மற்றீதன்றி யில். 10

## யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்

### பாடசாலைக் கீதம்

வாழ்க வாழ்க வளம்பெற வாழ்க
சேர வாரும் சோதரர் வாழ்க (வாழ்க)

பீடும் பெருமையும் பிறங்கு பாரம்பரியமும்
கூடும் சரஸ்வதி வித்தியாலயம் வாழ்க (வாழ்க)

முயற்சி திருவினையாக்கும் எனும் முது
உயர்ச்சி மொழி வழி யோங்கும் வித்தியாலயம் (வாழ்க)

உள்ளத்திலே நல்லொளி பெற வாழ்க
தெள்ளிய தாரகையாய் மிளிர்ந்தோங்க (வாழ்க)

சைவம் வாழச் செந்தமிழும் வாழமை
செம்மை நெறிதரு தீதில் வித்தியாலயம் (வாழ்க)

கலை விஞ்ஞானம் கவின்கலை ஆங்கிலம்
காட்டும் நெறி அறிந் தூட்டும் வித்தியாலயம் (வாழ்க)

செந்நெற்கழனி சூழ் நெய்தலு மாங்கே
நல்வித்தகார் நலி நானில மோங்க (வாழ்க)

# கொக்குவில் இந்துக் கல்லூரி

## கல்லூரிக் கீதம்

தெளித்தரு கலைபயில் பல மாணவர் தேர்
கொக்குவில் இந்துக் கல்லூரி
கொக்கூர்க்கு இந்துக் கல்லூரி நீ தீபம்
கிராமத்துக்கொண்மணி மகுடம்
நினதுயர் கலைமுறை நிதம் நிதம் பெற்றோம்
நினதருள் யாமினி மறவோம்.
நீயே வித்தையின் உறையுள் நினதே எங்களின் உயர்வு
நினதடி ஏத்துவோமே.
நினதருள் மிகுமொழி நமதே பொருளாம் நீ தரு ஞானம தீதம்
ஜெயஹோ ஜெயஹோ ஜெயஹோ
ஜெய ஜெய ஜெய ஜெயஹோ
நீ தரு ஞான மதீதம்.

அறிவுச் சுடர் கொண்டறம் பொருளின்பம்
தழுவும் வாழ்வினைத் தந்தாய்
கற்றன ஒழுகும் சீருறுவழி நீ
காட்டினை நீடுக எனவே
அற்புத நடமாடமலன் அடிமைமொடு வழிபடுவோம்
வழிமுறைமிளிர்க நின் நாமம்.
நினதருள் மிகுமொழி நமதே பொருளாம் நீ தருஞான மதீதம்
ஜெயஹோ ஜெயஹோ ஜெயஹோ
ஜெய ஜெய ஜெய ஜெயஹோ
நீதரு ஞான மதீதம்.

உள்ளத்துறுதி தருவாயுன்றன்
பாரம்பரியம் பேண
பூமியில் நீபெறு நல்லிசை மேலால்
பெருமிதம் மாணவர்க்கென்றும்
முயல்வோம் நீயுயர் வழிகள் முழுமனனொடு மகிழ்வாக
கொக்குவில் இந்து நமதே கொக்குவில் இந்து நமதே.
நினதருள் மிகுமொழி நமதே பொருளாம்
நீதரு ஞான மதீதம்
ஜெயஹோ ஜெயஹோ ஜெயஹோ
ஜெய ஜெய ஜெய ஜெயஹோ
நீதரு ஞான மதீதம்.

---

"உங்கள் பாடல்கள் வழக்கம் போலப் பக்திச் சுவை சொட்டு வனவாய்ச் சிந்தைக்கும் செவிக்கும் இனியவையாய் அமைந்துள்ளன. இவற்றை அழிந்து போக விடாமல் அச்சேற்றி நூலுருவிற் பாதுகாத்தல் வேண்டும்."

"தனக்குவமை யில்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது"

என்னும் அருமைத் திருக்குறளின் அறிவுரையை நடைமுறையிற் கடைப்பிடிப்பதற்கு எனக்கு இன்னும் மனப்பக்குவம் வரவில்லை. ஆயினும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் இறைவனைப் பற்றிச் சிந்திப்பதற்கு முயல்கின்றேன். நீங்கள் இடையிடையே யாத்து அனுப்பும் பக்திப் பாடல்களைச் செப்பஞ் செய்வதும் ஒரு வகையில் எனக்கு இன்பம் தருகின்றது. இவ்வாறு நானும் உள்ளங் கசிந்து இறைவனைப் பாட வேண்டுமென்றே விரும்புகின்றேன்.

அமரர் செ.வேலாயுதபிள்ளை
முன்னாள் பிரதான கல்வி அதிகாரி

"திருவருள் நிறைந்த அவர் இயற்றிய பாடல்களையெல்லாம் திரு.செ.வேலாயுதபிள்ளை அவர்கள் பார்த்துப் பாராட்டினார். அடியேனும் பார்த்துப் படித்துப் பேரானந்தமடைந்தேன். அவர் திருவருள் உள்நின்று உணர்த்தப் பாடியுள்ளார். அவை சிந்தாமணி விநாயகரின் திருவருளால் வெளிவந்துள்ளன. அப்பாடல்கள் அச்சு வடிவில் வெளிவருவது விநாயகருடைய திருவருளை எல்லோரும் பெற வழிகாட்டியாக இருக்கும்."


**முத்தமிழ் வித்தகர் அமரர் சி.மருதபிள்ளை**
**இளைப்பாறிய ஆசிரியர்.**

"அவர் பாடிய பாடல்கள் படிப்பவர், கேட்பவர் உள்ளங்களைப் பரவசப்படுத்தக்கூடியனவாய் இருக்கின்றன. ஊஞ்சலில் அமைந் திருக்கும் சந்தங்கள் மிகச் சிறந்தன. ஊஞ்சலை நன்கு இசையுடன் பாடக்கூடியவர்கள் பைரவி, நீலாம்பரி இராகங்களில் பாடினால் மிக உவப்பாக இருக்கும். அதேபோல் இரட்டை மணிமாலையைப் பாடுபவர் களும் முறையே வெண்பாக்களைச் சங்கராபரண இராகத்திலும் கட்டளைக் கலித்துறையை பைரவி இராகத்திலும் பாடினால் பாடுபவர் களைப் பரவசப்படுத்தும். நெக்கு உருகச் செய்யும்."

"சிந்தாமணி ஆலயத்தை வயல்களூடே அமைத்திருக்கும் கவிச் சித்திரமும் நாகேஸ்வரி ஆலயத்தைக் கொன்றை மர நிழலில் அமைத்திருக்கும் கவிச் சித்திரமும் எத்தகைய புலமை உடையோ ராலும் வியக்கத்தக்கது. பாடுவது பெருங் காரியமல்ல. பாடும் பாடல் களைத் தாமே இரசித்தும் உருகியும் கேட்போரையும் படிப்போரையும் பரவசப்படுத்தும் தன்மை ஆக்குவதுமே சிறந்தது."

**அமரர் ச.விசுவநாதர்**
**இளைப்பாறிய ஆசிரியர்,**
**அராலி.**

கல்லாப்பிழையும் கருதாப்பிழையுங் கசிந்துருகி
நில்லாப்பிழையும் நினையாப்பிழையும் நின்னஞ்செழுத்தை
சொல்லாப்பிழையுந் துதியாப்பிழையும் தொழாப்பிழையும்
எல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே.



தை
ம்



திருவருள்மிகு

சிந்தாமணி விநாயகர் திருக்கோவில்,

அராலி தெற்கு.

M.R.S. அராலி 0774080558